திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஆகஸ்ட் 2019 விலை ரூ.5/-



ஸ்ரீபிரதிவாதி
பயங்கரம் அண்ணன்
ஸ்வாமி திருநட்சத்திரம்

01-08-2019





22-06-2019 அன்று திருவேங்கடமுடையானை தரிசித்து, தி.தி.தே. பொறுப்பாளர்கள்குழுவின் புதிய தலைவராக பொறுப்பேற்ற திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள்.
அவருக்கு ஸ்வாமி சித்திரபடத்தை வழங்குகின்ற தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. அனில்குமார் சிங்கால் இ.ஆ.ப. அவர்கள்,
அன்றைய திருமலை இணைச்செயலாட்சித்தலைவர் திரு.கே.எஸ். சீனிவாசராஜு இ.ஆ.ப. அவர்கள் மற்றும்
அன்றைய திருப்பதி இணைச்செயலாட்சித்தலைவர் திரு. பி.லக்ஷ்மிகாந்தம் இ.ஆ.ப. அவர்கள்





திருவேங்கடமுடையானை தரிசித்த திரு. பி. பசந்த்குமார் இ.ஆ.ப. அவர்கள்,
இவர் திருமலை ஆலயத்தில் 04-07-2019 அன்று தி.தி. தேவஸ்தான திருமலை மற்றும் திருப்பதி இணைச்செயலாட்சித்
தலைவராக பொறுப்பேற்றார். இதனை முன்னிட்டு அவருக்கு ஸ்வாமி பிரசாதத்தை வழங்கும் தி.தி.தே அதிகாரிகள்



பணி இடமாற்றம் காரணமாகச் செல்லும் தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர்
(திருமலை) திரு.கே.எஸ். சீனிவாசராஜு இ.ஆ.ப. அவர்களுக்கு ஸ்வாமி
சித்திரபடத்தை வழங்கும் தி.தி.தே. ஊழியர்கள்(04-07-2019)



தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் (திருப்பதி)
திரு.பி. லக்ஷ்மி காந்தம் இ.ஆ.ப. அவர்களின் பணி நிறைவு
பிரிவு உபச்சார விழா (30-06-2019)

த$_4$ர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே
ஸமவேதா யுயுத்ஸவ: ।
மாமகா: பாண்ட$_3$வாச்சைவ
கிமகுர்வத ஸஞ்ஜய ॥



"ஸஞ்ஜயா! தர்ம பூமியான குருக்ஷேத்திரத்தில் ஒருங்கே கூடியிருந்தவர்களும், யுத்தம் செய்ய விரும்பியவர்களுமான என்னுடையவர்களும், பாண்டுவின் புதல்வர்களும் என்ன செய்தார்கள்?"

– *ஸ்ரீமத் பகவத் கீதை 1–1*



த்வத் ப்ரேயஸ: ச்ரவணயோ ரம்ருதாயமாநாம்
துல்யாம் த்வதீய மணிநூபுர சிஞ்ஜிதாநாம் ।
கோதே த்வமேவ ஜநநி த்வதபிஷ்டவார்ஹாம்
வாசம் ப்ரஸந்ந மதுராம் மம ஸம்விதேஹி ॥

தாயாகிய கோதைப்பிராட்டியே! உன் நாயகனுடைய திருச்செவிகளுக்கு அமுதம் போன்றதாய், உன்னுடையதான இரத்தினச் சிலம்புகளின் ஒலிகளுக்கு ஒத்ததாய், உன்னைத் துதிப்பதற்கு ஏற்றதாய், தெளிந்து இனியதாயுள்ள வாக்கை எனக்கு நீயே அளித்தருள வேண்டும்.

- கோதாஸ்துதி

# ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருஷம், ஆடி/ஆவணி மாதம், தக்ஷிணாயணம், க்ரீஷ்ம/வர்ஷருது, சகவருஷம், 1941, கலியுகாதி, 5120, ஆகஸ்ட் 2019

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 16 | வியா | அமா | பூச | வ்ய-சிரா க்ஷய திதி, புதன், வ.நி. கி.உதயம், குரு புஷ்ய யோகம், ஸ்ரீசக்ரத்தாழ்வார் திருநட்சத்திரம், பிரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமி திருநட்சத்திரம். |
| 2 | 17 | வெள்ளி | துவி | ஆயி | சந்திர தரிசனம். கடல் சீற்றம், ச்ராவண சுத்த. |
| 3 | 18 | சனி | திரு | மக/பூர | ஆடிப் பெருக்கு. ஆண்டாள் திருவாடிப்பூரம். புதன்-கடகம், திருமலையப்ப ஸ்வாமி புரிசைவாரி தோட்டத்தில் எழுந்தருளுதல். |
| 4 | 19 | ஞாயிறு | சது | உத் | நாக/மாத சதுர்த்தி, தூர்வா கணபதி விரதம். |
| 5 | 20 | திங்கள் | பஞ் | ஹஸ் | கருட பஞ்சமி, கரிநாள், தனிய நாள், ஸ்ரீகஷ்யப மகரிஷி ஜயந்தி, வால்மீகிபுரம் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பட்டாபிஷேக மஹோத்ஸவம் ஆரம்பம். |
| 6 | 21 | செவ் | சஷ் | சித் | சஷ்டி. ஸ்ரீ துளசிதாஸர் ஜயந்தி, கல்கி ஜயந்தி. |
| 7 | 22 | புதன் | சப் | சுவா | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி அஹோபில மடத்திற்கு எழுந்தருளுதல், வால்மீகிபுரம் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பட்டாபிஷேக மஹோத்ஸவம் நிறைவு. |
| 8 | 23 | வியா | அஷ் | விசா | மாத துர்காஷ்டமி, செவ்வாய், சிம்மம். |
| 9 | 24 | வெள்ளி | நவ | அனு | ஸ்ரீவரலக்ஷ்மி விரதம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் சன்னதியில் வரலக்ஷ்மி விரதம், மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா நினைவு நாள். |
| 10 | 25 | சனி | தச | கேட் | வைத்-சிரா., திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 11 | 26 | ஞாயிறு | ஏகா | மூல | புத்ரத ஏகாதசி, குரு வ.நி. |
| 12 | 27 | திங்கள் | துவா | பூரா | ஸோமப் பிரதோஷம், யுரேனஸ் வ.ஆ., நாராயணகிரியில் சத்ர ஸ்தாபனம், துளசி மஹாத்மியம், ஆஸ்தானம், கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி தெப்போத்ஸவம் ஆரம்பம். |
| 13 | 28 | செவ் | திர | உத்ரா | ஆளவந்தார் திருநட்சத்திரம், திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு. |
| 14 | 29 | புதன் | சசி | திவோ | ச்ரவணம், பௌர்ணமி-திரிதினஸ்ப்ருக், கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு. |
| 15 | 30 | வியா | பௌர் | திவோ | ருக் உபாகர்மா, யஜுர் உபாகர்மா, ஹயக்ரீவ ஜயந்தி, ராக்கி, ஸ்ரீவிகனச மாமுனி ஜயந்தி, இந்திய சுதந்திர தினம். |
| 16 | 31 | வெள்ளி | பிர | அவி | ச்ராவணபஹுள, சுக்ரன், சிம்மம், காயத்ரி ஜபம், திருமலையப்ப ஸ்வாமி ஸ்ரீவிகனசாசாரியார் சன்னதிக்கு எழுந்தருளுதல். |
| 17 | 32 | சனி | துவி | சத | சூரியன் சிம்மம், ப.1ம.02நி., விஷ்ணுபதி. |
| 18 | 1 | ஞாயிறு | திரு | பூரட் | வழக்குப் பதிவு செய்ய. |
| 19 | 2 | திங்கள் | சது | உத்ரட் | சங்கடஹர சதுர்த்தி-கரி நாள். |
| 20 | 3 | செவ் | பஞ் | ரேவ | தோட்டப் பயிர் செய்ய. |
| 21 | 4 | புதன் | சஷ் | அஸ் | விருத்தி திதி, புதன், கி.அஸ்தமனம், சஷ்டி, தாள்ளபாக்க ஸ்ரீகாமாக்ஷி தேவி சமேத ஸ்ரீசித்தேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 22 | 5 | வியா | சஷ் | பர | பூச்சிகொல்லிகள் தயாரிக்க. |
| 23 | 6 | வெள்ளி | சப் | கார் | கோகுலாஷ்டமி, ஸ்ரீகிருஷ்ணாஷ்டமி ஆஸ்தானம், காலாஷ்டமி, வாஸ்து மா.3.18-3.54. ஆவணி முழுக்கம் (ச்ராவண கர்ஜனை) கிருத்திகை, தாள்ளபாக்க ஸ்ரீகாமாக்ஷி தேவி சமேத ஸ்ரீசித்தேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு. |
| 24 | 7 | சனி | அஷ் | ரோகி | கண்ணன் திருநட்சத்திரம், திருமலையப்ப ஸ்வாமி சிக்யோத்ஸவம். |
| 25 | 8 | ஞாயிறு | நவ | மிரு | சாந்தி-பரிகார ஹோமங்கள் செய்ய, திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி சிக்யோத்ஸவம், கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 26 | 9 | திங்கள் | தச/ஏகா | திரு | அஜ ஏகாதசி, கரிநாள், க்ஷயதிதி, புதன் சிம்மம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி சிறிய வீதி சிக்யோத்ஸவம். |
| 27 | 10 | செவ் | துவா | புன | தோட்டம், சீர் செய்ய, வ்ய-சிரா ஆவணி உச்சம் ஆரம்பம். இ. 10ம.13நி, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பெரிய வீதி சிக்யோத்ஸவம். |
| 28 | 11 | புதன் | திர | பூச | பிரதோஷம், மாத சிவராத்ரி, கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு. |
| 29 | 12 | வியா | சசி | ஆயி | நடராஜர் அபிஷேகம். |
| 30 | 13 | வெள்ளி | அமா | மக | அமாவாசை. |
| 31 | 14 | சனி | பிர | பூர | சந்திர தரிசனம், பாத்ரபத சுத்த. |

# ஸப்தகிரி

சமயமாத இதழ்

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



ஆகஸ்ட் 2019 மலர் 50 இதழ் 03

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| ஸ்ரீஹயக்ரீவர் - திருமதி உமா ஹரிஹரன், கேரளா. | 7 |
| ஸ்ரீகிருஷ்ணரே (முழு)முதற்கடவுள் - திரு. ஆர். ரங்கராஜன், சேலம். | 9 |
| கல்கி அவதாரம் எங்கே! எப்போது! - திரு. எஸ். நடராஜன், உறையூர். | 12 |
| ஸ்ரீவரலக்ஷ்மி விரத மகிமை - திருமதி. டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி. | 15 |
| நந்தன வன சுந்தரி - திருநாங்கூர் ஜீ. ஸௌந்திரராஜன் பட்டாசாரி, புதுடில்லி. | 18 |
| சுடர் ஆழியும் பல்லாண்டே - திருமதி. டி.எஸ். ராஜலக்ஷ்மி, திருவனந்தபுரம். | 20 |
| திருவாய்மொழியில் பெரிய திருவடி - திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி. | 23 |
| சிறார் வாக்கு : ஸ்ரீராகவேந்திர ஸ்வாமி - செல்வன். சி.வாசுதேவா, திருப்பதி. | 26 |
| பச்சை தோரணம் : திருவேங்கடவன் தோட்டோத்ஸவம் -திரு. வேங்கடரமணா, திருப்பதி. | 31 |
| நமது திருக்கோயில் : ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர் -திருமதி. ஏ. அருணா, திருப்பதி. | 34 |
| ஆண்டாள் அவதரித்த ஆடிப்பூரம் -புலவர். க.சுகுமாரன், மன்னார்குடி. | 37 |
| ஆழ்வாராசாரியர்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் ஆளவந்தார் நம்மை ஆள வந்தார் - திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 38 |
| ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–துருவனின் வம்ச சரித்திரம் - டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர். | 41 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 43 |
| திருக்குறுந்தாண்டகத்தின் ஸாரம் - டாக்டர். கே.கே..ஏ. ரங்கராஜன் ஸ்வாமி, திருப்பதி. | 45 |
| 108 திவ்யதேச வைபவம் – திருவெள்ளக்குளம் - உருப்பட்டூர் ஸௌந்தரராஜன், சென்னை. | 47 |
| பகவத் கீதை–இளைய சமுதாயம் இளைஞர்களுக்குத் தேவையானது சாத்வீக சுகமே! - திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா. | 49 |
| ஆயுர்வேதம் – திப்பிலி - திருமதி. வி.உஷா, திருப்பதி. | 51 |
| 2019, ஆகஸ்ட மாத ராசி பலன் - திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர். | 53 |



சிறப்பு ஆசிரியர் :
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

பிரதான ஆசிரியர் :
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,

ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,

அச்சிடுபவர் :
**திரு.** R.V. **விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

ஓவியம் :
**திரு.** P.**சிவப்பிரஸாத் (ஓய்வு)**
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.org யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : ஸ்ரீபிரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமி (ஸ்ரீவேங்கடேச சுப்ரபாதம் அருளியவர்)

பின்னட்டை : ஸ்ரீநவநீதகிருஷ்ணன், திருமலை.

# திருமலையில் வனமேம்பாடு

*"பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி |*
*ததஹம் பக்த்யுபஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந: ||"*

எவன் பக்தியோடு இலை, மலர், பழம், நீர் முதலியவற்றை அர்ப்பணம் செய்கிறானோ, அந்த பக்தனின் காணிக்கையை பகவான் ஏற்றுக் கொள்கிறான். அறுசுவை உடைய உணவுகள் எவ்வளவோ இருந்தாலும் அவற்றை குறித்து கீதையில் பகவான் குறிப்பிடவில்லை. பத்ரம், புஷ்பம், பலம், தோயம் (இலை, மலர், பழம், நீர்) இவையாவும் இயற்கையாக தினமும் உதிப்பவைகளாகும். அப்பழுக்கற்ற சர்வஜீவ சஞ்சீவிகளாகும். நிரந்தரம் தன்னை தியாகம் செய்பவைகளாகும். இவற்றினை பின்பற்றியே மானிடரும் தியாகிகளாக வாழ வேண்டும் என எண்ணுகின்றனர். ஆனால் மகரிஷிகளோ மக்களிடமிருந்து சிறிது விலகி மலைக்குன்றுகளிலோ, அருவிகளின் அருகிலோ, பலவகையான மலர்கள் இருக்கக்கூடிய வனங்களிலோ, ஆசிரமங்களையும், வழிப்பாட்டு தலங்களையும் அமைத்து இனிமையாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்ந்து, மனதினை மாதவன் பால் செலுத்தி வந்தனர்.

ஊர், பேரற்ற பரமாத்மாவை ஒரு பெயரை வைத்து ஊரின் எல்லையில் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்யத் துவங்கிய நாள் முதல் மனிதன் மடங்களையும், ஆசிரமங்களையும் கட்டுவித்தான். திருநாமஜப, யாகங்களோடு மலர், பழம் போன்றவற்றால் ஆராதனைகளையும் செய்தான். அந்த திவ்ய தரிசனத்தில் மூழ்கி, "அபிஷேகப்ரிய சிவ:, அலங்காரப்ரிய விஷ்ணு:, நமஸ்காரப்ரிய பாநு:" என்று யாரை எப்படி வழிபடுதல் வேண்டும் என்பதனையும் பிற்கால சந்ததியினருக்கு விவரித்தான். அவ்வகையில் ஆலயங்களில் தெப்போத்ஸவம், புஷ்பயாகம் போன்ற உத்ஸவங்கள் நடைபெறுவது வழக்கமானது.

ஆனால் காலம் மாறியது. ஆடம்பரமும் பெருகியது. அன்பு குறைந்து ஆசை வளர்ந்தது. இதனால் மரம் செடிகொடிகள் அருகி, நீரும் குறைந்து, பூமியும் படிப்படியாக வளம் குன்றியது. மிகவும் அடர்ந்த காடுகள் இருந்தன என்பதனை இனிக் கதைகளில் மட்டுமே படிக்கும் சூழ்நிலை. இந்நிலை தொடர்ந்தால் சில ஆண்டுகளிலேயே நாடு பாலைவனமாகி விடும். பிரளயமே ஏற்படும் என்று சாத்திரங்கள் எச்சரிக்கின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானம் வனத்தை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் பல உத்ஸவங்களை நிகழ்த்துகின்றது. நந்தவன உத்ஸவம், வனபோஜன உத்ஸவம், பாரி வேட்டை உத்ஸவம், திவ்ய ராமம் போன்றவற்றை ஏற்படுத்தி இயற்கையைத் தனிச் சிறப்பாக புனரமைப்பதுடன் மட்டுமின்றி திருமலையில் பல இடங்களில் பல்வேறு வகையான மரங்களையும், நந்தவனங்களையும் அமைத்து பசுமையைப் பேணும் பல திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

நாம் நம் வாழ்வினை மீண்டும் பசுமையாகவும், தூய்மையாகவும் ஆக்கிக் கொள்ள, வன வளங்களை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம். முதலில் தங்கள் கிராமப்புற பகுதிகளில் உள்ள குறிப்பாக வழிபாட்டுத் தலங்களில் உள்ள மரங்களை பேணி காக்க முயற்சிப்போம். முடிந்தவரை வன மேம்பாடு என்பது அனைத்து உயிரினங்களுக்கும் உகந்தது என்பதை உணருவோம். அப்பொழுதுதான் மனிதனுக்கு பரமனடி கிடைக்கும். வனத்தை பாதுகாக்காத எந்த ஒரு நாட்டிலும் அமைதியும் ஆக்கமும் இராது என்பதை நினைவிற்கொள்வோம். நநந்தவனங்களை மேம்படுத்துவோம்.

மரம் வளர்ப்போம்! வனங்களைக் காப்போம்!!

# ஸ்ரீ ஹயக்ரீவர்



திருமதி உமா ஹரிஹரன், கேரளா

ஆவணி மாதம் பௌர்ணமி தினத்தில் வாசுதேவர் ஹயக்ரீவராக அவதரித்தார். இதனால் இந்தப் பௌர்ணமி வேதோபதேசத் துக்கு உகந்த நாளாகும். கலைகளை பூஜிக்கும் நாளாகும்.

*"ச்ராவண்யம் ச்ரவணே ஜாத: பூர்வம்*
*ஹயசிரோ ஹரி:*
*ஜகாத ஸாமவேதம் து ஸர்வ கல்மஷ நாசநம் |*
*ஸ்நாத்வா ஸம்பூஜயேத் தம்துசங்கசக்ர*
*கதாதரம் ||"*

பகவான் வாசுதேவர் குதிரையின் முகம் போன்ற முகத்துடன் ஆவணி மாதத்தில் திருவோண நட்சத்திரத்தில் ஹயக்ரீவராக அவதரித்தார். சாமவேதத்தை உபதேசித்தார். ஸநாநாதி நித்ய கர்மானுஷ்டானங்களைச் செய்து சங்கு, சக்கரகதையை தரித்தவரான எம்பெருமானை பூஜிக்க வேண்டும் என்பது பொருள்.

நாம் செய்யும் எல்லா வேலைகளும் தங்கு தடையின்றி நடக்க ஹயக்ரீவரை வணங்க வேண்டும். பஞ்சமுக அனுமனின் திருமுகத்தில் வலப்புறம் ஸ்ரீநரசிம்மரும், இடது புறத்தில் வராஹ மூர்த்தியும், பின் புறத்தில் கருட பகவானும், மேற்புறத்தில் ஹயக்ரீவரின் திருமுகமும், பிறரை நம்பால் இழுக்கும் வசீகர தன்மையை தருவார். இவரின் அருளால் எல்லாவற்றிலும் வெற்றி கிடைக்கும்.

*"ஹயக்ரீவ, ஹயக்ரீவ, ஹயக்ரீவேதியோ வதேத்*
*தஸ்ய நிஸ்ஸரதே வாணீஜஹ்நு கந்யா ப்ரவாஹவத்"*

"ஹயக்ரீவ" என்று மூன்று முறை சொல்பவர்களுக்கு, கங்கை நீர் பெருகி ஓடுவது போல தடங்கல் இல்லாமல் வாக்குகள் வரும். தன்னை நாடி வருபவர்களுக்கு கல்வி, தனம் முதலிய எல்லாவற்றையும் வாரி வழங்குவார் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவர். ஸ்ரீஹயக்ரீவ காயத்ரீயை தினமும் கூற வேண்டும்.

*"ஓம் தம் வாகீச்வராய வித்மஹே ஹயக்ரீவாய தீமஹி|*
*தந்நோ ஹம்ஸ ப்ரசோதயாத் ||"*

நாம் எல்லோரும் உடல் நலமும், மனஅமைதியும், நீங்காத செல்வமும் பெற்று இன்பமுடன் வாழ ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவ மூர்த்தியை வணங்க வேண்டும். நாரத முனிவர் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவரை தரிசித்து கூறிய சுலோகம்,

*"ஸர்வஜ்ஞத்வம் லபேத் ஸத்ய: ஹயக்ரீவ இவாபர |:*
*ஸத்யம் ஸத்யமஹம் வக்ஷ்யேந அஸாத்யம் தஸ்ய வித்யதே ||"*

யார் ஒருவர் பக்தி சிரத்தையுடன் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவரை வணங்குகிறார்களோ, அவர்கள் மிகவும் அறிவு உடையவர்கள் ஆவார்கள் என்றும், அவர்கள் எல்லா காரியங்களிலும் வெற்றி அடைவார்கள் என்றும் கூறுகிறார்.

பிரளய காலத்தில் பகவான் எல்லா உயிர்களையும் தன் வயிற்றில் தரித்து, ஒரு ஆலமரத்தின் இலை மேலே சிறுகுழந்தையாக உறங்கிக் கொண்டிருந்தார். எல்லா உயிர்களும் உருவமே தெரியாமல் மறைந்து இருந்த போது, அவர்களை உஜ்ஜீவிக்க சங்கல்பித்து தன்னுடைய நாபிக்கமலத்தில் பிரம்மாவை சிருஷ்டித்தார். பகவானின் கட்டளைப்படி பிரம்மா சிருஷ்டி தொழிலை ஆரம்பிக்கும் முன்பு நாபி பத்மத்தில் உள்ள ஓர் இதழில் இறைவனின் சங்கல்பத்தால் இரண்டு ஜல பிந்துக்கள் தோன்றியது. அவைகள் மது, கைடபன் என்ற இரண்டு அரக்கர்களாக மாறினார்கள். இவர்கள் மிகவும் கொடூரமானவர்கள். இவர்கள் தேவர்களை துன்புறுத்தினார்கள். பிரம்மாவை எதிர்த்து அவரிடம் உள்ள வேதங்களை பறித்து, படைக்கும் தொழிலையே அழிக்க நினைத்தார்கள்.



அதன்படி பிரம்மாவிடமிருந்து வேதங்களை அபகரித்து குதிரை வடிவம் எடுத்து, பாதாளத்தில் ஒளித்து வைத்தனர். பிரம்மா என்ன செய்வது என்று தெரியாமல் ஸ்ரீமந்நாராயணரை சரணடைந்தார். ஸ்ரீமந்நாராயணர் வேதங்களை மீட்க பாதாளத்துக்கு வந்தார். அங்கு வேதங்கள் குதிரை வேடத்தில் காணப்பட்டது. பகவானும் தன்னுடைய முகத்தை குதிரை வடிவமாக்கி வேதங்களை மீட்டார். குதிரை முகத்துடன் இருந்த வேதங்களை உச்சி முகர்ந்தார் பகவான். இதனால் குதிரையின் முகம் வாய் புனிதமாயிற்று. அஸ்வமேத யாகத்திற்கு ஆராத்யன் ஸ்ரீஹயக்ரீவனே என்று ஓதப்பட்டது. பகவான் குதிரை முகம் கொண்டு அரச மரத்தில் மறைந்ததால் அரச மரத்திற்கு "அஸ்வத்த வ்ருக்ஷம்" என்ற பெயரும் ஏற்பட்டது. ஸ்ரீஹயக்ரீவ பகவான் அரச மரத்தில் மறைந்து இருப்பதால் அரச மரத்திற்கு "ஜ்ஞானச்வத்தம்" என்ற பெயரும் உண்டு. ஹயக்ரீவர் திருவோண நட்சத்திரத்தில் அவதரித்தார். அவிட்ட நட்சத்திரத்தன்று பிரம்மாவை அசுரர்கள் தீண்டியதால், பிரம்மா அன்று மீண்டும் புதியதாக பூணுல் அணிந்து, வேதங்களை மீண்டும் உபதேசம் பெற்றதால் அன்று ஆவணி அவிட்டம் கொண்டாடுவதாக சிலர் கூறுகிறார்கள்.

"ஜ்ஞாநாநந்தமயம் தேவம் நிர்மலஸ்படிகாக்ருதிம்
ஆதாரம் ஸர்வவித்யாநாம் ஹயக்ரீவ முபாஸ்மஹே".

"வ்யாக்யா முத்ராம் கரஸரஸிஜை: புஸ்தகம் சங்க்கசக்ரே
பிப்ரத் பிந்நஸ்படிக ருசிரே புண்டரீகே நிஷண்ண:
அம்லாந ஸ்ரீரம்ருத விஷதை ரம்ஸூபி: ப்லாவயந்மாம்
ஆவிர்ப்பூயா தநக மஹிமா மாநஸே வாகதீச:"

ஹயக்ரீவன் என்ற அசுரன் இருந்தான். ஹிரண்ய கசிபுவைப் போல கடுமையாக தவம் செய்து மிருகம், மனிதர்களால் தனக்கு மரணம் இல்லை என்ற வரத்தைப் பெற்றான். தேவர்களை எல்லாம் துன்புறுத்தினான். தேவர்கள் தேவியை சரணம் அடைந்தார்கள். தேவி பகவானை சரணம் அடையும்படி கூறினாள். தேவர்கள் விஷ்ணுபகவானிடம் சென்று அசுரனை அழிக்குமாறு வேண்டினார்கள். தேவர்களின் துன்பத்தைப் போக்க பகவான் மனித உருவமின்றியும், மிருக உருவமின்றியும் தோன்றி அசுரனை கொன்றார். இதுவே ஹயக்ரீவ அவதாரம் என்று தேவி பாகவதத்தில் கூறப்படுகிறது. எல்லா வித்யைகளுக்கும் மூலக்காரணமானவர். நம்மை எல்லோரையும் காத்து அருளுவதற்காக வெண்மையான தான ஆகிருதியை எடுத்துக் கொண்டார். இவரை வணங்குவதால் எல்லா பலன்களும் கிடைக்கும்.

ஸ்ரீமத் வாதிராஜ ஸ்வாமிகள் அருளிய ஹயக்ரீவ ஸ்தோத்திரத்தை தினமும் சொல்லி வந்தால் எல்லா வித துன்பங்களும் மறைந்து இன்பத்துடனும் எல்லா சௌபாக்கியங்களுடனும் வாழ்வார்கள்.

## 70. சாஸ்த்திர நீதிகள் :

பிதாச ருணவாநு சத்ரு
மாதா ச வ்யபசாரிணீ ।
பார்யா, அரூபவதீ சத்ரு:
புத்ரச் சத்ரூ: ந பண்டித: ।।

கொடுக்க முடியாத அளவு கடன்களை வாங்கி பிள்ளைக்கு கஷ்டங்களை கொடுத்து மரணம் அடைந்த தகப்பன் விரோதியே! ஒழுக்கமே இல்லாமல் நடந்து, தனது வம்ச குழந்தைகளையும் கெடுக்கும் தாயானவளும் விரோதியே!

அழகில்லாத மனைவி அவளது கணவனுக்கு முதல் எதிரியாகிறாளாம்! படிப்பும், அறிவும் இல்லாத துஷ்டகுணம் நிறைந்த பிள்ளையே தகப்பனுக்கு முதல் விரோதி ஆகி விடுகிறான்!

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.




"ஓம் நமோ பகவதே வாசுதேவாய" ஸ்ரீமத்பாகவதத்தை சொல்ல ஆரம்பிக்கும் முன் ஸ்ரீவியாச தேவரால் பகவானைக் குறித்து உச்சரிக்கப்பட்ட மந்திர வசனம். வாசுதேவாய என குறிப்பிடப்படும் நாமம். வசுதேவருக்கும் தேவகிக்கும் பிறந்த ஸ்ரீகிருஷ்ணரையே குறிக்கும். ஆதிமூலமாக இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணரே இப்பிரபஞ்சங்களை படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களை செய்வதற்கான மூல காரணமாகவும் பூரண உண்மையாகவும் இருக்கின்றார்.

*"தேனே பிரஹ்ம ஹ்ருதாய ஆதி கவயே*
*முஹ்யந்தி யத் ஸுரய:"*

இப்பிரபஞ்சத்தின் முதல் ஜீவராசியான சதுர்முக பிரம்மாவுக்கு வேத ஞானத்தை முதன் முதலாக புகட்டியவர் ஆதிமூலமாக இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணர் என்ற கோவிந்தன் என்பதால் பிரம்ம சம்ஹிதையில் ஒவ்வொரு பதத்தின் ஈற்றிலும் **"கோவிந்தம் ஆதிபுருஷம் தம் அஹம் பஜாமி"** என்றே கூறி பிரார்த்திக்கின்றார்.

ஸ்ரீமத் பகவத்கீதையிலும் ஸ்ரீகிருஷ்ணர், தானே மூல முதற்கடவுள் என்றும், தம்மையன்றி வேறு எந்த பரத் தத்துவமும் கிடையாது என்றும் அறிவிக்கின்றார். பத்ம புராணத்தில் ஸ்ரீகிருஷ்ண நாமமே மிக உயர்ந்தது எனவும் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீமத்பாகவதத்தில் யாருடைய லீலைகள் 10ஆம் காண்டத்தில் கூறப்பட்டுள்ளதோ அவரே தான் பரத்தத்துவமான ஸ்ரீகிருஷ்ணர் என்பதை ஸ்ரீகிருஷ்ணரின் அம்ச அவதாரமான ஸ்ரீகிருஷ்ண துவைபாயனரான வியாச தேவர் அறிவிக்கின்றார்.

*"ஸ்ரீகிருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம்"* என்பது வேத வாக்கு. பகவத்கீதை (அத்.9.சுலோகம்7)யில்

*"ஸர்வ பூதாநி கௌந்தேய*
*ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்।*
*கல்ப க்ஷயே புனஸ்தாநி*
*கல்பா தௌ விஸ்ருஜாமி அஹம்॥"*

ஒவ்வொரு கல்ப முடிவிலும் இந்த ஜடத்தோற்றம் தன்னில் நுழைந்து மீண்டும் அடுத்த கல்ப ஆரம்பத்தில் தனது சக்தியால், மீண்டும் அதை தான் தோற்றுவிப்பதாக பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகின்றார். எனவே அனைத்து சிருஷ்டிக்கும் அவரே மூலகாரணம் என்பது வேத இலக்கியங்களில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

*"விஷ்ணுனா ப்ரப விஷ்ணுனா"* என்பது பாகவத சுலோகம்.

பூர்ண அம்சமான ஸ்ரீவிஷ்ணு இவ்வுலகைக் காக்கின்றவர். ஸ்ரீகிருஷ்ணர் சர்வ வியாபகமுடைய அவருடைய செயல்களை ஸ்ரீவிஷ்ணு என்ற அம்சத்தில் இருந்து நிறைவேற்றுகின்றார். "விஷ்ணு" என்றால் எங்கும்

## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்



*அர்த்தம் அனர்த்தம் பாவய நித்யம் நாஸ்தி*
*தத: சுகலேச: சத்யம்*
*புத்ராதபி தனபாஜாம் பீதி: ஸர்வத்ரைஷா*
*விஹிதா ரீதி:*

**செல்வத்தை எப்போதுமே துன்பம் தரும் பொருளாக மனதில் வலுவான உணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இவற்றிலிருந்து எப்போதும் நிரந்தர "சுகம்" என்பது இல்லவே இல்லை. இதுதான் எப்போதும் நிலையான சத்யமான உண்மை. ஒரு நிலையில் பணத்தை சேமித்து வைப்பவர்கள்... பெற்ற பிள்ளையிடம் கூட பயந்து நிற்கும் நிலையில்தான் இருக்கிறார்கள்..."**

**– திரு. சீதாராமன், சென்னை.**

பரவியிருப்பவர் எனவும் "ப்ரப விஷ்ணு" என்றால் சர்வ சக்தி படைத்தவர் எனவும், அவரேதான் ஸ்ரீகிருஷ்ணர் எனவும் பொருள்.

*"க்ருஷ்ண பார்த்தா உபாமந்த்ரய பூஜித: ப்ரயௌ முனி:*
*ஸ்ருத்வா க்ருஷ்ணம் பரம் ப்ரஹ்ம பார்த்த பரம-விஸ்மித:"*

(ஸ்ரீமத் பாகவதம் காண் 7–அத்15 – பகம் 79)

நாரத முனிவரால் அடையாளம் காட்டப்பட்ட தங்கள் எது தாய்மாமன் ஸ்ரீகிருஷ்ணர் தான் பரமபுருஷர் என்பதை கேட்ட யுதிஷ்டிர மகாராஜன் மிகவும் ஆச்சரியப் பட்டார் என சுக முனிவர் கூறுகின்றார். ஸ்ரீமத் பாகவதம் காண் 11–அத்5–பதம் 33–34ன் ஈற்றில் வருகின்ற

*"வந்தே மஹா புருஷ தே சரணாரவிந்தம்"*

என்று அழைக்கப்படுகின்றவர் ஸ்ரீகிருஷ்ணரே.

எனவே பகவான் வாசுதேவராகிய ஸ்ரீகிருஷ்ணருக்கு செய்யக்கூடிய நேரடி பக்தித் தொண்டே முக்திக்கான வழி என ஸ்ரீமத்பாகவதம் வழிகாட்டுகின்றது.

*"நஹி அதோ அன்ய: சிவ:பந்தா விசத: ஸம்ஸ்ருதா விஹ*
*வாஸுதேவே பகவதி பக்தி - யோகோயதோ பவேத்:"*

(ஸ்ரீமத் பாகவதம் காண் 2– அத்2–பதம் 33)

மூலபகவான் ஸ்ரீகிருஷ்ணரின் அமிர்தம் போன்ற கதைகளை செவியுறுவதும் பரமபதத்தை அடைவதற்கான வழி எனவும், அவரை வழிபடுவதால் முக்தி கிடைக்கும் என பாகவதம் உறுதி கூறுகின்றது.

*"அகாம: ஸர்வ-காமோ வா மோக்ஷ-காம உதார-தீ:*
*தீவ் ரேன பக்தி-யோகேன யஜேத புருஷம் பரம்."*

(ஸ்ரீமத் பாகவதம் காண் 2– அத்3–பதம் 10)

பிரம்ம சம்ஹிதையில் பரம புருஷரான பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஒருவரே அழிவற்ற உடலையும், அறிவையும், ஆனந்தத்தையும் உடையவராக இருக்கின்றார். அவரே ஆதி மூலமான கோவிந்தனாகவும் சர்வ காரணங்களுக்கும் மூல காரணமாக இருக்கின்றார் என்பதை பிரம்ம தேவர்:

## சிறுவர் பகுதி வினாக்கள்

1. வேதாத்மா என்று போற்றப்படுபவர் யார்?
2. மந்த்ர ராஜ பத ஸ்தோத்ரத்தை இயற்றியவர் யார்?
3. பஞ்ச கமல க்ஷேத்ரம் என்று போற்றப்படும் திவ்ய தேசம் எது?
4. ஸ்ரீராமானுஜருக்கு "ஸ்ரீபாஷ்யகாரர்" என்கிற விருதை வழங்கியவர் யார்?
5. வழுதி வளநாடன் என்று போற்றப்படும் ஆழ்வார் யார்?
6. ஏழு ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற பெருமாள் யார்?
7. பூதபுரி என்று அழைக்கப்படும் க்ஷேத்ரம் எது?
8. நம்மாழ்வாரின் விக்ரகம் எந்த திவ்ய தேசத்தில் ஸ்ரீசடாரியில் அமைந்துள்ளது?
9. ஹரித்ரா நதி என்னும் புஷ்கரணி எந்த க்ஷேத்ரத்தில் உள்ளது.
10. "கணபுரத்தென் கருமணியே" என்று பாடிய ஆழ்வார் யார்?

விடைகளுக்கு 22ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : ஜெ.அனகா, மன்னார்குடி.

*"ஈஸ்வர: பரம: க்ருஷ்ண: ஸத்-சித்-*
*அனாதிர் ஆதி கோவிந்த:*
*ஸர்வ-காரண-காரணம்:"*

என பிரார்த்திக்கின்றார்.

மேலும் இந்த ஜகத்துக்கே குருவாக பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இருக்கின்றார் என்பதை

*"தஸ்மை நமோ பகவதே வாஸுதேவாய*
*தீமஹி*
*யத்-மாயயா துர்ஜயயா மாம் ப்ருவந்தி*
*ஜகத்-குரும்."*

(ஸ்ரீமத் பாகவதம் காண் 2– அத்5– பதம் 12)

இதனை அறியாத மூட மனிதர்களை குறித்து பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பகவத்கீதையில் தனது வருத்தத்தை தெரிவிக்கின்றார்.

*"அவஜாநந்தி மாம் மூடா மாநுஷீம்*
*தனும் ஆச்ரிதம்..."*

(அத்9–சுலோகம்11)

பகவான் ஸ்ரீகிருஷ்ணரே பலதேவராகவும், அதிலிருந்து சங்கர்ஷணராகவும், அதிலிருந்து வாசுதேவராகவும், அதிலிருந்து அனிருத்தராகவும், அதிலிருந்து ப்ரத்யும்னராகவும், பிறகு மீண்டும் சங்கர்ஷணரிலிருந்து ஸ்ரீமந்நாராயணரின் புருஷ அவதாரங்களாகவும் எண்ணற்ற பிற மகா உத்தம புருஷர்களாகவும் விரிவடைகின்றார் எனபதால் எல்லா அவதாரங்களும் ஸ்ரீகிருஷ்ணரே

*"பூர்ணஸ்ய பூர்ணம் ஆதாய பூர்ணம்*
*ஏவா சிஷ்யதே"*

என அறியப்படுகிறார்.

இதனை முற்றிலுமாக நமது பூர்வாசாரியர்கள் அறிந்து வைத்து இருப்பதால்

*"நிர்பந்த: கிருஷ்ண ஸம்பந்தே யுக்தம்*
*வைராக்கியம் உச்யதே"*

என்று கூறி நமக்கு தேஹாத்ம–புத்தியிலிருந்து விடுபட கிருஷ்ண சம்மந்தம் அல்லது அவரது சம்மந்தம் பெற்ற குரு பரம்பரை வழியில் வந்துள்ள ஆசார்ய பெருமக்களின் சம்மந்தம் அவசியமாகும் என வலியுறுத்துகின்றனர். அப்படிப்பட்ட பாக்கியம் பெற்றவர்கள் மஹா–மனா: என்ற சமநிலை மனம் கொண்ட மகாத்மாக்களாக இருப்பர் என உபதேசிக்கின்றார்கள்.

அதன்படி நமது ஆசாரிய பெருமக்கள் சிலாகிக்கின்ற ஆழ்வார்களின் பிரபந்தங்களை உற்று நோக்க, மேற்படி பாகவத கருத்துக்கள் எப்படி அவர்களால் நிலைபடுத்தப்படுகின்றது என்பதை காணலாம். பகவான் ஸ்ரீகிருஷ்ணரே மூல முதற் கடவுள் என்ற புருஷ ஸுக்தத்தை நிலை நாட்டி பாண்டிய மன்னனிடம் பொற்கிழி பெற்றவர் பெரியாழ்வார். அந்த பகவானுக்கு தன் குலமே அடிமை பட்டு இருப்பதை:

*"எந்நாள் எம்பெருமான் உன்றனக் கடியோம் என்றெழுத்துப்பட்ட*
*அந்நாளே அடியோங்களடிக் குடில் வீடு பெற்றுய்ந்தது*
*.... உன்னைப் பல்லாண்டு கூறுதுமே."*

– பெரியாழ்வார் திருமொழி 10

அதுமட்டுமன்றி யசோதா பாவனையில் பகவான் கண்ணனையே தன் குழந்தையாகப் பாவித்து வாத்ஸல்ய பாவத்தின் மூலம் பகவானை அணுகிய பக்தியின் பெருமையைக் கூறிக் கொண்டே இருக்கலாம். 2ஆம் பத்து முதல் 3ஆம் பத்து 9ஆம் பத்து திருமொழி வரை உள்ள 300 பாசுரங்களில் குழந்தை கோகுல கண்ணன் முதல் துவாரகா கிருஷ்ணர் வரை பாடியதன் பொருளை ஆய்ந்தால் பகவான் ஸ்ரீகிருஷ்ணரே மூல முதற் கடவுள் என்ற தீர்மானத்திற்கு வரலாம்.


**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

## வாசகர்களுக்கு அறிவிப்பு!!

**"ஸப்தகிரி பொன்விழா மலர்" கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன**

தி.தி.தே. சமய மாத இதழான ஸப்தகிரி கலியுக கண் கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின் வைபவத்தையும், திருமலை குறித்தும் பிரதி மாதம் தவறாமல் வாசகர்களுக்கு வழங்குகிறது. ஆறு மொழிகளிலும் வெளிவருகின்ற ஆன்மீக, அறநெறி பத்திரிக்கைகளில் முன்னிலையில் உள்ளது.

ஸப்தகிரி "சிறப்பு பொன்விழா இதழை" வெளியிட கருதுகிறது. ஆதலால் வாசகர்கள் ஸப்தகிரி குறித்து தங்கள் அனுபவங்களை எழுதி எங்கள் அலுவலகத்திற்கு அனுப்புங்கள். அவற்றை பரிசீலித்து ஸப்தகிரியில் பிரசுரிக்கப்படும்.

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி : பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், தி.தி.தே. அச்சக வளாகம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி–517 507. கட்டுரைகளை தட்டச்சு செய்து tamilsapthagiri50years@gmail.com என்ற இ–மெயிலிற்கு அனுப்பவும்.

– பிரதான ஆசிரியர்



# கல்கி அவதாரம் எங்கே! எப்போது!

“யுகங்கள் நான்கு. கிருதயுகம், திரேதாயுகம், துவாபர யுகம் மற்றும் கலியுகம் என்பவையே அவை. கிருத யுகத்தில் இறைவனை நினைத்து தவம் செய்து முக்தி பெற்று விட முடியும். திரேதா யுகத்தில் சாதுக்களைப் பாதுகாப்பதன் மூலம் இறையருளைப் பெற முடியும். துவாபர யுகத்தில் தர்மம் எது, அதர்மம் எது என்று கண்டறிந்து, தர்மத்தின் வழியே நடந்து, இறையருளைப் பெறலாம். இறைவனும், அதர்ம வழியில் செல்பவர்களை அழிக்க, தர்ம வழியில் செல்பவர்களை அவனே தேடி வந்து அருள் புரிவான். அவதார புருஷனான கிருஷ்ணன் பாண்டவர்களுக்கு, அவர்கள் தர்மத்தின் வழியைப் பின்பற்றியதால், கடைசி வரை துணை நின்றான். மற்ற மூன்று யுகங்களை விட, கலியுகத்தில் இறைவனின் நாம சங்கீர்த்தனைகளை பாடுவதன் மூலம், ஒருவன் முக்தி அடைந்து விடலாம். கலியுகத்தில் அவதரித்த சைதன்ய மகாபிரபு, பன்னிரு ஆழ்வார்கள் இறைவனைப் பாடிப் புகழ்ந்து, தானும் முக்தி அடைந்து இலட்சக்கணக்கானோரை இறைவழி அடையச் செய்தனர்.

மகா விஷ்ணுவின், தச அவதாரங்களாவன மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, ராம, கிருஷ்ண பலராம மற்றும் கல்கி அவதாரமாகும். விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, உலகில் முதல் உயிரினம் தோன்றியது நீரில் தான். அதனால் தான் இறைவன், தண்ணீரில் மீனாக, நீரிலும் நிலத்திலும் வாழும் ஆமையாக, பின் நிலத்தில் மட்டும் வாழும் பன்றியாக, பாதி மனிதன் பாதி விலங்கு தோற்றத்துடன் நரசிம்மமாக, ஆயுதம் சம்ஹாரம் என்ற யுத்த மார்க்க வழியில் பரசுராமராக, தர்மத்தின் வழியில் வாழ்ந்த இராமனாக, துஷ்டர்களை அழித்த கிருஷ்ணனாக, பசுக்களையும் இடையர்களையும் காத்த பலராமனாக அவதரித்தான் என பாகவதம் எடுத்தியம்புகிறது. இறுதியாக தற்போது உலகம் முழுவதும் நடைபெற்று வரும் அதர்மத்தை, அக்கிரமகாரர்களை அழிக்க கல்கியாக அவதரிப்பான் எனவும் அறுதியிட்டுச் சொல்கிறது.

கலியுகத்தில் அதர்மமான வழியில், எவ்வாறெல்லாம் செயல்கள் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலைகள் இப்பூமியை வாழத் தகுதியற்றதாக மாற்றும் என்பதையும் நூல்கள் குறிப்பிடுகின்றன.

“கலியுகத்தில் பணமே பிரதானமாகக் கருதப்படும். பொருளைச் சம்பாதிக்க மக்கள் பித்தலாட்டம், மோசடி, கொள்ளை போன்ற செயல்களில் ஈடுபடுவர். கணவனின் பேச்சை, மனைவி கேட்பதில்லை. அவ்வாறே மனைவியின் வார்த்தையையும் பெற்றோர் வார்த்தையையும் கணவன் காதில் போட்டுக் கொள்வதில்லை. வயதான தாய், தந்தையரை பிள்ளைகள் பேணி காப்பாற்ற மாட்டார்கள். சகோதரர்கள், பங்காளிகள் சொத்துகளுக்காக காவல் நிலையம், நீதிமன்றம் என்று அலைவர். நாட்டை ஆள்பவர்கள், மக்களைப் பற்றி அதிகம் கவலைப்படாமல் தனது தலைமுறைக்கு சொத்து சேர்ப்பதிலே குறியாக இருப்பார்கள். தேசப்பற்று, தெய்வப்பற்று குறைந்த அளவே காணப்படும். யாகம், வேள்வி முதலிய தெய்வீக சடங்குகளை விளம்பரத்திற்காகவும், படோடோபத்திற்கும் புரோகிதர்கள் செய்வர். மழை பெய்ய, மக்களை நோய் தாக்காமலிருக்க,

திரு.எஸ். நடராஜன், உறையூர்.



சுபகாரியங்கள் குடும்பங்களில் நடைபெற செய்யப்படும் ஹோமம் மற்றும் யாகங்களை மூட நம்பிக்கை என்று பரிகாசம் செய்யும் நாத்திக நீசர்கள் ஒரு சிலர் ஆங்காங்கே இருப்பர். கொடுங்குற்றவாளிகளுக்கு உடனடியாக மரணதண்டனை பெற்றுத்தர, ஆட்சியாளர்களால் இயலாது. அதனால் குற்றங்கள் பெருகும். அரசனின் செங்கோல் நீதியை நிலைநாட்டத் தவறியதால், மாதம் மும்மாரி மழை பொழிவு இருக்காது. இதனால், அனைத்து ஜீவராசிகளுக்கும், தேவையான உணவுப் பொருட்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டு, காட்டு விலங்குகள், நாட்டிற்குள்ளும், மனிதர்கள் காட்டுக்குள் சென்று வசிக்கும் நிலை ஏற்படும். பருவம் மாறி பெய்யும் மழை, அடிக்கும் வெயில் மற்றும் காற்று ஆகியவற்றின் மூலம் மக்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாவர்.

உணவு, உடலுழைப்பு மற்றும் உறக்கம் ஆகியவற்றில் கட்டுப்பாடு மறைந்து, மனம் போன போக்கிலே பெரும்பாலோர் வாழத் தலைப்பட்டு, அதனால் நோய் வாய்ப்பட்டு அற்ப ஆயுளில் மரணம் அடைவர். இறைவனே "தனது உடலில் சரிபாதியைக் கொடுத்து, பெருமைபடுத்தப்பட்ட பெண்கள் போகப் பொருளாகப் பார்க்கப் படுவர்.

இவ்வாறான சூழ்நிலையில், இறைவன் பரத கண்டத்திலுள்ள "சம்பளம்" என்னும் கிராமத்தில் "விஷ்ணு யக்ஷஸ்" என்ற அந்தணனுக்கு மகனாக அவதரித்து, வெள்ளைக் குதிரையிலேறி சக்தி மிகுந்த வாளால் உலகிலுள்ள துஷ்டர்களை அழிப்பார்.

அதன் பின் "கிருதயுகம்" மீண்டும் தொடரும். "யுகங்களின் சுழற்சி" என்பது இதுவேயாகும். இதைத் தான் பகவத் கீதையில் கிருஷ்ணன்

*"பரித்ராணாய சாதுநாம் விநாசாய ஸ துஷ்க்ருதாம் |*
*தர்ம ஸம்ஸ்தாப நார்தாய ஸம்பவாமி யுஹே யுஹே||"*

நல்லவர்களைக் காக்க தீயவர்களை அழிக்க, அறத்தை நிலை நிறுத்த, ஒவ்வொரு யுகத்திலும் நான் திருஅவதாரம் செய்கிறேன் என்று சூளுரைக்கின்றார்.

ஆக, கிருஷ்ணனான மகாவிஷ்ணுவே கல்கியாக அவதரித்து பூமியில் அமைதியை நிலைநாட்டுவார்.

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

## 2019, செப்டம்பர் மாத விழாக்களும், பண்டிகைகளும்

| | |
|---|---|
| 1 | ஸ்ரீபலராம ஜயந்தி, ஸ்ரீவராஹ ஜயந்தி |
| 2 | விநாயக சதுர்த்தி, திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் விநாயக சதுர்த்தி உத்ஸவம் |
| 7-10 | ஜம்மலமடுகு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீநாராபுர வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 8-11 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 9-12 | ரிஷிகேஷ் பார்வதி தேவி சமேத ஸ்ரீசந்திர மௌலீஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 10 | வாமன ஜயந்தி |
| 10-13 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம், தேவுனி கடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 12-13 | நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 23-26 | பெங்களூர் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 24-25 | அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 29-அக்8 | திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம், |
| 29-அக்8 | உபமாகா ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 36

### இடமிருந்து வலம்

1. சப்தஸ்தான தலங்களில் ஒன்று...(5)
6. குலசேகர ஆழ்வாரின் தந்தை பெயர்.....(7)
8. கம்பரின் இராமாயணம் அரங் கேறிய திருத்தலம்....(5)
11. ஸ்ரீமத்பாகவதம் மனித இனத்திற்கு கிடைப்பதற்கு காரணமாக இருந்த வர்...(4)
14. 3-வது ஸ்ரீரங்கம்....(4)
17. மதுரகவி ஆழ்வாரின் அவதார தலம்....(6)

### வலமிருந்து இடம்

18. சாலிஹோத்ர முனிவருக்கு பெருமாள் அருள் செய்த திவ்ய தேசம்....(6)
19. திருமலையில் வராகர் மடியில் தாங் கிய நிலையில் காட்சியளிப்பவர்....(4)

### மேலிருந்து கீழ்

1. கலியின் பிடியிலிருந்து ரட்சிக்க நின்ற கோலத்தில் சேவை தருபவர்....(8)
2. இராமானுஜரின் முதல் ஆசிரியர்....(9)
3. இராமானுஜ நூற்றந்தாதி இயற்றிய வர்....(12)
4. மதுமான் என்னும் மகரிஷி ராமனாக திருமாலை தரிசித்த தலம்....(8)
5. கிருதயுகம் தோன்றிய நாள்...(9)
7. அப்பண்ணாச்சாரியார் பக்திக்கு கட்டுப்பட்டு இரண்டாக பிரிந்து நடுவில் பாதை காட்டிய நதி....(6)
9. 27 நட்சத்திர பெண்களையும் மணந் தவர்...(5)
12. திருதராஷ்டிரனின் தம்பி....(4)

### கீழிருந்து மேல்

9. அறியாமையை நம்முன் தோற்றுவிக் கும் "சடம்" என்னும் வாழ்வை விரட்டியதால் நம்மாழ்வாரை இப்படியும் அழைப்பர்....(5)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | 3 | ■ | ■ | ■ | | ■ | 4 |
| | | 5 | | 6 | | | | | | | |
| | | | | ■ | | 7 | | ■ | | | |
| | | | | 8 | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | 9 | |
| | 10 | | | | | | | | | | |
| | ■ | | | | | | | | | | |
| 11 | | | | | | 12 | | | | | ■ |
| ■ | ■ | | ■ | | | | | 13 | 20 | | ■ |
| 14 | | | | 15 | | | 16 | | | | 19 |
| 17 | | | | | | | | | | | 18 |

**தொகுப்பு : திரு. எஸ். ராஜகுமார், சென்னை.**

**விடைக்கு 52 ம் பக்கம் பார்க்கவும்.**

10. இராமானுஜர் தரிசனத்திற்கு "எம்பெருமானார் தரிசனம்" என பெயரிட்டவர்...(6)
13. கௌரவர்கள் ஆண்ட நாடு.....(7)
15. திருக்குருகூரில் பிறந்ததால் நம்மாழ்வாரை இப்படி அழைப்பர்....(7)
16. கருட சேவையை இழந்த மனவருத்தத்தினால் காஞ்சி பேரருளாளனை ஸ்ரீதொட்டையாச்சார்ய ஸ்வாமிகள் பாடிய ஐந்து சுலோகங்கள்....(9)
20. நான்கு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய பக்தி சம்மந்தமான செயல்பாடுகளுடன் கூடிய விரதம்...(10)

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**ஸப்தகிரி வாசகர்களுக்கு விண்ணப்பம்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த திருவேங்கடவன் லீலைகள், துணுக் குகள், சிறார் எழுதும் கதைகள், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் புதிர்கள் வரவேற்கப்படுகின்றன. சந்தேகங்கள் தெளிதல் பகுதிக்கான ஆன்மீக சந்தேகங்கள் வரவேற்கப்படுகின்றன.

–பிரதான ஆசிரியர்

# ஸ்ரீவரலக்ஷ்மி விரத மகிமை



திருமதி. டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,
திருப்பதி

*‘‘மாநாதீத ப்ரதித விபவாம் மங்களம் மங்களாநாம்*
*வக்ஷ: பீடீம் மதுவிஜயிநோ பூஷயந்தீம் ஸ்வகாந்த்யா|*
*ப்ரத்யக்ஷாநு ச்ரவிக மஹிம ப்ரார்த்திநீநாம் ப்ரஜாநாம்*
*சரேயோ மூர்த்திம் ச்ரியம சரணஸ்த்வாம் சரண்யாம்*
*ப்ரபத்யே||’’*

ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸ்துதி சுலோகம் இது. “மது எனும் அரக்கனை வெற்றி கொண்ட ஸ்ரீமஹாவிஷ்ணுவின் திருமார்பில் அமர்ந்து கொண்டு, அவரது வக்ஷ ஸ்தலத்தையே பிரகாசமாக்கினவளும், ஸர்வாபரண பூஷிதையும், அலங்காரவதியுமான ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயாரைச் சரணமடைகிறேன்” என்பது இதன் பொருள். அந்த தாயாரின் ஸ்வரூபமே பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை அள்ளி வழங்கும் ஸ்ரீவரலக்ஷ்மி.

“லக்ஷ்மி” என்கிற பதத்திற்கு இலக்கண ரீதியாக பல அருட் சக்தி அடையாளங்களை பெரியோர்கள் கூறி உள்ளனர். ஞானம், ஐச்வர்யம், சுகம், ஆரோக்கியம், தனம், தான்யம், ஜயம் முதலானவைகள் அந்த அருட் சக்திகள். அதே பெரியோர்கள் தங்களை வணங்குபவர்களை *‘‘பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க’’* என்று வாழ்த்துகிறார்கள். அந்த பதினாறு பேறுகள் மேற்சொன்ன அஷ்ட சக்திகளோடு அதாவது அஸிமா, மஹிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈசித்வம், வசித்வம் ஆகிய சக்திகளோடு சேர்ந்தது ஆகும். இவை அனைத்தையும் அள்ளி வழங்குபவளே ஸ்ரீவரலக்ஷ்மித் தாயார்.

எல்லா செல்வங்களையும் இழந்த தேவேந்திரன் சமுத்திர மதன காலத்தில் பாற்கடலிலிருந்து உதயமான ஸ்ரீமஹாலக்ஷ்மியைத் துதித்து, அவளது கடாக்ஷத்தைப் பெற்று மீண்டும் நீங்காத செல்வங்களைப் பெற்றதாக ஸ்ரீதேவி பாகவதத்திலும், ஸ்ரீவிஷ்ணு புராணத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

*‘‘நமேஸ்தேஸ்து மஹாமாயே ஸ்ரீபீடே ஸுரபூஜிதே |*
*சங்க, சக்ர, கதா ஹஸ்தே ஸ்ரீமஹாலக்ஷ்மி*
*நமோஸ்துதே ||’’*

என்று தொடங்கும் அந்த 8 சுலோகங்களும் ஸ்ரீமஹாலக்ஷ்மி அஷ்டகம் என்றழைக்கப்படுகிறது. “கனக தாரா ஸ்தவம்” என்பது மிகப் பிரசித்தமான துதி. ஸ்ரீஆதிசங்கர பகவத் பாதாள் பிக்ஷைக்காக ஒரு ஏழைப் பெண்ணின் வீட்டு வாசலில் போய் நின்று, *‘‘பவதி பிக்ஷாந்தேஹி’’* என்றதும் வெளியே வந்த அந்த பெண் திகைத்து நின்று, அந்த பிரம்மச்சாரிக்குக் கொடுப்பதற்கு எதுவும் இல்லையே என எண்ணினாள். உள்ளே சென்று, தன்னிடமிருந்த ஒரே ஒரு நெல்லிக்கனியைக் கொண்டு வந்து, அந்த பிக்ஷாபாத்திரத்தில் இட்டாள். அவளது நிலைமையையும், அவளது நல்ல மனதையும் புரிந்து கொண்ட ஆதிசங்கரர் ஸ்ரீமஹாலக்ஷ்மியைத் துதித்து “கனகதாரா ஸ்தவம்” என்கிற சுலோகங்களைப் பாட அந்த இல்லத்தின் கூரையிலிருந்து தங்கக் கனிகள் மழையாகப் பொழிந்ததாம்!

*‘‘நமோஸ்து ஹேமாம்புஜ பீடிகாயை |*
*நமோஸ்து பூமண்டல நாயிகாயை |*
*நமோஸ்து தேவாதி தயாபராயை |*
*நமோஸ்து சாரங்காயுத வல்லபாயை ||*
*நமோஸ்து தேவ்யை ப்ருகுநந்தனாயை |*
*நமோஸ்து விஷ்ணோருரஸி ஸ்திதாயை |*



*நமோஸ்து லக்ஷ்ம்யை கமலாலயாயை |*
*நமோஸ்து தாமோதர வல்லபாயை ||''*

அதே போன்று ''ஸ்ரீஸ்துதி'' என்பது ஸ்ரீவேதாந்த நிகமாந்த மகா தேசிகனால் இயற்றப்பட்ட பிரபலமான ஸ்தோத்திரம். ஓர் ஏழை பிரம்மச்சாரியின் திருமணத்திற்காக அவனது வேண்டுகோளின்படி ஸ்ரீமஹாலக்ஷ்மியைத் துதித்து ஸ்ரீஸ்துதி சுலோகங்களைப் பாடி, வேண்டிய அளவு செல்வத்தைப் பெற்றுத் தந்தார். ஸ்ரீஸ்துதியின் ஒவ்வொரு சுலோகமும் படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் பக்தி பரவசத்தை உண்டாக்க வல்லது.

*''லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி:''* என்கிறது சாஸ்திரம். பக்தர்களுக்கும், எம்பெருமானுக்குமிடையே ஒரு பாலமாக பிராட்டி செயல்படுகிறாள். “ஸ்ரீ” என்கிற திருநாமம் தாயாருக்கு. வட மொழியில் இதற்கு ஆறு அர்த்தங்கள் உள்ளன. அவை : ஸ்ரீயதே – பக்தர்களால் தஞ்சமாகப் பற்றப்படுபவள். ச்ரயதே – தானே ஸ்ரீமந் நாராயணனை சரணமாகப் பற்றுகிறாள். ச்ருணோதி–தன்னைச் சரணமடைந்தவர்கள் கூறும் குறைகளைக் கேட்கிறாள். ச்ராவயதி – பக்தர்களுக்காகப் பரிந்து பேசி அவர்களின் வேண்டுகோளைப் பகவானைக் கேட்கும்படி செய்கிறாள். ச்ருணாதி – எம்பெருமானை அடையத் தடையாக இருக்கும் அவர்களது பாபங்களைத் தனது திருவருளால் நீக்குகிறாள். ஸ்ரீணாதி – முடிவாகத் தனது பக்தர்களைப் பகவானோடு சேர்த்து வைக்கிறாள். இந்த “ஸ்ரீ” எனும் மஹாலக்ஷ்மியின் அம்சமே ஸ்ரீவரலக்ஷ்மி. இந்த தாயாருக்கு ஆவணி மாதத்தில் வரும் பௌர்ணமிக்கு முந்தைய சுக்ல பக்ஷ வெள்ளிக்கிழமை கடைப்பிடிக்கப்படும் விரதமே ஸ்ரீவரலக்ஷ்மி விரதம்.

*''ஸ்ரீவரலக்ஷ்மீம் நமஸ்துப்யம் வஸுப்ரதே*
*ஸ்ரீ ஸாரஸபதே ரஸபதே ஸபதே பதே பதே*
*ச்ராவண பௌர்ணமி பூர்வஸ்த சுக்ர வாரே*
*சாருமதீ ப்ரப்ருதிபி பூஜிதாகாரே*
*தேவாதி குருகுஹ ஸமர்ப்பித மணிமயஹாரே*
*தீனஜன ஸம்ரக்ஷண நிபுண கனகதாரே''*

என்று ஸ்ரீவரலக்ஷ்மி தேவியை ஸ்தோத்திரித்து சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவரான ஸ்ரீமுத்து ஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய அழகான கீர்த்தனை. இனி இந்த ஸ்ரீவரலக்ஷ்மி விரதம் ஆரம்பிக்கப்பட்ட கதையைச் சுருக்கமாகப் பார்ப்போம். பாரத தேசத்தின் வட மாநிலத்தில் மகத சாம்ராஜ்யத்தில் “குண்டின நகரம்” என்று ஒரு சிற்றூர் இருந்தது. அந்த நகரம் சகல சௌபாக்யங்களுடன் லக்ஷ்மி கடாக்ஷம் நிறைந்த ஒரு தலம். பச்சைப் பசேலென்ற வயல்களும், இயற்கையாகவே அமைந்த நீர் நிலைகளும், ஆறுகளும் நிரம்பி செல்வ செழிப்புடன் இருந்தது. அங்கே இயல்பாகவே பெண்களும் சௌந்தர்யவதிகளாகவும், குணதிகளாகவும் திகழ்ந்தனர். இவர்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல சாருமதி என்று ஒரு பெண்மணி இருந்தாள். அவள் பெயருக்கேற்றபடி அழகு, குணம் இரண்டும் நிரம்பப் பெற்றவளாக இருந்தாள். பெண்மைக்குரிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு போன்ற குணங்களும் அவளிடம் குடியிருந்தன. அந்தண குலத்தில் பிறந்த அவள் தான் பிறந்த வீட்டிற்கும், புகுந்த இடத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் அடக்கம், அன்பு, பகவத் பக்தி, பெரியவர்களுடன் மரியாதை, மாமனார், மாமியாரைத் தெய்வமாக மதிக்கும் பண்பு, எல்லாவற்றையும் விட ஜகத்ஜனனியான ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயாரிடம் மிகுந்த பக்தி கொண்டவளாகவும் இருந்தாள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அந்தி சாயும் வேளையில் பூஜை அறையில் தீபம் ஏற்றி, ஸ்ரீமஹா லக்ஷ்மியைத் தாமரை புஷ்பங்களால் அர்ச்சித்து, துதிகளால் பூஜித்து, தூப, தீப, நைவேத்தியம் செய்து கற்பூர ஆரத்தி காட்டி, அதன் பின்னர் தாயாரின் அருட்பிரசாதத்தை அனைவருக்கும் கொடுத்து, பின்பு தானும் உண்டாள். நம்முடைய தெய்வ வழிபாட்டில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் பூஜை முறையிலும் சரி; விதி முறைகளிலும் சரி: வெவ்வேறு விதமாக சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. ஸ்ரீமஹா விஷ்ணுவிற்கு உகந்த தளம் துளசி. துளசியால் அர்ச்சிப்பது அந்த எம்பெருமானுக்குப் பிரீதியானது. சிவ பெருமானுக்கு வில்வம், விநாயகப் பெருமானுக்கு எருக்கமாலையும், அருகம் புல்லும், சக்தியின் ஸ்வரூபமான அம்மனுக்கு மல்லிகைப்

பூவும், வேப்பிலையும். அதுபோல ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு உகந்தது தாமரைப் புஷ்பங்களும், மாவிலையும்.

ஒரு நாள் இரவு சாருமதியின் கனவில் ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயார் பிரசன்னமானாள். “ஆவணி மாதம் பௌர்ணமிக்கு முன்பாக வருகின்ற சுக்ல பக்ஷ வெள்ளிக்கிழமையில் ஸ்ரீவரலக்ஷ்மி விரதம் இருந்து, பூஜையறையில் ஒரு கலசத்தில் தன்னை ஆவாஹணம் செய்து, தனது திருநாமங்களைச் சொல்லி, புஷ்பங்களால் அர்ச்சித்து, பூஜை முடிந்ததும் சுமங்கலிப் பெண்களுக்குத் தக்ஷிணையுடன், வெற்றிலை பாக்கு மஞ்சள் வைத்து தாம்பூலம் அளித்தால் சகல ஐச்வர்யங்களும் சேரும்” என திருவாய் மலர்ந்தருளினாள்.

கண் விழித்து எழுந்த சாருமதி மகிழ்ச்சியுடனும், பூரிப்புடனும் விடியற்காலையில் தான் கண்ட கனவைப் புகுந்த வீட்டிலிருந்த அனைவருக்கும் கூற, அவர்களும் வியந்து சாருமதியைத் தாயார் உரைத்தபடி “ஸ்ரீவரலக்ஷ்மி விரதம்” இருந்து பூஜிக்கும்படி சொல்ல, பக்தியுடன் அந்த விரதத்தைக் கடைப்பிடித்த சாருமதி சகல சௌபாக்யங்களையும் பெற்றதாக ஸ்ரீலக்ஷ்மி புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அந்த வெள்ளிக்கிழமையன்று பெண்கள் அதிகாலையிலேயே நீராடி, தங்கள் இல்லங்களை மெழுகி, கோலமிட்டு, மாவிலைத் தோரணங்கள் கட்டி, பூஜையறையில் தீபமேற்றி, ஒரு தாம்பாளத்தில் அரிசி, அதன் நடுவே ஒரு கலசத்தில் மங்கல நீரை நிரப்பி, அதன் மீது மாவிலைகளுக்கு நடுவில் பூரண கும்பமாகத் தேங்காயை வைத்து, மஞ்சள், குங்குமம் இட்டு புஷ்பங்களால் அலங்காரம் செய்கிறார்கள். அந்த கலசத்தின் முன்பாக ஸ்ரீவரலக்ஷ்மி தேவியின் முக பிம்பத்தை வைத்து, அர்க்கியம், பாத்யம், ஆசமனீயம் போன்ற ஷோடஸ உபசாரங்களைச் செய்து பொன்னாலான ஆபரணங்களை அணிவித்து அதில் தேவியை ஆவாஹணம் செய்கிறார்கள்.

பின்பு ஸ்ரீமஹாலக்ஷ்மியின் ஸஹஸ்ர நாமங்களை ஜபித்தபடி புஷ்பத்தால் அர்ச்சனை செய்து, நைவேத்தியத்துடன் தூப, தீப, ஆரத்தி காட்டிப் பூஜையை நிறைவு செய்கிறார்கள். பின்பு சுமங்கலிப் பெண்களுக்குத் தக்ஷிணையோடு, தாம்பூலம் அளித்து, அவர்களை வணங்கி ஆசி பெறுகிறார்கள். காலம் காலமாக இன பேதம், மொழி பேதம் ஏதுமின்றி சுமங்கலிப் பெண்கள்



செய்து வரும் பூஜை “ஸ்ரீவரலக்ஷ்மி விரதம்” என்று சொன்னால் மிகையில்லை.

இந்த “ஸ்ரீவரலக்ஷ்மி விரத” சுபதினத்தை முன்னிட்டு கலியுகத் தெய்வமாம் திருவேங்கடமுடையானின் தர்ம பத்தினியும், பட்ட மகிஷியுமாக விளங்கும் ஸ்ரீபத்மாவதி எனும் ஸ்ரீஅலர்மேல்மங்கைத் தாயாரின் திருக்கோவிலில் திருச்சானூர் எனும் அலர்மேல்மங்காபுரத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் மேற்பார்வையில் பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த பூஜை வெகு விமரிசையாக ஆண்டுதோறும் ஆவணி மாதம் சுக்லபக்ஷ வெள்ளிக்கிழமையன்று நடைபெறுகிறது.

ஸ்ரீபத்மாவதித் தாயாரை அலங்கரிக்கப்பட்ட மண்டபத்திற்கு எழுந்தருளப் பண்ணி, கலசத்தில் ஆவாஹணம் பண்ணி, ஸ்ரீலக்ஷ்மி ஸஹஸ்ர நாமங்களைச் சொல்லியபடி குங்கு மார்ச்சனையும், புஷ்பார்ச்சனையும் செய்து, தூப, தீப, ஆரத்தி காட்டி பூஜை செய்கிறார்கள். பின்பு ஸ்ரீவரலக்ஷ்மி விரத மகியை கதா காலக்ஷேபமாகப் பக்தர்களுக்குச் சொல்லுகிறார்கள். இதில் திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரியுடன் கோவில் நிர்வாகிகளும், பக்தர்களும் கலந்து கொண்டு தாயாரின் திருவருளைப் பெறுகிறார்கள்.

*“அழகு தவழும் முகம் கண்டேன், அன்பு கனியும் கரம் கண்டேன்*
*கருணை பொழியும் கண்கள் கண்டேன்; கமலமலர்ப்பதங்கள் கண்டேன்*
*அலைகடல் தந்த அமுதினைக் கண்டேன்; ஆதிதேவி அன்னையைக் கண்டேன்*
*மலர்க்கண் மால் மகிழ் மங்கையைக் கண்டேன், மங்கலம் எங்கிலும் பொங்கிடக் கண்டேன்.”*

–ஸ்ரீவரலக்ஷ்மி துதி




திருநாங்கூர் ஜீ. சௌந்திரராஜன் பட்டாசாரி,
புதுடில்லி

நந்தவனமே வாசனையுடனும், கண் பார்வைக்கு பச்சையான பசுமை நிறத்தால் குளுமை தருவதாலும், நந்தனான ஸ்ரீகண்ண னுக்கும், ஸ்ரீசாளக்கிராம மூர்த்தங்களுக்குமே தன்னை ஆராதிக்க வேண்டும் என்றபடி ஸ்ரீவிஷ்ணுவிடத்தில் வரம் பெற்றதாலும் நந்தனவன சுந்தரி என்ற பெயரை துளசி பெற் றது. நந்தன வனத்தில் ஜாதி புஷ்பம், மல் லிகை, மாலதி செண்பகம், நீலோத்பலம், பாரி ஜாதம், ரோஜா போன்ற விசேஷமான புஷ்பங் கள் இருந்தாலும் துளசி ஒன்றே மஹா விஷ்ணுவிற்கு மிகவும் பிடித்தமானபடியால் நந்தவன சுந்தரி பெருமை பெற்றாள். பதார்த்த குண சிந்தாமணி என்ற நூலில்

"ஐயம் வயிறுளைச்சல் அஸ்திசுரந்தாகமும் போம்
பையசுர மாந்தம் பறக்குங்காண் - மெய்யாக
வாயின் அரோசகம்போம் வன்காரஞ் சூடுள்ள
தூய துளசிதனைச் சொல்"

என்ற செய்யுள்படி மனிதர்களுக்கும் மருந்துப் பொரு ளாகவும் அமைகிறது. துளசியை நம் இஷ்டப்படி பறிக்கக் கூடாது. அதற்கும் மந்தி ரம் சொல்லி துளசி செடியின் சம்மதம் பெற்றுக் கொண்டு தளம் தளமாக இதழ்களாக பறிக்க வேண்டும்.

"துளஸ்யாம் அம்ருத ஜன்மாஸி சதா த்வம் கேசவ ப்ரிய |
கேசவார்த்தம் சிநோமி த்வாம் வரதா பவ சோபனே ||"

என்று "துளசி மாதாவே நீ எப்போதும் கேசவ நாம ஜபம் செய்கிறாய், அந்த கேசவனுக்கு திருவாராதனம் செய்வதற் காகவே உன்னை எடுத்துக்கொண்டு போகிறேன்" என்று சம்மதம் பெற்று பறிக்க வேண்டும். துளசி வாசனையுடனும், கார்ப்பு சுவையுடனும் கிருஷ்ண துளசி, ராம துளசி, செந் துளசி, கற்பூர துளசி, கருந்துளசி எனப் பல வகைகள் உண்டு. துளசி உள்ள இடத்தில் விஷ ஜந்துக்கள், ஈ, கொசு வராது. சம அளவு துளசியும் சிறிது உப்பும் கலந்து படை என்ற சரும வியாதி மீது தடவினால் உடனே குணமாகிறது. "வேம்பும் துளசியும் வீணாகாது" என்ற பழமொழியும் உண்டு.

வெள்ளிக்கிழமை, பருவகாலங்கள், சங்கரமண காலம், மாலைநேரம், தீட்டு இருக்கும் சமயங்களில் பறிப்பது கூடாது. அப்படி பறித்தால் அந்த துளசி செடி மாண்டு விடும். வளராது. துளசி உள்ள இடத்திற்கு தீட்டு உள்ளவர்கள் போகக் கூடாது. துளசி மட்டும் பறித்து பல நாட்கள் ஆனாலும் மஹா விஷ்ணு ஆராதனத்திற்கு உகந்தது ஆகும். புஷ்பங்கள் ஒரு நாள் மட்டுமே உதவும். ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள் துளசி மணி மாலைகளும், தாமரை மணி மாலையும் அணிந்து பூஜை கள் செய்வர். தொண்டரடிப்பொடி ஆழ்வார், பெரியாழ்வார் போன்ற மகான்கள் பெருமாளுக்கு துளசி மாலை கட்டி சாத்தி பெருமை அடைந்தார்கள் எனலாம். துளசி செடியை வைத்து நியமபடி பூஜை செய்வதால் சகல வித நன்மைகளைப் பெற லாம். ஸ்ரீருக்மணி, ஸ்ரீகண்ணபிரானை அடைய துளசி பூஜை கள் செய்ததாக வரலாறு கூறுகிறது.

பவித்திரமான துளசி மாடம் எல்லா வீடுகளிலும் அமைத்து பூஜிப்பதும் வழக்கமாக உள்ளது. பெருமாளு டைய பஞ்சாயுதங்களான சங்கு சக்கரம் கதை போன்றவை கள் ஒரே இடத்தில்தான் இருந்து சேவை செய்யும். பெருமாள் திருமுடி முதல் திருவடி வரையிலும் மாலையாக துளசி ஒன்றே அலங்காரம் செய்யப்படுவதால் பெருமையுடன் போற் றப்படுகிறது. எம்பெருமானுக்கு போஜ்யாஸனம் சமர்ப் பிக்கும் போது தளிகை பிரசாதங்களில் துளசி சேர்த்து தான் அமுது செய்விக்கப்படுகிறது. அப்படி சேர்த்த துளசி இதழ்களால் பிரசாதங்கள் என்ற பெருமை உண்டாகிறது. பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் பத்ரம், புஷ்பம், பலம், தோயம் என்று கூறியபடி துளசி யின் பெருமையை சொல்லி

இருக்கிறார். மஹா விஷ்ணுவிற்கு மிகவும் பிடித்த மான துளசி மாலையை சமர்ப்பணம் செய்வதால் நாம் எல்லா நன்மைகளை யும் அடைந்து விட முடியும்.

மஹாவிஷ்ணு திருமஞ்சனம் நடைபெறும் காலம் பெருமாளுக்கு சந்தனக்காப்பு சாற்றி, துளசி மாலைகள் சாற்றி திருமஞ்சன கட்டியம் படிப்பார்கள். அதில் என் பக்தர்கள் என்னிடம் மிகவும் சிரத்தையுடனும் நம்பிக்கையுடனும் நடந்து கொள்கிறார்கள் என்று பெருமாளே சத்யம் செய்து தருவதாக (சிலேடை) பெருமையுடன் அமைந்துள்ளது.

பலவிதமான புஷ்பங்கள், பழங்கள், விசேஷ தளிகைகள் பாராயணாதிகள் செய்தும் யாகங்கள் செய்த பலன்களும் தூய உள்ளத்துடன் ஒரே ஒரு துளசி இலையை ஸ்ரீவிஷ்ணுவிற்கு சமர்ப்பித்தால் கிடைத்து விடும். துளசி பூஜையால் ஆயுள் வளரும், புகழ் உண்டாகும், செல்வம், புத்ர சந்தானம் பெறலாம். துளசி வனம், பசுமாடுகள் உள்ள இடம், அரச மரநிழல் போன்ற இடங்களில் ஜபம் செய்ய உடனே பலன் தரும்.






**துன்பங்களிலிருந்து மீளவும் நல்ல பலன்களைப் பெறவும் நாக தேவதைகளை மனம் உருகி வழிபட வேண்டும். நாக தேவதைகளின் அருளால் தோஷங்கள் விலகி, நல்ல பலன்கள் பெறலாம் என்பது ஐதீகம். அதனால் நாக சதுர்த்தி/பஞ்சமி, அல்லது வெள்ளிக்கிழமைகளிலோ நாக சிலைக்கு அபிஷேகம் செய்து மஞ்சள் – குங்குமம் வைத்து பூஜை செய்வதன் மூலம் நாக தோஷம் நீங்கும். மனம் உருகி வேண்டி பிரார்த்தனை செய்து வந்தால், நாக தோஷம் (அ) காலசர்ப்ப தோஷம் எதுவானாலும் நீங்கி உன்னதமான வாழ்க்கை அமையும்.**

**ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி மற்றும் பஞ்சமியில் சுமங்கலிகள் விரதம் இருந்து ஆதிசேஷனை வழிபட்டால் வேண்டிய பலன் கிடைக்கும். உடல் மனம் நலம் பெறும். சகலவிதமான செல்வங்களையும் பெறலாம். நாக சதுர்த்தி, நாக பஞ்சமி (அ) கருட பஞ்சமி ஆகிய விரதங்களை அவரவர்கள் தங்களது விருப்பம்போல மேற்கொள்ளலாம்.**

கலியுகத்தில் மஹாவிஷ்ணு, கிராமங்கள் தோறும் ஒவ்வொரு இல்லத்திலும் ஆலயங்களிலும் அர்ச்சை திருமேனியாக இருப்பேன். அப்படிப்பட்ட விக்ரக ஆராதனையில் துளசி என்கிற உனது இலை களைக் கொண்டு பூஜிப்பவர்கள் சிறந்த பயன் பெறு வார்கள் என்று விஷ்ணு கூறினார். பசுவின் பாலும், பசும் துளசியினுடைய இதழ்களும் ஸ்ரீசாளக்கிராம மூர்த்தங்களுக்கு சந்தோஷத்தை உண்டாக்கு கிறது.

கலி காலத்தில் துளசி பூஜையும், துளசி மஹாத்மியத்தை படித்து தெரிந்துக்கொண்டு ஆஸ்தீகர்கட்கு கூறுவதாலும், துளசி வளர்ப்பதாலும், நல்ல பேரின்பத்தை மனிதன் பெறுகிறான்.

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்திலே, பூஜைகள் செய்யும் அர்ச்சகர் ஏழு வித ஸ்நானங்கள் செய்து உடம்பை சுத்தி செய்துக் கொண்டு கோவில்களுக்கு உள்ளே வரலாம் என்று கூறப்பட்டுள்ளது. தேசிகோ, வாருண, திவ்ய அக்னி, வாயவ்ய, மாந்ர, மானஸாபி என்று கூறுகிற சமயம் துளசி செடியில் தண்ணீர் சேர்த்து அந்த தீர்த்தத்தை புரோக்ஷணம் செய்தும் சுத்தி அடையலாம் என்கிறது. பசுமாடு நடந்த இடம் உள்ள மண்ணை எடுத்து ஜலம் சேர்த்து புரோக்ஷணம் செய்வதும் சுத்தமாகிறது.

எப்படி பார்த்தாலும் நந்தன வன சுந்தரியான துளசி கலியுகத்தில் அர்ச்சாமூர்த்தியான மஹா விஷ்ணுவிற்கே தன்னை அர்ப்பித்து பெருமை பெறுகிறாள் என்று கூறலாம்.

*"தீயில் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி*
*திகழ் திருச்சக்கரத்தின்*
*கோயில் பொறியாலே ஒற்றுண்டு நின்று குடிகுடி*
*ஆட்செய்கின்றோம்*
*மாயப்பொருபடைவாணனை ஆயிரம் தோளும்*
*பொழிகுருதி*
*பாய சுழற்றிய ஆழி வல்லானுக்குப் பல்லாண்டு*
*கூறுதுமே"*

– பெரியாழ்வார்

திருமாலின் ஆயுதமான திருச்சக்கரத்தை சுதர்சனாழ்வார் என்றே போற்றுவோம். "சுதர்ஸனம்" என்றால் திவ்யமான மங்களமான தரிசனம் என்றே பொருள். இவரை தியானம் செய்தால் எந்த துன்பங்களும் அண்டாது.

**சக்கரத்தாழ்வாரின் தோற்றம் :**

இவர் விஷ்ணுவின் அம்சமாகவும் விளங்குகிறார். இவருடைய தோற்றம் பல புராணங்களில் கூறப்பட்டுள்ளது. தேவசிற்பியான விஷ்வகர்மா சூரியனின் கதிர்துளிகளை வைத்து இவரை தோற்றுவித்தார். மற்றொரு கதை, சிவபெருமான் மஹா விஷ்ணுவின் சிவ பக்தியை மெச்சி அவருக்கு அசுரர்களை அழிப்பதற்கே இவரை தோற்றுவித்தார். இவருடைய மனைவியின் பெயர் விஜய வல்லி. சுதர்சன ஹோமம் செய்யும்போது, தாயாரையும் சேர்த்து பூஜிப்பார்கள்.

**சக்கரத்தாழ்வாரின் திவ்ய வடிவம் :**

இவர் நூறு லக்ஷ கூர்மையான வடிவம் கொண்டு இரண்டு வரிசையாக நேர்மாறி திசையில் இருப்பார். நடு பகுதி வஜ்ரத்தால் செய்யப்பட்டவை. இவருடைய வேகம் கணக்கிட முடியாது. இவருடைய கனம் மிக மிக குறைவானது. மஹா விஷ்ணுவைத் தவிர வேறு யாராலும் பயன்படுத்த முடியாது. எதிரியை முடித்த பின், விட்ட இடத்திற்கே திரும்பவும் வந்து விடும். இவர் வெப்பமாகவும் எதிரிகளை சுட்டெரிக்கும் வல்லமையும் பெற்றவர். இவரை ஏவும் பொழுதோ அல்லது சுழலும் பொழுதோ சத்தம் ஏற்படாது.

**அவதாரங்களில் சக்கரத்தாழ்வார் :**

*"மீன் அமர் பொய்கை நாள்மலர் கொய்வான்*
*வேட்கையினோடு சென்று இழிந்த*
*கான் அமர் வேழம் கை எடுத்து அலறக் கரா அதன்*
*காலினைக் கதுவ*
*ஆனையின் துயரம் தீரப் புள் ஊர்ந்து சென்று நின்று*
*ஆழிதொட்டானை*
*தேன் அமர் சோலை மாட மா மயிலைத்*
*திருவல்லிக்கேணிக் கண்டேனே"*

–திருமங்கையாழ்வார்

கஜேந்திரன் என்ற ஆணையைக் காக்க ஓடோடி வந்த பரந்தாமன் தன் ஆழிவிட்டு முதலையின் கழுத்தை அறுத்தார்.

கூர்மாவதாரத்தில், மந்திர மலையின் ஒரு பகுதியை நேமியால் அறுத்து அமுது கடைவதற்காக கொண்டு வந்தார். அதே நேரத்தில் அமுதத்தை இராகு கேது ஏமாற்றி உண்ட பொழுது ஆழிவிட்டு நாக்கை அறுத்தார்.

வராஹ அவதாரத்தில் தன்னுடைய கொம்பினால் ஹிரண்யாக்ஷனை கொன்று பூமி தேவியைக் காத்தார். கொம்பில் சுதர்சனாழ்வாரானார்.

நரசிம்ம அவதாரத்தில் தன் நகங்களால் ஹிரண்யகசிபுவைக் கொன்று பக்த ப்ரஹலா



# சுடர் ஆழியும் பல்லாண்டே

திருமதி. டி.எஸ். ராஜலஷ்மி, திருவனந்தபுரம்.

தனை காத்தார். அவர் நகங்களில் சுதர்சனாழ்வார் பிரவேசித்தார்.

பரசுராமாவதாரத்தில் தன்னுடைய கோடாளியில் சக்கரத்தாழ்வார் பிரவேசித்தார்.

இராமாவதாரத்தில் சூரிய குலத்தை சேர்ந்த அம்பரீசனுக்கு விஷ்ணு தன் சக்கரத்தாழ்வாரை கொடுத்து அவன் நாட்டை காக்கும்படி கூறினார். ஒரு முறை த்வாதசி அன்று துர்வாச முனிவரால் ஏவப்பட்ட அசுரனை, சக்கரத்தாழ்வார் முடித்து, துர்வாச முனிவரின் அகங்காரத்தை அழித்தார்.

கிருஷ்ணாவதாரத்தில் கோவர்த்தனகிரியை குடையாகப் பிடித்து அதன் கீழே தன் விரலில் சக்கரத் தாழ்வாரை நிருத்தி ஊர் மக்களைக் காத்தார். ராஜசூய யாகத்தில் சிசுபாலனின் கடும் சொற்கள் தாளாமல் தன் சக்கராயுதத்தால் அவனைக் கொன்றார். அர்ஜுனனின் சபதம் நிறைவேர, தன் ஆழியால் சூரியனின் ஒளியைக் கட்டுப்படுத்தி ஜெயத்ரதனைக் கொல்ல உதவினார்.

சிவபெருமானின் ஸதிதேவி : சிவபெருமான் மனைவி ஸதிதேவி தக்ஷனின் யாகத்தீயில் உயிர்நீத்தாள். அவளுடைய உடலை 51 பாகமாகப் பிரித்தார் சிவன். விஷ்ணு தன் சுதர்ஸன சக்கரத்தால் 51 சக்தி பீடங்களாக உண்டாகச் செய்தார்.

ஆழ்வாரும் – சுதர்சனாயுதமும் : திருமழிசை ஆழ்வார் சுதர்சன சக்கரத்தின் அம்சமாவார். அவருடைய பாடல்கள் பகவானை அந்தர் ஆத்மாவாகவும், மிக மிக பளிச்சென்று கருத்துடனும் உள்ளன. மற்ற எல்லா ஆழ்வார்களும் தம் பாசுரங்களில் சுதர்சன பெருமானின் திவ்யத்துவத்தை போற்றியுள்ளனர்.

பெரியாழ்வார் தன் முதல் பாசுரத்தில் **''சுடர் ஆழியும் பல்லாண்டே''** என்று கூறியுள்ளார்.

திருமழிசையாழ்வார் தன் அக்கரங்கள் பாசுரத்தில் **''சக்கரம் கொள்கையனே''** என்று கூறியுள்ளார்.

நம்மாழ்வார் திருக்குறுங்குடி நம்பியைக் கண்ட பாசுரத்தில் **''சங்கினோடும் நேமியோடும் செல்கின்ற என் நெஞ்சமே''** என்றும், ஆண்டாள் தன் திருப்பாவையில் **''ஆழி மழைக்கண்ணா''** என்றும் கூறியுள்ளனர்.

திருப்பாணாழ்வார் தன் அமலனாதிபிரானில், **''கையின் ஆர் சூரி சங்கு அனலாழியர் நீள் வரைபோல்''** என்கிறார். இப்படி பல ஆழ்வார்கள் சக்கரத்தாழ்வாரின் சிறப்பைப் பாடியுள்ளனர்.

**கலியுகத்தில் சக்கரத்தாழ்வாரின் ஸ்தோத்திரங்கள் :**

சுவாமி தேசிகன் காஞ்சி அருகில் உள்ள திருபுட்குழி என்ற திவ்ய தேசத்தில் நோயினால் வாடிய மக்களுக்கு



பக்தர்கள் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் பல்வேறு சேவைகள், விவரங்கள் குறித்து அறிய கீழ்காணும் இலவச எண்களில் தொடர்பு கொள்ளவும்.
- 1800-425-4141 / 1800-425-111111

"சுதர்சனாஷ்டகம்" என்ற உயர்ந்த சுலோகத்தை அருளினார். இதை அருளிய பிறகு அவ்வூரை பிடித்திருந்த கொடிய நோய் விலகியது. இச்சுலோகம் சுதர்ஸன ஆழ்வாரின் பெருமையை கூறுகின்றன. *''ஜய ஜய ஸ்ரீஸுதர்சன'' ''ஜய ஜய ஸ்ரீஸுதர்சன''* என்று முடியும் எட்டு பாடல்களை சமர்ப்பித்தார்.

மாதவாசார்யார், "சுதர்சன சத நாம ஸ்தோத்திரம்" அருளினார். இதில் நரசிம்ம பெருமாளைப் பற்றியும் சக்கரத்தாழ்வாரின் சிறப்பு வீர்யத்தை கூறியுள்ளார். இவரை வணங்கினால் தீ சுட்டெரிப்பது போல் துன்பங்களை சுட்டெரித்து சாம்பலாக்கும் என்று கூறியுள்ளார்.

பஞ்சாயுத ஸ்தோத்திரத்தில், முதலில் சக்கரத்தாழ்வாரின் பெருமையைக் கூறி மற்ற ஆயுதங்களை போற்றியுள்ளார். ஏனெனில் சக்கராயுதத்திற்கான எதிர் ஆயுதம் இல்லை. அதை ஏவினால் யாராலும் எதிர் கொள்ள முடியாது.

### நரசிம்ம பெருமானும் சக்கரத்தாழ்வாரும் :

அனைத்து ஆலயங்களிலும் நாம் சக்கரத்தாழ்வாருக்குப் பின்னால் நரசிம்ம மூர்த்தியை தரிசிக்கலாம். இதன் பொருள், மஹா விஷ்ணுவின் சாந்த ரூபம் லக்ஷ்மி நாராயணர், ஆனால் உக்ர ரூபம் ஸ்ரீநரசிம்ம பெருமாள், அதனால் பகவானின் ஆயுதமான சக்கரம் நரசிம்ம பெருமானுடைய ரூபமாகவே விளங்குகிறது.

### சக்கர ஸ்நானம் :

வைணவ ஆலயங்களில் பிரம்மோத்ஸவத்தின் முடிவில் சக்கர ஸ்நானம் மிக மிக முக்கியமானவை. சக்கரத்தாழ்வாரை புனித நதி அல்லது குளத்திலோ அபிஷேகம் செய்து நீராட வைப்பார்கள். இவ்வாறு செய்தால் எல்லா தோஷங்களும் நீங்கும் என்பது ஐதீகம். சில கோயில்களில் சிறப்பான பல்லக்கில் பெருமாள் புறப்பாட்டிற்கு முன்பு சக்கரத்தாழ்வார் எழுந்து அருளுவார்.

### சக்கரத்தாழ்வாரின் கோயில்கள் :

ஸ்ரீரங்கம், திருமோகூர், காஞ்சி தேவப்பெருமாள், நாச்சியார் கோயில் சிறப்புற்றவை. திருமோகூர் சக்கரத்தாழ்வார் 16 கைகளுடன் பல ஆயுதம் ஏந்தி அருள் பாலிக்கிறார். திருநறையூர் நாச்சியார் கோயிலில் ரிஷி மேதாவிற்கு ஸ்நானம் செய்யும் போது அந்த நதிக்கரையில் சக்கரத்தாழ்வாருடன் நரசிம்மரைக் கண்டெடுத்து பிரதிஷ்டை செய்தார்.

திருமாலிருஞ்சோலை, பிரம்மோத்ஸவத்தில் சக்கரத்தாழ்வார் மட்டும் "பதினெட்டாம் படி" புறப்பாடாக பெரிய கோபுரத்தின் வழியாக சேவை சாதிப்பார். அவ்வூர் பெருமாள் அழகர் கூட சிறிய கோபுர வாசல் வழியாகத்தான் செல்வது ஐதீகம். வடக்கே பூரி ஜெகன்நாதர் ஆலய கோபுரத்தில் மிக பிரம்மாண்டமான முறையில் சக்கரத்தாழ்வாரை பிரதிஷ்டை செய்துள்ளனர். "நீல சக்கரம்" என்னும் எட்டு விதமான உலோகங்களோடு 214 அடி உயரத்தில் மிக கம்பீரமாகக் சக்கரதாழ்வார் காட்சி அளிக்கிறார்.

பெருமாள் கோயில்களில் விஷ்ணுவை போற்றும் போது சக்கரத்தாழ்வாரையும் சேர்த்து போற்றுவது வழக்கம். ஏனெனில் பகவான் விஷ்ணுவே சுதர்சன ஆழ்வாராக உள்ளார் என்பது திண்ணம். நாமும் எல்லாம் வல்ல திவ்ய மங்கள ஸ்வரூபியான சக்கரத்தாழ்வாரின் அனுக்ரகத்தை பெறுவோமாக.

*''ஓம் சுதர்சனாய வித்மஹே சக்ரராஜாய தீமஹி*
*தன்னோ சக்ர ப்ரசோதயாத்''*

## சிறுவர் பகுதி விடைகள்

1. கருடன்.
2. சிவபெருமான்.
3. திருக்கண்டியூர்.
4. சரஸ்வதி தேவி.
5. நம்மாழ்வார்.
6. ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமி (ஆராவமுதன்).
7. ஸ்ரீபெரும்புதூர்.
8. வானமாமலை (நாங்குநேரி).
9. மன்னார்குடி.
10. குலசேகராழ்வார்.

தொகுப்பு : ஜெ. அனகா, மன்னார்குடி.

கருட பஞ்சமி

# திருவாய் மொழியில் பெரிய திருவடி





திரு. ஏ.கே. கோபி,
கள்ளக்குறிச்சி.

நம்மாழ்வார் தம்முடைய திருவாய் மொழிப் பாசுரங்களில் வெங்கண் பறவை, ஆடல் பறவை, காய்சினப் பறவை, செழும்பறவை என பெரிய திருவடியான கருடனின் தோற்றப் பொலிவை அனுபவித்து பதிவு செய்தருளியுள்ளார்.

**ஆடல் பறவை :**

*"கூடச்சென்றேன் இனி என்கொடுக்கேன்?*
*கோல்வளை நெஞ்சத் தொடக்கமெல்லாம்*
*பாடாற்றொழிய இழந்து வைகல் பல்வளையார்*
*முன்பரிசழிந்தேன்*
*மாடக்கொடிமதிள் தென்குளந்தைவண்குடபால்*
*நின்ற மாயக்கூத்தன்*
*ஆடற்பறவை உயர்த்த வெல்போர்*
*ஆழிவலவனை ஆதரித்தே"*

ஆழ்வார் திருநகரியை சுற்றியுள்ள நவதிருப்பதிகளுள் ஒன்றான தென் குளந்தை எனப்படும் பெருங்குளம் திவ்ய தேசத்து எம்பெருமான் திருநாமம் மாயக் கூத்தன். மனத்தால் நினைக்கவொண்ணா மாயங்கள் பல செய்து அடியார்களைக் காத்தருளும் திருவவதாரங்கள் செய்தருளும் திருமால் பகைவர்களை வெல்லும் பொருட்டு திருவாழியேந்தி கிளம்பு கையில் பெரிய திருவடியான கருடன் எம்பெருமான் தன் மீது எழுந்தருளி ஆஸ்ரிதர்களை காத்த ருளப் புறப்படப்போவதை நினைத் துக்கொண்டு மகிழ்ச்சியின் கனத் தாலே சிறகை அழகுற விரித்துக் கூத் தாட்டம் செய்யுமாம். காளியன் உச்சி யில் களி நர்த்தனம் புரிந்த கிருஷ் ணக்கூத்தனை எண்ணி கருடப் பறவையாடும் பறவைக்கூத்து போலும். எம்பெருமான் கருடப் பறவை மீது ஏறியதுமே சிறகடித்துப் புறப்பட்டு தொடர்ந்து வானின்மீது உயரே உயரே சிறகழுத்தி உந்திச் சென்று வேகமெடுப்பதை நம்மாழ்வார் இப்பாசுரத்தில் அனுப விக்கிறார். நாயகி பாவனையில் பராங்குச நாயகி தன்னையே மாயக் கூத்தனுக்கு பரிமாற முடி வெடுத்தபின் அவனுக்குப் பரி மாற மற்றொரு பொருள் தன்னி டத்திலே காணக் கிடைக்காது எனும்படி மாயக்கூத்தனை எண்ணி தன் நெஞ்சம் உள்ளிட்ட அவயவங்கள் அனைத்தும் தன் வச மின்றி தளர்ந்து இயல்பு மாறிப் போயிற்று என்கிறார்.

*"கூடிற்றாகில் நல்லுறைப்புக் கூடாமையைக் கூடினால்*
*ஆடற்பறவையுயர் கொடி எம்மாயனாவதது அதுவே*
*வீடைப் பண்ணியொரு பரிசே எதிர்வும் நிகழ்வும் கழிவுமாய்*
*ஓடித் திரியும் யோகிகளும் உளருமில்லையல்லரே"*

விசிஷ்டாத்வைத தத்துவமான பரமாத்ம ஜீவாத்மாக்களுக்கு பேதமே ஒழிய ஐக்கியம் ஒரு நாளும் சம்பவிக்காது என்பதை இப்பாசுரம் வழியாக உலகத்தாருக்கு அறுதியிட்டு உபதேசிக்கிறார் சுவாமி நம்மாழ்வார். ஜீவனும் பரமனும் பேதமின்றி எப்பொழுது கூடுமென்னில் உலகில் சம்பவிக் காதவையான முயலுக்குக் கொம்பு முளைத்தல், ஆகாயத்தில் தாமரை மலருதல், மலடிப்பெண் மகனைப் பெற்றெடுத்தல் போன்றவை சம்பவித்தால் ஜீவாத்மா பரமாத்மாவாக முடியும் என நிர்வகிக்கிறார். சம்பவிக்காதது சம்ப வித்தால் பரமாத்மாவான எம்பெருமானுக்குரிய கருட வாகனத்வமும் ஜீவாத்மாவுக்கு வாய்க்குமே. இது எங்கேனும் நடக்குமா? "பரமாத்மாவின்




வாகனமேறும் யோக்யதை சேதனனான ஜீவனுக்கு என்றுமே வாய்க்காது என்பதையும், வேதாந்த தத்துவ உலகினை கருடக்கொடி பறக்கும் விசிஷ்டாத்வைதமே திருமாலை முழுமுதற் பரம்பொருளாகக் கொண்டு தன் னிகரற்றுத் திகழும் என்பதையும் அறுதியிடுகிறார். மோட் சமடைவதற்கு எளிதான வழியாய் வைணவ தத்வம் இருக்க காலம் அநாதி என்பதையும், செய்யும் கர்மாக் கள் அநாதி என்பதையும் உணராமல் முக்காலத்திலும் ஜனன மரண சக்கரத்தில் கிடந்துழலும் வேதத்திற்கு தவறான பொருள் கொண்டு மயங்கும் குத்ருஷ்டிகளான யோகிகளும் இவ்வுலகத்தில் இருக்கத்தானே செய்கின்றனர் என அவர்களுக்காக இரங்குகிறார் நம்மாழ்வார்.

**காய்சினப்பறவை :**

*''பவளம்போல் கனிவாய் சிவப்பநீ காணவந்து நின்பல்நிலாமுத்தம்*
*தவழ்கதிர் முறுவல்செய்து நின்திருக்கண் தாமரை தயங்க நின்றருளாய்*
*பவளநன் படர்க்கீழ்ச் சங்குறை பொருநல் தண்திருப்புளிங்குடிக் கிடந்தாய்!*
*கவளமா களிற்றினிடர்கெடத் தடத்துக் காய்சினப் பறவையூர்ந்தானே!''*

தாமிரபரணி நதியின் அடியாழத்தில் பவளங்கள் படர்ந்து அதன் கீழே வெண்மையான சங்குகள் பதிந்து ஒளிவீசும் திருப்புளியங்குடி திவ்ய தேசத்தில் திருக்கண் வளர்ந்தருளும் பெருமாளே நின் பவளம் போல் கனிந்து சிவந்த அதரத்தின் மீது நின் முத்துப் போன்ற பற்களின் ஒளிக்கதிர்கள் பட்டுத் தவழும்படி புன்முறுவல் செய்து, நின் தாமரைக் கண்களால் குளிர நோக்கி அருள வேணும் என பிரார்த்திக்கிறார். பெருமாளுக்கு அர்ச்சனை செய்து சமர்ப்பிக்க ஆசை கொண்டதாய் ஒரு செவ்விய தாமரை மலரினைப் பறிக்க ஒரு குளத்தின் கரையில் நின்று ஒரு காலினை குளத்தில் பதித்த யானையின் காலினை ஒரு முதலை கவ்விக் கொள்ள அதன் கூரியப்பற்களின் அழுத்தியப் பிடியிலிருந்து விடுபட யானை கரையினை நோக்கிக் காலினை இழுக்க, முதலை யானையினை விடாமல் குளத்திற்குள் இழுக்க, இந்த யுத்தம் பல ஆண்டுகள் நடந்தது. துதிக்கையில் தாமரை மலரோடு முதலையுடன் போராடிய யானையின் பலம் வெகுவாகக் குறைந்து, முதலை யானையை குளத்திற்குள் இழுத்து விடும் என்று முடிவான நேரத்தில், கஜேந்திரன் "ஆதி மூலமே ஸ்ரீமந்நாராயணா, காத்தருள்வாய்'' என துதிக்கையை வான்நோக்கி உயர்த்தி கதறிப் பிளிரியது. கை முதலில்லா கையறு நிலை சரணாகதிக்குத்தானே எம்பெருமான் காத்திருந்தான்.

முதலையினை சம்ஹாரம் செய்து யானையினைக் காப்பாற்ற பெரிய திருவடியான கருடாழ்வான் மீது ஆரோகணித்து வெகுவேகமாகச் செலுத்தினார். இந்த விடத்தில் வியாக்கியான கர்த்தாக்கள் கருடனின் வேகம் போதாது என்பதால் தானே கருடனைப் பற்றிக் கொண்டு வேகமாக விரைந்து குளத்தினையடைந்து ஆழிப்படை கொண்டு முதலையினை சம்ஹாரம் செய்து கஜேந்தி ராழ்வானை காப்பாற்றியருளினான் எம்பெருமான் என் பர். இத்திருக்காட்சியில் முதலையின் மீது பெருமாளுக்கு இருந்த சினம் போன்றே கருடனுக்கும் சினம் இருந்ததை நம்மாழ்வார் *''காய்சினப் பறவை ஊர்ந்தானே''* என அனுபவிக்கிறார்.

**வெங்கண் பறவை :**

*''நங்கள் வரிவளையாயங்காளோ! நம்முடை ஏதலர்முன்பு நாணி*
*நுங்கட்குயானொன்றுரைக்கும் மாற்றம் நோக்குகின்றேனெங்கும் காணமாட்டேன்*

*சங்கம் சரிந்தன சாயிழந்தேன் தடமுலை பொன்னிறமாய்த் தளர்ந் தேன்*
*வெங்கண்பறவையின் பாகனெங்கோன் வேங்கடவாணனை வேண்டிச் சென்றே''*

விரோதிகளை அழிக்க கருடப்பறவையின் மேல் ஆரோகணித்துவரும் எம்பெருமானின் கோபத்தினை உள்வாங்கிய கருடனின் கண்களும் சினந்து சிவந்து தானும் விரோதிகளின் மேல் வெவ்விய பார்வையை செலுத்தி விரோதிகளை முடிக்கத் துணைபுரியுமாம். அப்பொழுது அதனுடையக் கண்கள் மதம் கொண்ட யானையின் கண்கள் போலே நெருப்பினை கனன்ற வண்ணம் இருந்ததால் நம்மாழ்வாருக்கு பெரிய திருவடி ஒரு யானையைப் போலவும் அதன்மீது ஆரோகணித்த பெருமாள் யானையினைச் செலுத்தும் பாகனாகிய அரசன் போலவும் தோன்றியதால் பெருமாளை "வெங்கண் பறவையின் பாகன்'' என்கிறார் போலும். அத்தகைய வெங்கண் பறவையான பெரிய திருவடியே அடியேனைப் பெருமாளுடன் கலக்கவொட் டாமல் தடுக்கும் விரோதிகளின் மேல் உன்னுடைய வெவ்விய சினப்பார்வையை செலுத்தி அவர்களை அழித்து பெருமாளை வெகு சீக்கிரமே என்னிடம் கொண்டு வந்து சேர் என நாயகி பெருமாளைக் கலக்க அனுகூலம் செய்பவன் பெரிய திருவடி எனும்படி ஒரு அர்த்தம்.



பெருமாள் பராங்குச நாயகியோடு கலந்து அனுபவித்து அருள் கொடுத்து பெரிய திருவடியின்மேல் புறப்பட திருவுள்ளம் பற்றும்போது பிரிவாற்றாமைத் துயரால் தவிக்கும் நாயகி தன்னிடமிருந்து பெருமாளை பிரித்துக் கொண்டு போகும் பெரிய திருவடியின் மேல் கோபம் கொண்டவளாய் தன்னுடையத் தவிப்புத் தெரியாத வெவ்விய குருடப் பார்வை கொண்டவன் எனும்படி மற்றொரு அர்த்தம். ஆயர்பாடியிலிருந்து கண்ணனை அக்ரூரர் மதுராவிற்கு தேரேற்றி அழைத்துக் கொண்டு போக பிரிவாற்றமைத் துயரால் கிருஷ்ணன் மேல் கோபம் கொள்ளாமல் அவனை அழைத்துச் செல்லும் அக்ரூரரைப் பார்த்து அக்ரூர க்ரூரஹிருதய எனக் கூறி வருந்தினார்களாம்.

## செழும் பறவை :

*''வானேறவழிதந்த வாட்டாற்றான் பணிவகையே*
*நானேறப்பெறுகின்றேன் நரகத்தை நகுநெஞ்சே!*
*தேனேறுமலர்த் துளவம் திகழ்பாதன் செழும்பறவை*
*தானேஏறித் திரிவான தாளிணை என் தலைமேலே''*

பகவான் ஸ்ரீபகவத் கீதையிலே *''சர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ அஹம்த்வா சர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஸுச;''* என்று திருவாய் மலர்ந்தருளினபடி திருவட்டாற்று எம்பெருமான் தன்னை அர்ச்சிராதிமார்க்கத்திலே ஸ்ரீவைகுந்தம் புகும் பேற்றினை விரைவிலேயே தந்தருள திருவுள்ளம் இசைவாகியிருப்பதை உணரும் ஆழ்வார் அதீத ஆனந்தம் அடைந்தவராய் தன்னுடைய உள்ளத்தைப் பார்த்து சம்சாரமாகிய இந்த நரகத்தைப் பார்த்துச் சிரி. சம்சாரமே உன்னை அடியறுத்தோம் என்று சொல்லிச் சிரி என்கிறார்.

சுவாமி பிள்ளையழகியப் மணவாளப் பெருமாளரையர் ஒரு வியாதி விசேஷத்தாலே மிகவும் நோவுபட்டிருந்தார். அவருக்கு ஸ்ரீரங்கநாதன் பரமபதமருளத் திருவுள்ளம் பற்றித் திருமாலை திருபரிவட்டம் முதலான வரிசைகளை வரவிட்டருளின வளவிலே *''நானேறப்பெறுகின்றேன் நரகத்தை நகுநெஞ்சே''* என்று இப்பாசுரத்தைச் சொல்லி நோயைப் பார்த்துச் சிரித்தாராம். பேறு கைவரப் பெற்றதென்று எதனை வைத்து ஆழ்வார் உறுதிபடக் கூறினார்? அடியார்களின் அத்யந்த சரணாகதி பக்தியினை மெச்சி அவர்களுக்கு நித்ய திருவாழ்வான வைகுந்தப் புருஷார்த்தமருள கருடப் பறவையின்மேல் ஆரோகணித்து மிகுந்த மகிழ்ச்சியுடனே அச்சேதனனை கைகொள்ள வரும்போது எம்பெருமானின் மகிழ்ச்சி பெரிய திருவடியையும் பற்றிக்கொள்ள, அந்தப் பேரானந்தத்தில் பெரிய திருவடியின் திருவுடல் விம்மிப்பருத்து செழுமையடைந்து பெருமாளை ஆனந்தத்தோடு எழுந்தருளச் செய்வதையே "செழும் பறவை" என்கிறார் ஆழ்வார். செழும்பறவை மீது ஆரோகணித்த எம்பெருமான் அணிந்திருந்த துளபமாலையானது மலர்கள் நிறைந்த அவன் திருவடிகளில் புரள, மலர்களில் இருந்த தேன் திருவடிகளில் பெருகி வழிய, மலரும், தேனும், துளபமும் கலந்து தவழ்ந்து மணம் வீசும் தன்னுடைய ஒளிவீசும் திருப்பாதங்களை பெரிய திருவடியின் மீது அமர்ந்த வண்ணமே ஆழ்வாரின் திருத்தலை மேலே பொருத்தி அர்ச்சிராதிமார்க்கத்தை தன் திருவடிகளின் வழியாகவே காட்டியருளுகிறான் எம்பெருமான் என்கிறார் சுவாமி நம்மாழ்வார்.



# ஸ்ரீராகவேந்திர ஸ்வாமி

திருவாளர் திம்மண பட்டர் மற்றும் திருமதி கோபிகாம்பா தம்பதியருக்கு இரண்டாவது குமாரராகப் பிறந்தவர் ஸ்ரீவேங்கடநாதன் என்னும் ஸ்ரீராகவேந்திரர். இவர் 1595 ஆம் ஆண்டு பால்குன(பங்குனி) மாதம் சுக்ல பக்ஷ நவமி வியாழக் கிழமை அன்று தமிழ்நாட்டில் உள்ள புவனகிரியில் (சிதம்பரம் அருகில்) பிறந்தார். எல்லா கலைகளையும் கற்றுணர்ந்து, சரஸ்வதிபாய் என்ற கன்னிகையை, குறித்த வயதில் மணம் புரிந்தார். கும்பகோணத்தில் மடாதிபதி சுதீந்திர தீர்த்தர் தனக்கு பின்பு மடத்தின் நிர்வாகத்தை ஒப்படைக்க ஸ்ரீவேங்கடநாதரை கேட்டார். தன் இளம் மனைவி, மகனை எண்ணி அதை ஏற்க மறுத்த ஸ்ரீவேங்கட நாதரின் கனவில் சரஸ்வதி தேவி தோன்றி சன்யா சாஸ்ரமத்திற்கு சம்மதம் கூறச் சொன்னார். தேவியின் ஆலோசனைப்படி சன்யாசம் ஏற்றுக்கொண்ட அவரை அன்புடன் “ஸ்ரீராகவேந்திர தீர்த்தர்” என்று அழைத்தனர். ஸ்ரீராகவேந்திரர் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டு துவைத சித்தாந் தத்தைப் பரப்பினார்.

ஆதோனி என்ற பகுதியை ஆண்டு வந்த சித்தி மசூத்கான் என்ற நவாப் ஸ்வாமியை சோதிக்க எண்ணி, தட்டில் மாமிசப்பொருட்களை வைத்து, துணியால் மூடி சமர்ப்பித்தார். ஸ்வாமி தன் கமண்டல நீரால் சுத்தம் செய்து அதை திறந்து காண்பிக்கும்படி கூறினார். என்ன அதிசயம்! தட்டு நிறைந்த கனிகளோடு காட்சியளித்தது. ஸ்ரீராமருக்கு அனைத்தையும் நைவேத்தியம் செய்து நவாபிற்கு கொடுத்தார். நவாப் தான் செய்த தவறை எண்ணி மன்னித்தருள வேண்டினான். நல்ல விளைச்சல் நிலத்தை அவருக்கு பரிசாக கொடுக்க முயன்றான். அது தனக்கு வேண்டாம் என்றும் ஸ்ரீராமர், சீதை, இலட்சுமண ஸ்வாமி நடந்த இடமான மாஞ்சாலம் (மந்திராலயம்) கிராமத்தை கேட்டார். அவ்வூரின் அருகில் மாதவரா கிராமத்தில் பிரஹலாதன் ஹோமம் செய்த ஹோம குண்டமான ஓர் பாறையை தனக்கு அளிக்குமாறு கேட்டார்.

மந்திராலயத்தில் தனக்கு பிருந்தாவனம் அமைக்கும்படி தன் சீடர்களுக்கு அறிவுறுத்தினார். 1671 ஆம் ஆண்டு சிராவண (ஆவணி) மாதம் கிருஷ்ண பக்ஷ துவிதை அன்று ஸ்ரீராகவேந்திரர் தியானத்தில் அமர்ந்து, எப்பொழுது தன் துளசிமாலை நிலையாக நிற்கிறதோ அப்பொழுது தன்னை சுற்றி கருப்பு பாறாங்கற்களை கொண்டு பிருந்தாவனம் அமைக்கக் கூறினார். அந்த பிருந்தாவனத்தில் 1,200 லஷ்மி நாராயண சாளக்கிராமங்கள் நேபாளத்தில் உள்ள கெண்டகி நதியிலிருந்து கொண்டு வந்து நிரப்பினார்கள். பிருந்தாவனம் கட்டி முடித்தனர். அவருடைய பிரிய சீடரான அப்பண்ணாசாரியார் ஸ்ரீராகவேந்திரர் வேறு வேலைக்காக துங்கபத்திராவின் அக்கரைக்கு அனுப்பினார். அவர் திரும்பும்போது துங்கபத்திராவில் வெள்ளம் பெருக்கெடுத்தது. அவர் ஸ்ரீராகவேந்திரரை நினைத்து “ஸ்ரீபூர்ண போத...” என்று தொடங்கும் சுலோகத்தைப் பாடினார். அவருக்கு துங்கபத்திரையும் வழிவிட்டது. அவரும் வேகமாக தன் குருநாதரை பார்க்க ஓடி வந்தார். ஆனால் அதற்குள் அவருடைய பிருந்தாவனம் கட்டி முடித்து விட, அவர் கலங்கிய கண்களோடு அந்த சுலோகத்தின் கடைசி வரிகளை கூற இயலாமல் இருந்தபொழுது, பிருந்தாவனத்தில் இருந்து ஸ்வாமியே அந்த வரிகளை கூறி சுலோகத்தை முடித்தார்.

அவர் பிருந்தாவனத்தில் அமரும் முன்னர் பக்தர்களுக்கு அருளிய பொன்மொழிகளில் சில... நற்சிந்தனையே நல்வாழ்விற்கு அடிகோலாகும். பொதுமக்களுக்கு செய்யும் சேவையே அந்த இறைவனுக்குச் செய்யும் சேவை. நம் வாழ்க்கையே வழிபாடு. அதில் ஒவ்வொரு நிகழ்வும் பூஜை. இவ்வாழ்வில் ஒவ்வொரு நொடியும் மிகவும் விலைமதிக்க இயலாதது. கடந்து போன காலம் திரும்பவும் கிடைக்காது. சாஸ்திரங்களின் வழியாக இறைவனை அறிதலே நமக்கு தலையாய கடமை. தன்னையே கடவுள், குரு என்று கூறும் மனிதர்களிடமிருந்து தூரமாக இருப்பது நல்லது. தியான சித்தி, சாஸ்திரத்தின் வாயிலாக இறைவனின் பெருமையை உலகறிய செய்ய இறைவனின் அருளால் செய்யும் அதிசயங்கள் அழிவில்லாதது. ஞானம் என்பது மகிமையை விட பெரியது. ஞானமில்லாமல் மகிமை என்பது நடைபெறாது. கடவுள் மீது பக்தி வைத்தல் வேண்டும். இந்த பக்தி எப்பொழுதும் மூடநம்பிக்கையாக இருத்தல் கூடாது. மூடநம்பிக்கை பக்தியாகாது. இது முட்டாள்தனமாகும். நமக்கு கடவுளின் பக்தி அவசியம். இத்தகைய மகிமை வாய்ந்த மகானான ஸ்ரீராகவேந்திரரை நாம் வணங்கி வாழ்வில் வளம் பெறலாம்.

– செல்வன். சி. வாசுதேவா, திருப்பதி.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்
திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
11-08-2019
முதல்
13-08-2019
வரை

## திருமலையப்ப ஸ்வாமிக்கு 2019 ஜூன் 14 முதல் 16 வரை வைபவமாக நடைபெற்ற ஜ்யேஷ்டாபிஷேகத் திருக்காட்சிகள்
















## 2019 ஜூன் 12 முதல் 16 வரை ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் தி.தி.தே. நிர்வகித்த பாலாலய, அஷ்டபந்தன, மஹாசம்ப்ரோக்ஷண திருக்காட்சிகள்



உபயதேவியருடன் எம்பெருமானுக்கு ஸ்நபன திருமஞ்சனம்



அஷ்டபந்தன லேகியத்தை சித்தப்படுத்தும் சித்திரம்



புனிதக்கலச நீருடன் தி.தி.தே. அர்ச்சகர்க்குழு, செயலாட்சித்தலைவர்



மஹாசாந்தி அபிஷேகம்



ஸ்வாமி கர்ப்பாலய சிகர மஹாசம்ப்ரோக்ஷண திருக்காட்சி



மஹாபூர்ணாஹுதி



ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம்
ஸ்ரீநிவாசமங்காபுரம்

## அப்பளாயகுண்ட்டாவில் 13-06-2019 முதல் 21-06-2019 வரை நடைபெற்ற ஸ்ரீப்ரசன்னவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்



துவஜாரோஹணம்



முத்துப்பந்தல் வாகனத்தில் உபயதேவியருடன் எம்பெருமான்



கல்பவிருக்ஷ வாகனத்தில் உபயதேவியருடன் எம்பெருமான்



சர்வபூபால வாகனத்தில் எம்பெருமான்



ஹம்ஸ வாகனத்தில் ஸ்ரீப்ரசன்னவேங்கடேஸ்வர ஸ்வாமி



சூரியப்பிரபை வாகனத்தில் எம்பெருமான்



அப்பளாயகுண்ட்டா புறவீதிகளில் எம்பெருமானின் திருத்தேர்



# திருவேங்கடவன் தோட்டோத்ஸவம்

பாண்டிய நாட்டில் மதுரைக்கு அண்மையில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில், ஸ்ரீவிஷ்ணு சித்தர் வீட்டு துளசி வனத்தில் ஆடி மாதம், சுக்ல சதுர்த்தி வளர்பிறை, செவ்வாய்க்கிழமை, பூரம் நட்சத்திரம், துலா லக்னத்தில் பூதேவி அம்சத்தோடு ஆண்டாள் கிடைக்கப்பெற்றாள். ஆகையால் ஆடி மாதம் பூரம் நட்சத்திரம் அன்று சாத்து முறை நிர்ணயித்து, அந்நாளிற்கு பத்து நாட்கள் முன் பிருந்தே உத்ஸவங்களை நடத்தி, பூரம் நட்சத்திர நாளன்று சாத்துமுறையை நிகழ்த்துவர். இதற்கு திருவாடிப்பூரம் சாத்துமுறை என்று பெயர்.

**திருவாடிப்பூரத்தின் சிறப்பு :**

வராஹ புராணம் ஸ்ரீவேங்கடாசல மஹாத்மியத்தில் அஷ்டோத்தர சத நாமாவளியில் *''கோவிந்தாய நமஸ்துப்யம் ஸ்ரீநிவாசாயதே நம:''* என்று திருவேங்கட வனை, ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமியோடு ஒன்றுபடுத்தி சொல்லப்பட்டுள்ளது. சிதம்பரம் காவேரி நதிக்கரையில் உள்ள சித்திரக்கூடம் எனும் தலத்தில் கொலுவீற்றிருந்த கோவிந்தராஜ ஸ்வாமியை ஒரே ஒரு காரணத்திற்காக திருமலை அடிவாரத்தில் உள்ள திருப்பதி நகரத்தில் ஸ்ரீபகவத் ராமாநுஜர் பிரதிஷ்டை செய்தார். ஸ்வாமியும்

தெலுங்கு மூலம் : திருமதி. உத்தரபல்குனி, திருப்பதி.
தமிழாக்கம் : திரு.வேங்கடரமணா, திருப்பதி.

அங்கே பக்தர்களின் வழிபாட்டைப் பெற்றுக் கொண்டார். அப்பொழுது பாஷ்யகாரர் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி, திருவேங்கடமுடையானை போன்று அனைத்து ஐச்வர் யங்களும் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணினார். அவ்வகையில் ஆழ்வார் புதல்வி ஆண்டாள் கையில் அல்லி மலரை தரிக்கும்படி செய்தும், திவ்ய ஐச்வர்யங் களுக்கு அடிப்படையான வ்யூக லக்ஷ்மிக்கு உரிய யந்திர மந்த்ரோத்தாரணம் முதலியவற்றை திவ்ய சிம்மாசனத் தில் செதுக்கப்பட வைத்தார். ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமியை இடப்புறம் வைகானச ஆகம விதிப்படி பிரதிஷ்டை செய்வித்து சமஸ்த ஐச்வர்யங்களையும் பெறுமாறு சங்கல்பித்தார்.

அவ்வகையில் ஸ்ரீகோதாதேவி தோன்றிய நாளான பூரம் நட்சத்திரத்தில், ஸ்ரீகோதா தேவியை ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமியுடன் சேர்த்து திருமலை அடிவாரம் அதா வது அலிபிரி மண்டபத்தில் திருவேங்கடமுடையானின் திவ்ய திருவடிகள் உள்ள இடத்தில் பிரதிஷ்டை செய்தார்.

**புரிசைவாரி தோட்டோத்ஸவம் :**

ஆடிப்பூரம் சாத்துமுறை அன்று மாலை திருமலையப்ப ஸ்வாமி புரிசைவாரி தோட்டத்தில் எழுந்தருள்வார். அதாவது திருமலைப்ப ஸ்வாமியை திருச்சி வாகனத்தில் மஹாபிரதக்ஷணமாக புரிசைவாரி தோட்டத்தில் உள்ள மண்டபத்தில் எழுந்தருளச் செய்வர். பின்னர் அங்கே ஆகம முறைப்படி பூஜைகள் நிவேதனம் செய்து, ஆரத்தியைத் தந்து, மகிழ மரம் அருகே நிறுத்தி, சேஷ ஆரத்தி, புஷ்பமாலை, சடாரி ஆகிய மரியாதைகளை மகிழ மரத்திற்குச் செய்வர். அர்ச்சகர் அந்த சடாரியை வாகனத்தில் வைத்துக் கொண்டு எடுத்துச் செல்வர். கஜேந்திர மண்டபத்தைக் கடந்து வீதிகளில் உலா வரும் போது ஸ்வாமிக்கு ஆரத்தியை செய்து, சடாரிக்கு புரோக்ஷணமாக அபிஷேகம் செய்து ஆலயத்திற்குள் கொண்டு செல்வர். இதனையே திருமலையில் நிகழும் "புரிசைவாரி தோட்ட உத்ஸவம்" என்பர்.

இந்த உத்ஸவம் பற்றிய சிறப்புகளை சில கல்வெட்டுகளின் மூலம் அறிந்து கொள்வோம்.

**கல்வெட்டுகளில் தோட்ட உத்ஸவம் :**

பல ஆண்டுகளாக நடைபெற்ற இவ்உத்ஸவம் இடையில் நின்று விட்டது. மீண்டும் இவ்உத்ஸவம் 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதியன்று துவங்கப் பட்டது.

தோட்டத்திருநாள், தோப்புத் திருநாள் என்று அழைக்கப்படும் இந்த உத்ஸவம் முதன் முதலில் சாளுவ வம்சத்தினர் காலத்தில் நடைபெற்றதாக (தொகுதி–2, கல்வெட்டு 113) 1494 ஆம் ஆண்டு பிப்ரவரி 17ஆம் தேதி கல்வெட்டு தெரிவிக்கின்றது. சந்தரகிரியைச் சேர்ந்த ஹாரீதகோத்ர, அஸ்வலாயன சூத்ர, நியோகி திம்மன நாயகனின் கல்வெட்டில் தோட்டோத்ஸவம் 20 நாட்கள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. உத்ஸவம் துவங்கிய 11 ஆம் நாள் திம்மன தண்ட நாயகன் ஸ்வாமிக்கு கைங்கர்யத்திற்கு ஏற்பாடு செய்ததாகவும் தெரிவிக்கின்றது.

ஸ்ரீகிருஷ்ண தேவராயர் காலத்தில் அதாவது 1542 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி கல்வெட்டில் (தொகுதி–3, கல்வெட்டு–28) திருப்பதி சமீபத்தில் உள்ள நரசிங்காபுரத்தில் வசித்த பண்ணையார் சென்னமு செட்டியார் குமாரரான பப்புசெட்டி அய்யன் திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி மற்றும் திருமலை திருவேங்கடவனை தனது தோட்டத்தில் உள்ள மண்டபங்களில் தனித்தனியே எழுந்தருளச் செய்து இந்த உத்ஸவத்தை சிறப்பாக நிகழ்த்தினார் என்று கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இது 2வது தோட்டோத்ஸவம் ஆகும்.

அச்சுத தேவராயர் காலத்தில் 1536ஆம் ஆண்டு மார்ச் 6ஆம் தேதி கல்வெட்டுகளில் (தொகுதி–4, கல்வெட்டு–73) ஸ்ரீபராசர பட்டாச்சாரியரின் சீடன் மட்ல மல்லய்யன் குமாரன் ராமய்யன், ராமபட்ட தோட்டோத்ஸவம் –ராமச்சந்திர தீக்ஷித தோட்டோத்ஸவம், அப்பா பிள்ளை தோட்டோத்ஸவத்திற்கு உபயங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது போல் உள்ளது. தொகுதி–4, கல்வெட்டு –18ல் ஜய்யபு நாயகர் தோட்டோத்ஸவம், 19ஆம் கல்வெட்டில் குமாரபள்ளியை சேர்ந்த கட்ள கொண்ட நாயகர் குமாரன் மூர்த்தி நாயகர் தோட்டோத்ஸவம், சதாசிவராயர் காலத்தைச் சேர்ந்த, 1554ஆம் வருடம் ஆகஸ்டு 7ஆம் தேதி கல்வெட்டு தோட்டோத்ஸவத்தை குறிக்கும் ஒரே கல்வெட்டாகும்.

இந்த கல்வெட்டுகளில் தோட்டோத்ஸவம் நடைபெறும் முறை, திருமலையப்ப ஸ்வாமி மற்றும் உபய தேவியரான ஸ்ரீதேவி பூதேவியருக்கு, கிருஷ்ண ஸ்வாமி, விஷ்வக்சேனர், பாஷ்யகாரர் ஆகியோர்களுக்கு நடைபெறும் உபயங்கள், மரியாதைகள், சமர்ப்பிக்க வேண்டிய கைங்கரியங்கள் பற்றிய விவரங்களை தெரிவிக்கின்றன. அவைமட்டுமின்றி இவ்உத்ஸவங்களுக்கு எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தோட்டோத்ஸவம் என்ற பெயரில் நடைபெறும் இந்த உத்ஸவம் இறுதியாக வேங்கடபதி ராயர் காலத்தில் 1606ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதி, 6,13ஆம் கல்வெட்டுகளில் காணலாம். இந்த உத்ஸவம் விஜய நகர கோசாதிபதி பொக்க சங்கிருஷ்ணய்யா, தனது தந்தை பொக்கசஞ்சரய்யா பெயரில் உள்ள நந்தவனத்தில் நடத்தினார் என்று கூறுகின்றனர். பின்னர் நவாபுகள், கிழக்கிந்திய நிறுவனம், மஹந்துகள் ஆகியோர் காலங்களில் இந்த உத்ஸவம் நடைபெற்றதாக எவ்வித தகவல்களும் இல்லை. மீண்டும் 400 வருடங்களுக்குப் பின் 1983ஆம் வருடத்தில் இவ்உத்ஸவம் நடைபெற்றது.

தோட்டோத்ஸவம் என்ற பெயருடன் இந்த உத்ஸவம் நடைபெறாவிட்டாலும், திருமலையப்ப ஸ்வாமி திருமலையில் உள்ள சில முக்கிய இடங்களை

தரிசிப்பதும், வனபோஜனம் போன்ற உத்ஸவங்களும் தோட்டோத்ஸவத்தையே குறிக்கும். அவ்வகையில் ஸ்வாமி புரிசைவாரி தோட்ட உத்ஸவத்திற்கு வருகை புரிந்து அங்கு நிகழ்த்தப்படும் உத்ஸவம் புரிசைவாரி தோட்ட உத்ஸவம் என்பர். இது 1527 ஆம் ஆண்டு திருமலை கல் மண்டபத்தில் நிர்வகிக்கப் பட்டது. கோதா தேவி பிறந்த நாளன்றே அனந்தாழ்வான் பரமபதம் பெற்ற நாளாகும். ஆகையால் அந்நாளில் புரிசைவாரி தோட்டோத்ஸவம் நிகழ்த்துகின்றனர்.

இந்நாளில் ஆண்டாள் திருவாடிப்பூர உத்ஸவத்தையும் நிகழ்த்துவர். அவ்வாறே அனந்தாழ்வானின் நந்தவன சிறப்பினைப் பற்றி சிறிது அறிந்து கொள்வோம். அனந்தாழ்வானும் அவருடைய மனைவியும் எவ்வளவோ அன்புடன் வளர்த்த நந்தன வனத்தின் பெயர் “இராமாநுஜர் புஷ்ப வனம்” என்பதாகும்.

திருமலையில் எழுந்தருளியுள்ள திருவேங்கடவனுக்கு நந்தவனம் அமைத்து மலர் கைங்கர்யம் செய்வதையே வாழ்க்கையின் பலனாக கொண்டு திருமலையிலேயே வாழ்ந்தவர் அனந்தாழ்வான். இந்த நந்தவனத்தை “அனந்தாழ்வான் நந்தவனம்” என்றும் அழைப்பர். இது இன்றும் திருமலை மாடவீதியில் அமைந்துள்ளது. நாள்தோறும் வண்ண மலர்களை சேகரித்து மாலையாக்கி திருவேங்கடவன் ஆலயத்தில் ஸ்வாமிக்கு சமர்ப்பித்து மனம் மகிழ்ந்தார்.

அந்த மாலையை ஸ்வாமி அழகாக அலங்கரித்துக் கொண்டு பக்தர்களுக்கு தரிசனம் அளித்து வந்தார். ஒரு நாள் திருவேங்கடவன் மிக்க மகிழ்ச்சி கொண்டு அனந்தாழ்வான் தனக்கு சூடுகின்ற மாலையே இவ்வளவு மனோகரமாக இருக்கும்போது, அவர் வளர்க்கின்ற நந்த வனம் எவ்வளவு அழகாக இருக்குமோ! என்று எண்ணினார். எப்படியேனும் அந்த நந்தவனத்தை கண்டு களிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்தார். பட்டத்தரசியான அலர்மேல்மங்கை நாச்சியாரோடு திருவேங்கடவன் நாள்தோறும் இரவு நேரங்களில், அனந்தாழ்வானின் நந்தவனத்தில் உலாவும்போது, ஒரு நாள் கண்ணுற்ற அனந்தாழ்வான், யாரோ தன் நந்தவனத்தில் புகுந்து பாழ் படுத்துவதாக எண்ணி பிடிக்க முயற்சித்தார். உடனிருந்த ஆண் மகன் அதாவது ஸ்வாமி தப்பிக்க, பெண் மகளான தாயார் அனந்தாழ்வானிடம் பிடிப்பட்டார். அனந்தாழ்வானும் தாயாரை அந்த நந்த வனத்தி



லேயே செண்பக மரத்தில் கொடிகளால் கட்டி சிறைப்படுத்தினார். பொழுது விடிந்து வழக்கம் போல் அன்றலர்ந்த மலர்களை மாலை யாக்கி திருவேங்கடவன் சன்னதியையடைய, அங்கே மார்புறை நாச்சியாராகிய அலர்மேல்மங்கை திருவேங்கடவன் மார்பில் இல்லாதிருக்கக் கண்டு அஞ்சியவருக்கு, நந்தவனத்தில் பிணையாகக் கட்டுண்டு இருப்பவள் அனைத்து உயிர்களுக்கும் அன்னையாகிய அலர்மேல்மங்கை நாச்சியாரே என திருவேங்கடவன் மூலமாக அறிய, ஒரு நொடியும் ஐயனை அகலாத அன்னை தன் செய்கையால் ஓர் இரவு முழுவதும் பிரிய நேர்ந்ததை எண்ணி மிக்க வருத்தம் அடைந்தார்.

அதை ஈடு செய்யும் பொருட்டு நாச்சியாரின் தகப்பனாராக இருந்து பூக்கூடையில் தாயாரை அமர்த்தி ஆலயத்திற்குள் கொண்டு வந்தார். மீண்டும் திருவேங்கடவனுக்கு மணம் முடித்து சேர்த்து வைத்தார்.

இச்செயலால் திருவேங்கடவனுக்கு இவர் மாமனார் என அன்று முதல் அழைக்கப்பட்டு வருகிறார். அப்பொழுது ஸ்வாமி வஸ்திர சந்தன தாம்பூலத்துடன் அனந்தாழ்வானுக்கு சன்மானம் செய்தார்.

இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் (கடக ராசி) பூரம் நட்சத்திரம் “திருவாடிப்பூரம்” உத்ஸவ நாளில் திருவேங்கடவன் ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஆலயத்தை பிரதக்ஷிணமாக உலா வந்து, தோட்டத்தில் எழுந்தருளச் செய்து அங்கே பூஜைகள் செய்த பிறகு, புஷ்ப மாலைகள், சடாரியுடன் அனந்தாழ்வான் பிருந்தாவனத்தில் உள்ள மகிழ மரத்திற்கு மரியாதை செலுத்தி, அதன் பின் ஆலயத்தை அடைவார். இந்நாளே அனந்தாழ்வான் பரம பதம் பெற்ற நாள் என்றும், அந்த பிருந்தாவனத்தில் உள்ள மகிழ மரமே அனந்தாழ்வான் என்றும் முன்னோர்கள் கூறுகின்றனர். இந்த நாளே கோதா தேவியின் அவதார நாளான திருவாடிப்பூரம் ஆவது மிக்க சிறப்பை உடையதாகும்.

தெலுங்கு மூலம் : திருமதி. பத்மாவதி வேங்கடரமணா, திருப்பதி.
தமிழாக்கம் : திருமதி. ஏ. அருணா, திருப்பதி.

# பத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர்

புனிதமான ஸ்வர்ணமுகி நதிக் கரையில் சுகப்பிரம்ம மஹரிஷி தவம் செய்தமையால் இந்த தலத்திற்கு "திருச் சுகனூர்", "திருச்சாகனூர்" என்று பெயர் உண்டானதாக திருமலை திருப்பதி தேவஸ்தான 8,9ஆம் நூற்றாண்டின் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இந்த சுகபுரி வசிப்பதற்கு ஏற்ற இடமாகவும், தியானம் செய்வதற்கு ஏற்ற இடமாகவும் இருந்ததாக புராணச் சரித்திரங்கள் கூறுகின்றன.

திருமலை கோவிலில் உள்ள முதல் கல்வெட்டு (கி.பி.830) திருச்சானூர் திருவிலான் கோவிலின் வரலாற்றை விவரிக்கின்றது. திருச்சானூரில் கோவில் இருந்ததாகவும் அந்தக் கோவிலில் வேங்கடவனுக்கு தினமும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றதாகவும் கூறுகிறது. அந்த திருவிலான் கோவிலில் ஒரு உற்சவமூர்த்தி விக்ரகம் கூட உள்ளது. அந்த மூர்த்தியானவர் திருமலை வேங்கடவன் போன்றே இருந்தார். அந்த வெள்ளி உற்சவ மூர்த்தியை திருமலையில் பிரதிஷ்டை செய்தவர் பல்லவராணியான "சாமவாயி" ஆவார். அந்த விக்ரகத்துடன் சேர்த்து விலை மதிக்க முடியாத முத்து, ரத்தினம், ஆபரணங்களை வழங்கியுள்ளதாக 8,9 ஆம் நூற்றாண்டின் கல்வெட்டுகள் கூறுகின்றன.

திருச்சானூரில் திருவிலான் கோவில் ஏன் ஏற்படுத்தப்பட்டது என "திருமலை ஒழுகு" என்ற அற்புதமான வைணவ நூல் கூறுகின்றது. திருமலை ஸ்ரீநிவாசன் சன்னதியில் உற்சவங்களை துவஜாரோஹணத்துடன் ஆரம்பித்து, மற்ற உற்சவங்களை திருச்சானூரில் நடத்தி, இறுதி நாளன்று துவஜாவரோஹணம் திருமலையில் நடத்தி வந்தனராம். இந்த முறை சரியாக இல்லை என பகவத் ராமாநுஜர் திருமலை வேங்கடவனுக்கு நித்திய பூஜை முறைகளை ஏற்படுத்தி, உற்சவங்களைக் கூட திருமலையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். திருமலை அர்ச்சாமூர்த்தியைக் குறித்து எழுந்த சர்ச்சைகளில் சிவ விஷ்ணு விவாதத்தை முறியடித்து வேங்கடவன் வைகுந்தவாசனின் மறுஉருவம் என பிரமாணம் செய்து நிரூபித்தவர் பகவத் ராமாநுஜர். விசிஷ்ட அத்வைதத்தை நமக்குத் தெரிவித்தவர் அவரேதான்.

பல்லவ, சோழ அரசர்களின் இடையில் எழுந்த அரசியல் விவாதங்களும் "திருவிலான் கோவில்" திருச்சானூரில் அமைந்திட காரணமாயிற்று. சோழர்களின் சைவ மத வழிபாட்டிற்காக யோகிமல்லவரத்தில் "பராசரேஸ்வரர்" கோவில் ஏற்பட்டது. திருச்சானூரின் வைபவம் அழியாமல் இருக்க பாடுபட்டவர்கள் யாதவராயர்கள். கிருஷ்ண பக்தர்களான அந்த அரசர்கள் 12வது நூற்றாண்டில் திருச்சானூரில் கிருஷ்ணர், பலராமர்களுக்கு கோவிலை அமைத்தனர். 16,17 ஆம் நூற்றாண்டில் கிருஷ்ணர் கோவிலுக்கு தெற்கு பகுதியில் சுந்தரராஜ பெருமாள் கோவில் எழுப்பப்பட்டது. வடக்குப் பகுதியில் மகிமை வாய்ந்த அலர்மேல்மங்கை கோவில் ஏற்பட்டது. அலர்மேல்மங்கையே "பத்மாவதி" தாயாராக பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

திருமலையில் செவ்வன் என்ற யாதவர் ஸ்ரீநிவாஸனின் மீது அதிக பக்தியைக் கொண்டவர். வேங்கடவன் அவருடைய கனவில் தோன்றி, ஓரிடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த புதையல் குறித்து தெரிவித்து, அதை மலையடிவாரத்தின் கீழ் படிக்கட்டுகள்



கட்டுவதற்கும், திருச்சானூர் வளர்ச்சிப் பணிகள் செய்வதற்கும் உபயோ கப்படுத்திக் கொள்ளும்படி கூறினார். நாங்கள் நித்யவாசம் செய்யும் இந்த தலத்திற்கு பக்தர்கள் எளிதாக நடந்து வந்து தரிசனம் செய்து கொள்ள உபயோகமாக இருக்கும் என்றும் கூறினார். கபிலதீர்த்தம் மலை யின் கீழ், ஒரு கிராமம் இருந்ததாகவும், பிறகு ராமாநுஜர் கோவிந்த ராஜப் பெருமாளை ஸ்ரீபார்த்தசாரதி கோயிலில் பிரதிஷ்டை செய்து கருட வியூக மாக அந்தக் கோவிலைச் சுற்றி ஒரு நகரத்தை அமைத்ததாக அறிய முடி கிறது. ராமாநுஜரின் பெயரின் மீது "ராமாநுஜபுரம்" என்றும் விளிக்கப் பட்டது. பின்பு கோவிந்தராஜ பட்டினம் என்றும் அழைக்கப்பட்டது.

காலப்போக்கில் கோவிந்தராஜபட்டினம் திருப்பதி என்றும், திருவேங்கடவன் வீற்றிருந்த மலை திருமலை என்றும் மருவியது. திருச்சானூர் பத்ம சரோவரம் மிகவும் புகழ் வாய்ந்தது. இந்த பத்ம சரோ வரத்தில் தான் ஸ்ரீமகாலக்ஷ்மி தாயார் அவதரித்தார். மகாலக்ஷ்மி தாயார் அவதரித்த அந்த நாளில் இன்றும் இங்கு பஞ்சமி தீர்த்தம் மிக விமரிசை யாகக் கொண்டாடப்படுகிறது. இந்நிகழ்வுக்கு ஒரு வரலாறும் உண்டு.

நைமிசாரண்யத்தில் முனிவர்களுக்கு திரிமூர்த்திகளில் திரிகுணாதி சயங்களை யார் யார் பெற்றுள்ளனர் எனும் சந்தேகம் எழுந்தது.இதற்காக பிருகு முனிவர் சத்யலோகம், கைலாசம் சென்று அவமானப்பட்டு, இறுதி யில் வைகுந்தத்திற்கு வந்து, அங்கும் தனக்கு மரியாதை கிடைக்காததால் விஷ்ணுவின் திருமார்பின் மீது காலால் எட்டி உதைத்தார். இதனால் கோபம் கொண்ட மஹாலக்ஷ்மி தாயார் வைகுந்தத்தை விட்டு பாதாள உலகம் சென்று, அங்கு கபில மகரிஷியின் பூஜைகளை ஏற்றுக் கொண் டாள். பிறகு கொல்ஹாபுரம் (கரவீர புரம்) சென்றார். எம்பெருமானும் மகாலக்ஷ்மியைத் தேடி பல இடங்களுக்குச் சென்றார். இறுதியில் கொல்ஹாபுரம் வந்தடைந்தார். அந்த ஸ்ரீதேவியை நினைத்து பிரதக்ஷிணை செய்தார். இவ்வாறு 10 ஆண்டுகள் கடந்தன.

பிறகு லக்ஷ்மி தேவி கருணையுடன் ஆகாயத்தில் அசரீரவாணியாக "ஓ ஸ்ரீநிவாஸா! தெற்கு திசையில் சென்று கிருஷ்ணவேணி நதிக்கு 22 யோஜனை தூரத்தில் "ஸ்வர்ணமுகி" நதி உள்ளது. அங்கு ஒரு சரோவரம் (தெப்பக்குளம்) அமைத்து தங்கத் தாமரைகளை பிரதிஷ்டை செய். பிறகு மஹாலக்ஷ்மி மந்திரத்தை ஜபம் செய்தால் அவள் உனக்கு கருணை புரிவாள்" என்றது. அந்த வார்த்தைகளைக் கேட்டு ஸ்ரீநிவாஸன் உடனடி யாக கருடாரூடனாய் ஸ்வர்ணமுகி நதியை தரிசனம் செய்து கொண்டு, பிறகு ஆதி வராஹ க்ஷேத்திரத்தை அடைந்தார். ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி வைகானஸ மஹரிஷியின் விருந்தோம்பலை ஏற்று கருட வாகனம் ஏறி திரும்பவும் ஸ்வர்ணமுகி நதிக்கரைக்கு வந்தார்.

ஸ்வர்ணமுகி நதிக்கரையில் ஸ்ரீநிவாஸன் தன்னுடைய ஈட்டியினால் தெப்பக்குளத்தைத் தோண்டினார். வாயு தேவனை வேண்டி, தேவேந்திரன் உதவியால் தங்கத் தாமரை மலர்களை கொண்டு வந்து பிரதிஷ்டை செய்தார். மஹாலக்ஷ்மி மந்திரத்தை உச்சரித்து சுமார் 12 ஆண்டுகள் தவம் புரிந்தார். கார்த்திகை மாதம் சுக்ல பக்ஷம் பஞ்சமி திதி உத்திராடம் நட்சத்திரத்தில் தங்கத்தாமரையில் லக்ஷ்மி தேவி அவதரித்தாள்.

அப்படிப்பட்ட திருச்சானூரில் வியாச மகரிஷியின் புதல்வன் சுக மகரிஷி ஒரு ஆசிரமத்தை ஏற்படுத்திக் கொண்டு தவம் செய்தார். ஆதலால் இவ்வூர் திருச்சுகனூர் ஆனது. திருச்சுகனூர் திருச்சானூராக மாறியது. அதன் பிறகு பத்மாவதி தாயார் கோவில் பிரசித்தி பெற்றது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்த கோவிலில் தங்க விமானக் கோபுரத்தை ஏற்படுத்தியது.

கார்த்திகை மாதத்தில் பாஞ்சராத்ர ஆகம சாஸ்திர முறைப்படி நடை பெறும் பிரம்மோத்ஸவம் பஞ்சமி தீர்த் தத்துடன் முடிவடைகிறது. அன்றைய தினம் திருமலையிலிருந்து யானை மீது தாயாருக்கு மஞ்சள், குங்குமம், புடவை, புஷ்பங்கள், பீதாம்பரம் போன் றவற்றை திருமலை வீதிகளில் திரு வீதிவலமாக எடுத்துக் கொண்டு வரு வர். பின்னர் திருச்சானூரில் தாயாருக்கு எம்பெருமானின் சார்பாக சாத்து வார்கள்.

திருப்பதியிலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் உள்ள திருச்சானூர் தலம் வைணவத் தலங்களில் மிகவும் முக்கி யமான தலமாகும். இங்கு பத்மாவதி





தாயாரின் கல்யாண உற்சவத்தில் ஸ்ரீநிவாஸனான எம்பெருமான் மாப்பிள்ளைக் கோலத்தில் வந்து திரு மணம் செய்து கொள்கிறார். பண்டைய காலங்களில் திருமலைக்கு வரும் பக்தர்கள் தங்கும் இடமாக திருச் சானூர் இருந்தது. ஆதலால்தான் பக்தர்கள் இங்குள்ள பத்ம சரோவரத்தில் நீராடி விட்டு திருமலைக்கு புனித பயணம் மேற்கொள்கின்றனர்.

திருப்பதி கோவிந்தராஜப் பெருமாள் கோவிலுக் கும், திருச்சானூர் கோவிலுக்கும் ஒற்றுமைகள் பல உள் ளன. கோவில் ஸ்தம்பம் (தூண்) மண்டபம், அந்தராலம், கர்ப்பகிரகம் ஆகியவை வாஸ்து முறைப்படி அமைக்கப் பட்டுள்ளன. பத்மாவதி தாயாருக்கு நான்கு கைகளில் (சதுர்புஜங்கள்) மேல் இரு கரங்களில் தாமரை மலர்க ளும், கீழ் இரு கரங்களில் வரத முத்திரையுடன் சிரித்த முகத்துடன் காட்சி தருகிறாள். சன்னதி மதில் சுவரின் 4 திசைகளிலும் சிம்மம் அமைக்கப்பட்டுள்ளது. சில மண்ட பங்களை சோழ அரசர்களும், விஜய நகர அரசர்களும் அமைத்துள்ளனர். வடக்கு புறம் ராமாநுஜர், தெற்கு புறம் கருடன், விஷ்வக்சேனர் உள்ளனர். இந்தக் கோவில் 17ஆம் நூற்றாண்டில் புணரமைக்கப்பட்டுள்ளது.

பத்மாவதி தேவியை “அலர்மேல்மங்கை தாயார்” எனக் குறிப்பிடப்பட்ட கல்வெட்டு கி.பி. 1495, 96ஆம் ஆண்டு கல்வெட்டில் உள்ளது. கி.பி. 1533ல் விஜய நகர சார்வ பௌமரான அச்சுத தேவராய மஹாராயர் இந்த தாயாருக்கு மஹோத்ஸவம் பெயரில் உற்சவங்களை ஏற்பாடு செய்தார்.

திருமலைக்குச் செல்லும் பக்தர்கள் முதலில் தாயாரைச் சேவித்து அதன் பிறகு பெருமாளை சேவிப் பார்கள். முன்பு திருமலை அடர்ந்த காடுகளாக இருந்தது. ஆகையால் ஸ்ரீநிவாஸனின் விக்ரகங்களை ஸ்ரீநிவாஸ மங்காபுரம், நாராயணவனம், தொண்டமநாடு, திருச்சா னூர் போன்ற இடங்களில் பிரதிஷ்டை செய்தனர்.

திருச்சானூரில் பிரசன்ன வேங்கடேஸ்வரராகவும் பிரதிஷ்டை செய்தனர். 1782ஆம் நூற்றாண்டில் ஹைதர் அலி போன்ற முகம்மதியர்கள் காலத்தில் ஆலயம் சிதிலமாகின. அதை திரும்பவும் கிழக்கு இந்தியா நிறுவ னம் புணரமைத்தது. இந்த திருச்சானூர் தலத்தை அனை வரும் சேவித்து தாயாருடைய அருளைப் பெற வேண்டு கிறோம்.

## திருமலைக்கு வரும் பக்தர்களின் கவனத்திற்கு...

- தங்களுடைய முகவரியையும், தொலைபேசி எண்ணையும் ஒரு சிறு காகிதத்தில் எழுதி உங்களுடன் பயணிக்கும் குழந்தை மற்றும் முதியோரிடம் வைத்துக் கொள்ளும்படி அளியுங்கள். ஒரு வேளை அவர்கள் காணாமல் போனால் அவர்களை தங்களிடம் சேர்ப்பதற்கு இது உதவியாக அமையும்.
- திருமலையில் இருக்கும் போது தங்களுடன் பயணிப்போர் எவரேனும் தவறி காணாமல் போனால் காவல் வளாகத்திற்கு (1வது டவுன் காவல் நிலையம், 2வது டவுன் காவல் நிலையம், குற்றவியல் காவல் நிலையம்) வந்து சேர வேண்டும் என்று முன் கூட்டியே தகவலை பகிர்ந்துக் கொள்ளவும்.
- திருமலையில் அறைகள், தரிசனம், பிரசாதங்களுக்கு தளாரிகளை நம்பாதீர்கள். தி.தி.தே. கௌண்ட்டர்கள் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ளுங்கள்.
- அன்னியர் தரும் உணவு பொருட்களை வாங்க வேண்டாம். அவர்கள் கூறும் வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள்.
- உங்களுடைய விலையுயர்ந்த பொருட்கள், நகைகள், பணம் ஆகியவற்றை அறையிலோ, வாகனத்திலோ வைத்து விட்டுச் செல்ல வேண்டாம்.

# ஆண்டாள் அவதரித்த ஆடிப்பூரம்

புலவர் க.சுகுமாரன், மன்னார்குடி

ஆண்டாளின் அவதார தினமாக விஷ்ணு கோயில்களில் கொண்டாடப்படும் நன்னாள் ஆடிப்பூர திருநாள்! மகாவிஷ்ணு தசாவதாரம் எடுத்தார். தர்மத்தைக் காக்க, அவர் அவதாரம் எடுத்த காலங்களில் எல்லாம் ஸ்ரீதேவியும் பூமியில் அவதரித்ததாக புராணங்கள் சொல்கின்றன. பூமிப்பிராட்டியார் ஆழ்வாராக அவதாரம் செய்த நிகழ்வு நடந்தது ஆடிப்பூரத்தில்தான்.

மகாவிஷ்ணுவை புருஷோத்தமன் என்பார்கள். ஆடவர்களில் தலையானவன் என்பது இதன் பொருள். நாயக நாயகி பாவம் வைஷ்ணவ சம்பிரதாயத்தில் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. மகாவிஷ்ணு மட்டும் தான் நாயக தத்துவம் உடையவர். மற்ற எல்லா ஜீவாத்மாக்களும் நாயகி பாவத்திற்கு உரியவை. மனித உருவில் உள்ள ஆண்களின் உடல் ஆண் தன்மை படைத்தது. உடலில் இருக்கும் ஆன்மாவோ பெண் தன்மை உடையது. இது மாறுபட்ட நிலை. அதனால் தான் மஹாவிஷ்ணுவை புருஷோத்தமன் என்கிறார்கள்.

பகவான் ஒருவன் மட்டும் தான் நாயகன். நாயக தத்துவத்தை விளக்குவதே பரம் பொருளாகும். ஜீவாத்மாக்கள் நாயகிகள். ஜீவாத்மாக்கள் நாயகி பாவத்தை அதாவது பெண் தன்மையை ஏற்று பரந்தாமனை சரணடைய வேண்டும். அப்போது மகா விஷ்ணு ஜீவாத்மாக்களை ரட்சிக்கிறார் என்பது வைணவ தத்துவம். 12 ஆழ்வார்களில் நம்மாழ்வாரும், திருமங்கை ஆழ்வாரும் நாயகி பாவத்தில் மகா விஷ்ணுவை அனுபவித்தார்கள். அவர்கள் பெண் தன்மை ஏற்று, நாயகி பாவத்தை அடைந்து வழிபட்டாலும் அவர்கள் ஆண் மக்கள். ஆதலால் அவருடைய தன்மை பள்ளத்திலிருந்து மேட்டை நோக்கி நீர் பாய்வதுபோல் ஆகிறது. அங்கே வேகம் இருக்காது அல்லவா?

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாள் இயற்கையிலேயே நாயகி. எனவே அவள் கண்ணனிடம் மயக்கம் கொள்வதும், காதல் கொள்வதும் இயற்கையாக அமைகிறது. இந்த அன்பு, பள்ளத்தை நோக்கி நீரின் தன்மை போல் இயல்பானதாகவும் அமைகிறது. அன்பு வெள்ளத்தில் வேகமும் காணப்படுகிறது. எனவே ஆண்டாளை ***''செழுங் குழல் மேல் மாலைத் தொடை தென் அரங்கிற்கு ஈயும் மதிப்புடைய சோலைக்கிளி''*** என்று வானமாமலை ஜீயர் சொல்கிறார். வேதம் மகா விஷ்ணுவின் பெருமைகளை விளக்குகிறது. வேதத்துக்கு ஈடான திருப்பாவை இருக்கும்போது சிலர் அறியாமல் திரிகிறார் என்பதை வையகம் சுமப்பதும் வம்பு அல்லவா? வினா எழுப்புகிறார் வேதப்பிரான் பட்டர்.

கோதை திருவில்லிபுத்தூரில் பிறந்தார். அது கோவிந்தன் வாழும் ஊராகி விட்டது. அங்குள்ள மாட மாளிகைகள் ஒளி பெற்றன. உயர்ந்து ஓங்கின. நீதியுடன் திகழக் கூடிய பக்தர்கள் வாழ நான்கு வேதங்கள் முழங்கின என்கிறார் வேதப்பிரான் பட்டர். இப்படி பல பெருமைகளை படைத்த ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆழ்வார் திருமகளாய் அவதரித்தார் ஆண்டாள். திருமகள் வைகுண்ட வாழ்க்கையை வெறுத்து, பக்தர்களை வாழ்விக்க ஆண்டாளாய் ஆடிப்பூரத்தில் அவதரித்தார். இந்த ஆடிப்பூரத்திற்கும் ஆண்டாளுக்கும் இணையாக ஏதாவது உண்டா? இல்லவே இல்லை என்கிறார் மணவாள மாமுனிகள்.

***''இன்றோ திருஆடிப்பூரம்
எமக்காக
வன்றோ இங்கு ஆண்டாள்
அவதரித்தாள் - குன்றாத
வாழ்வான வைகுந்த வான்
போகம் தன்னை இகழ்ந்து
ஆழ்வார் திருமகளாராய்''***

என்றும்

***''பெரியாழ்வார் பெண்பிள்ளை
யாய் ஆண்டாள் பிறந்த
திருவாடிப்பூரத்தின் சீர்மை -
ஒரு நாளைக்கு
உண்டோ மனமே உணர்ந்து
பார், ஆண்டாளுக்கு
உண்டாகில் ஒப்பிதற்கும்
உண்டு''***

என்ற பாடல்கள் ஆடிப்பூரத்தின் மேன்மையை விளக்குபவை. ஆடிப்பூரத்தில் ஆண் டாளை தரிசிப்பதும், ஆண் டாள் அருளிய திருப் பாவையை பாராயணம் செய்வதும் சிறப்பு.

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**



# ஆளவந்தார் நம்மை ஆள வந்தார்

திரு.எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

சுவாமி நாதமுனிகள் வைணவத்தை மீட்டெடுத்தவர். அவர் இல்லாவிட்டால் அருளிச் செயல் நமக்கு கிடைத்திருக்காது. நாதமுனிகளின் புதல்வர் ஈஸ்வர முனி. ஈஸ்வர முனியின் புதல்வர் ஆளவந்தார்.

இவர் காட்டுமன்னார் கோயில் வீரநாராயணபுரத்தில் கி.பி. 916ஆம் ஆண்டு ஆடி மாதம் உத்திராட நட்சத்திரத்தில் அவதரித்தார். யமுனைத் துறைவன் என்று பெயர் சூட்டப்பட்டார். மணக்கால் நம்பிக்குப் பிறகு திருவரங்கத்தில் வைணவ சமயத் தலைமைப் பீடத்தில் அமர்ந்தார். உலக குருவாகிய இராமாநுஜருக்கு தோன்றாத் துணையாயிருந்து வைணவத்தினை வழி நடத்தினார்.



யமுனைத் துறைவனுக்கு ஆளவந்தார் என்று திருநாமம் எப்படி வந்தது?

சோழ அரசிக்கும் அரசனுக்கும் ஒரு பிரச்சினை. அதில் யமுனைத்துறைவர் வென்றால் அரசிக்கு வாழ்வு. இல்லையென்றால் சோழ அரசியும் அரசனும் சேர்ந்து வாழ முடியாது.

யமுனைத் துறைவர் போட்டியில் வென்றவுடன் என்னை ஆள வந்தீரே என ராணி அழைத்ததால் அன்று முதல் அரசன் கொடுத்த பாதி ராஜ்ஜியத்துடன் ஆளவந்தார் ஆனார். அரசியை கணவனோடு சேர்த்து வாழ்வளித்தார்.

இதில் அரசி என்ற ஸ்தானத்தில் அபலைகளாக நாம் இருக்கிறோம். கணவனாகிய எம்பெருமானுடன் சேர்த்து வைக்க வேண்டும். அப்படி நம்மை எம்பெருமானுடன் சேர்த்து வைக்க அவதரித்ததால் ஆளவந்தார்... என்ற திருநாமத்திற்கு உரியரானார்.

வைணவ சமயத்தில் சாத்திரத்திலும் தர்க்க வியாகரணத்திலும் வல்லவர் ஆளவந்தார். பேரறிஞர்.

இன்றும் திருமலையில் திருவேங்கடவனுக்கு பூமாலைகளை கட்டி சேர்த்து வைக்கும் இடம் இவருடைய பெயரால் “யமுனாதுறை” என்று அழைக்கப்பட்டு வருகின்றது. சதுஸ்லோகி என்கின்ற நான்கு சுலோகங்களால் பிராட்டியைப் போற்றிய இவர் பெருமாளைக் குறித்து 65 சுலோகங்களைச் செய்தார். அதில் உள்ள ஒவ்வொரு சுலோகமும் சொற்சுவையாலும் பொருட்சுவையாலும் ஈடு இணையற்ற ரத்தினங்கள் என்பதால் அச்சுலோகங்களின் தொகுப்புக்கு ஸ்தோத்திர ரத்னம் என்று பெயரிட்டனர்.

வைணவத்தில் மூன்று இரத்தினங்களைச் சொல்லுவார்கள். ஒன்று புராண ரத்தினம் (விஷ்ணு புராணம்). இன்னொன்று மந்திர ரத்தினம் (துவைய மந்திரம்). மூன்றாவதாக ஆளவந்தாரின் ஸ்தோத்திர ரத்னம்.

எம்பெருமானைத் துதிக்கக்கூடிய எத்தனையோ ஆயிரம் சுலோகங்கள் இருந்தாலும் கூட ஆளவந்தாருடைய ஸ்தோத்திரத்திற்கு இணையான தோத்திர நூல் உலகத்தில் இல்லை என்று வைணவ ஆசாரியர்களால் இன்றளவும் உயர்வானதாகப் பேசப்பட்டு வருகிறது. வைணவத்தின் சாரமான தத்துவங்களையெல்லாம் விளக்குகின்ற மிக உயர்ந்த நூல் இது. 65 சுலோகங்களால் ஆனது. 65 சுலோகங்கள் ஏன் என்பதற்கு ஆசாரியர்கள் அருமையான விளக்கத்தை அருளியிருக்கிறார்கள்.

திருவெட்டெழுத்து மந்திரம் 8. துவைய மந்திரம் 25 எழுத்துக்கள். சரம சுலோகம் மந்திரங்களில் அடங்கியுள்ள 32 எழுத்துக்கள். இவை மூன்றையும் கூட்டினால்



65 எழுத்துக்கள் வரும். அதனால் 65 சுலோகங்கள். அப்படியானால் இச்சுலோகங்களின் அர்த்த விளக்கம் மந்திரத்திரையமான மூன்று மகா மந்திரங்களின் சாரமாகத்தானே இருக்கும்.

இனி ஆளவந்தாரின் ஸ்தோத்திர ரத்தினங்களிலிருந்து சில முக்கியமான சுலோகங்களின் பொருளைக் காணலாம்.

முதல் சுலோகத்தில் தன்னுடைய தாத்தாவும் தன்னுடைய ஆசாரியருமான ஸ்ரீநாதமுனிகளின் பெருமையை விளக்குகிறார். சுவாமி நாதமுனிகள் அளவிட முடியாத அன்பின் கடலாக விளங்குகின்றார். கற்பனைக்கு அடங்காத மென்மை, இயற்கையான அறிவு மற்றும் வைராக்கியம் ஆகியவற்றின் பெட்டகமாக ஸ்ரீநாதமுனிகளை ஆளவந்தார் காண்கின்றார்.

*''பூயோ நமோ அபரிமித அச்சுத பக்தி தத்வம்''* என்று தொடங்கும் மூன்றாவது சுலோகத்தில் பகவானாகிய அச்சுதனின் மீது கொண்ட அன்பினால், பகவானை அடைவதற்கான வழிகளை மற்றவர்களுக்கு தேடிக் கண்டுபிடித்துச் சொன்ன உதவியின் மூலம் ஆசாரிய ஸ்தானத்தில் முதல்வராக நாதமுனிகள் விளங்குகிறார் என்று சொல்லி அதனாலேயே அவரைத் திரும்பத் திரும்ப வணங்கி அமைதி பெற முயல்கிறேன் என்கிறார்.

புராண ரத்னமாகிய விஷ்ணு புராணத்தை எழுதிய பராசர முனிவரை நான்காவது சுலோகத்தில் *''தஸ்மை நமோ முனிவராய பராசராய''* என்ற தொடரால் வணங்கி, அவர் விஷ்ணு புராணத்தின் மூலம் சித் அசித் ஈஸ்வரன் எனும் முப்பெரும் தத்துவத்தை (தத்வத்ரையம்) விளக்கிய பேருண்மைப் பண்புகளைப் பாராட்டுகிறார். விஷ்ணு புராணத்தை இச்சுலோகத்தில் ஆளவந்தார் புராண ரத்னம் என அழைக்கிறார் *(சந்தர் சயந்நுதிராமீர்த புராண ரத்னம்).*

ஆளவந்தார் பராசரரையும் வியாசரையும் தனது இரண்டு கண்களாகக் கொண்டு இருந்தார். அவர்கள் இருவருக்கும் ஏதேனும் செய்தாக வேண்டும். அவர்களுக்குக் கடன்பட்டவனாக தான் விளங்குகிறேன் என்பதையே அவர் திருநாடு அலங்கரித்த போது மடங்கிய மூன்று விரல்களில் இரண்டு விரல்கள் காட்டின.

சுவாமி இராமாநுஜர் பராசரபட்டர், வேத வியாசர் என்கிற பெயர்களை கூரத்தாழ்வான் புதல்வர்களுக்கு வைத்தும், வியாசருடைய பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதியும், தன்னுடைய ஆசாரியரான ஆளவந்தாருடைய நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றி வைத்தார்.

ஐந்தாவது சுலோகத்தில் சுவாமி நம்மாழ்வாரை மிக அருமையான முறையில் வாழ்த்தி வணங்குகின்றார். இச்சுலோகம் நாம் அனைவரும் தினசரி திருவாராதனத்தில் சேவிக்கும் சுலோகம்.

*''மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்*
*ஸர்வம் யதேவ நியமேந மதந்வயா நாம் |*
*ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபி ராமம்*
*ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||''*

யாருடைய திருவடிகள் மகிழம் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு உள்ளதோ, யார் வைணவத்தின் குலபதியோ, அந்த பராங்குச முனிதான் தமக்கு நிரந்தரமான தாய், தந்தை, மனைவி, மகன், சொத்து எல்லாம். எனவே, அவரின் தாமரைத் திருவடிகளை சிரம் தாழ்த்தி வணங்குவதாகச் சொல்லுகின்றார். அடுத்து தம்முடைய தகுதி இன்மையை மிக அழகாகச் சொல்லுகிறார்.

எந்தக் கடலின் சிறு துளியைக் கூட சிவபிரம்மாதிகளால் அறிய முடியாதோ, அப்படிப்பட்ட கடலைப் போன்ற எம்பெருமானுடைய புகழ் பாடுவதற்கு எந்த துணிச்சலில் தான் இறங்கினேன் என்பதைச் சொல்லி, இப்படி இறங்குவதற்கு எனக்கு கொஞ்சம் கூட நாணம் இல்லாமல் போய்விட்டதே என்கிறார். ஆனாலும் கூட, செய்பவனுக்குத் தகுதியில்லாவிட்டாலும் செய்யும் காரியம் தகுதியுடையதல்லவா... அந்த காரணத்துக்காகவே தன்னைத் தானே பாராட்டிக் கொள்கிறார்.

இது ஒரு அற்புதமான வாழ்வியல் செய்தி. நல்ல காரியத்திற்குப் பிறர் பாராட்டுவது பாராட்டாதது ஒரு புறம் இருக்கட்டும். அவர்கள் பாராட்டுக்காக நாம் ஏன் நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும். நல்ல காரியத்தை செய்யும் அறிவு அந்த பகவானால் அல்லவா நமக்கு வந்தது. அதற்கு நம்மை நாமே பாராட்டிக் கொள்ள லாமே.

திருமங்கையாழ்வார் போன்றோரும் அரட்டமுக்கி, அடையார் சீயம் என்றல்லவா பகவத் விஷயத்தில் ஈடுபட்ட தங்களைத்தாங்களே பாராட்டிக் கொண்டார்கள். அதைப்போல பெருமாளைப் பற்றி சுலோகங்கள் எழுதும் தம்மை பெருமையோடு சொல்லுகின்றார்.

எட்டாம் சுலோகத்திலே தான் தகுதியற்றவன் என்றாலும் கூட மற்றவர்களுக்கு மட்டும் என்ன தகுதி வந்து விட்டது என்பதைச் சமத்காரமாக விளக்குகின்றார். பெரிய பெரிய ஞானிகளும் பிரமன் முதலியோர்களும் கூட இறைவனுடைய குணங்களையும் புகழையும் முற்றிலுமாக கூற முடியாமல் தட்டுத் தடுமாறித் தானே நின்றனர். அவர்களுக்கு அந்த தடுமாற்றம் இருக்கும்பொழுது தனக்கும் அதே மாதிரியான தடுமாற்றம் வியப்பல்லவே என்கிறார்.

நீரில் முக்காலடி மூழ்கியவனும் மூன்றடி மூழ்கியவனும் ஒன்றென்பதுபோல இறைவனை பூர்ணமாக அறியும் தகுதிக் குறைவில் தானும் பிரமன் முதலியோரும் ஒன்றே என்கிறார். ஆனால் அவர்களுக்கு இல்லாத ஒரு சின்ன தகுதி தமக்கு இருப்பதாக ஒன்பதாம் சுலோகத்தில் சொல்லுகின்றார்.

காரணம் அவர்கள் இறைவனின் தூண்டுதலால் பகவானை அறியும் முயற்சியை செய்பவர்கள் அல்ல. ஆனால் என் உள்ளே அவன் தூண்டுகிறான். அதுவும் தவிர என்னுடைய ஆசாரியரின் (நாதமுனிகள்) அனுக்கிரகமும் உண்டு. இது பிரம்மாதிகளுக்கு இல்லை. பெரும்பாலும் ஆழ்வார் பாசுரங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த ஸ்தோத்திரத்தின் அனைத்துக் கருத்துக்களும் இருக்கின்றன.

உதாரணமாக பதினான்காம் சுலோகத்தில், ***"கஸ் யோதரே ஹரவிரிஞ்ச முக பிரபஞ்ச:"*** என்று யாருடைய வயிற்றில், சிவனும் பிரமனும் மற்ற ஜீவர்களும், அடங்கிய பிரபஞ்சமும், அடங்கியது? அப்போது அதைக் காப்பாற்றியது யார்? யாருடைய தொப்புளிலிருந்து அது மறுபடியும் வெளியே வந்தது? இப்படிப் பட்ட அசாதாரண காரியத்தைச் செய்ய உன்னை விட மேன்மை படைத்த அந்த ஆதி மூர்த்தி (ஸ்ரீமந் நாராயணன்) யார்? என்று கேள்விகளை அடுக்குகிறார்.

> ***"பாலன் றனதுருவாய் ஏழுலகுண்டு, ஆலிலையின்***
> ***மேலன்று நீவளர்ந்த மெய்யென்பர், - ஆலன்று***
> ***வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ?***
> ***சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு."***
>
> –மு.திரு.69

என்ற ஆழ்வாரின் அபிப்ராயத்தை அப்படியே பிரதிபலிக்கும் சுலோகம் இது.

இருபத்தி மூன்றாம் சுலோகத்திலே நான் திரும்பத் திரும்பச் செய்யாத பாவங்கள் ஒன்றுமில்லை. அவற்றுக்குத் தண்டனை கிடைக்கும் காலம் நெருங்கி விட்டது. *"பாவமே செய்து பாவியான"* தான் இப்பொழுது எந்த உதவியும் இல்லாமல் தவிக்கிறேன். ***"ஆருளர் களைகண் அம்மா அரங்கமாநகருளானே"*** என்று அவனிடமே கதறி மன்னிக்கக் கோருகிறார்.

இப்படித் தொட்ட தொட்ட இடங்களெல்லாம் பொன்னாய், மணியாய், மாணிக்கமாய், கொட்டிக்கிடக்கும் ஆளவந்தாரின் இரத்தின முத்துக்களில் சிலவற்றை அனுபவித்தோம். முழுதும் நாம் அனுபவிக்க வேண்டும். பிறவிப் பிணி தீர்ந்து பெம்மானின் பேரருளைப் பெற ஆளவந்தாரின் திருவடிகளையும் அவர் அருளிய ஸ்தோத்திர ரத்தினத்தையும் விட்டால் வேறு வழி?


**ஆழ்வந்தார் திருவடிகளே சரணம்**

**வாழ்க்கை நெறிகள் தொடரும்...**

## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது.ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.

– பிராதன ஆசிரியர்



# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

# துருவனின் வம்ச சரித்திரம்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி.

பக்த துருவன் நாட்டை துறந்து காட்டிற்குச் சென்ற பின்பு அவனுடைய மகனான உத்கலன் நாட்டை ஆள்வதில் விருப்பம் இல்லாதவனாக இருந்தான். அவன் பிறந்ததில் இருந்தே மிகவும் சாந்தகுணமுடையவனாகவும், பார்ப்பவர்க்கு ஒரு ஜடம் போன்றும், குருடனைப் போன்றும், செவிடனைப் போன்றும், ஊமையைப் போன்றும் இருந்து வந்தான்.

எனவே அவனுடைய உறவினர்களும் வீட்டில் உள்ள பெரியோர்களும் அவனை பைத்தியம் எனக் கருதி அவனுடைய சகோதரனான வத்சருக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைத்தனர். துருவனின் மனைவி யாகிய இலைக்குப் பிறந்தவன் உத்கலன். துருவனின் பத்தினி பிரமிக்குப் பிறந்தவன் வத்சரன். எனவே வத்சரன் சக்கரவர்த்தியாக திகழ்ந்தான்.

வத்சரனின் மனைவி சர்வத்தினி. அவர்களுக்கு புஷ்பார்ணன், திக்மகேது, இஷன், ஊர்ஜன், வசு, ஜயன் என்னும் ஆறு பிள்ளை கள் பிறந்தனர். புஷ்பார்ணன், பிரபா, தோஷா என்னும் இருவரை திருமணம் செய்து கொண்டான். அவர்களுடைய வம்சத்தில் சாக்சுஸ் மனுவு பிறந்தார். அவருடைய வம்சத்தில் அங்க மகாராஜா பிறந்தார். அங்கனுடைய மனைவி சுனீதை ஆவாள். இவர்களுக்கு வேணு என்னும் தீய குணங்களுடைய பிள்ளை ஒருவன் பிறந்தான். இப்பிறப்புக்குக் காரணம் இவ்வாறாக அமைந்தது.

ஒரு சமயம் அங்க மகாராஜன் அசுவமேத யாகம் செய்தான். வேதபண்டிதர்களான ரித்விக்குகள் யாகம் செய்தனர். இருப்பினும் அந்த யாகத்தினுடைய அவிர்பாகத்தைப் பெற்றுக் கொள்ள தேவர்கள் எவரும் முன் வரவில்லை. அங்க மகாராஜாவின் பக்தியிலும், யாகம் செய்த முறைகளிலும் யாதொரு குறையும் இல்லை. இருந்த போதிலும் அவிர்பாகத்தைப் பெற்றுக் கொள்ள தேவர்கள் முன் வராததைக் கண்டு அங்க மகாராஜன் மிகவும் மனம் வருந்தினான். அவன் ரித்விக்குகளைப் பார்த்து, "இவ்வாறாக யாகம் முழுமையடையாமைக்குக் காரணம் என்ன?" என்று வினவினான்.

அப்பொழுது முக்காலத்தையும் முழுவதும் உணர்ந்த அந்த முனிவர்கள் தாங்கள் இந்தப் பிறவியில் எந்த பாவமும் செய்ய வில்லை என்றும், மனதாலும் கூட பிறருக்குத் தீங்கு நினைக்கவில்லை என்றும், ஆனால் முன்பிறவியில் செய்த பாவத்தின் காரணத்தால் இப் பிறப்பில் புத்திரபாக்கியம் உங்களுக்கு இல்லாமல் போனது என்று கூறினார்கள். மேலும், பிள்ளைப்பேறு உண்டாக வேண்டி ஸ்ரீஹரியைத் தியானித்து யாகம் செய்தால் அந்த தேவாதி தேவனான ஸ்ரீஹரியுடன் தேவர்கள் யாவரும் வந்து அவிர்பாகத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்றும் ஆலோசனைக் கூறினர்.

அவர்களுடைய ஆலோசனைப்படி அங்க மகாராஜா விஷ்ணுவின் அனுக்கிரகம் வேண்டி யாகம் ஒன்றை செய்தான். அந்த

யாகத்தின் பலனாக ஹோம குண்டத்திலிருந்து தூய வெள்ளாடைத் தரித்த ஒரு புருஷன் தோன்றினான். அவன் கையில் தங்கப்பாத்திரம் இருந்தது. அத்தங்கப் பாத்திரத்தில் இருந்த பாயசத்தை மிகவும் பணிவோடு பெற்றுக் கொண்டான். அப்பாயசத்தை தன் மனைவியிடம் கொடுத்தான். அப்பாயசத்தை உண்டதின் பலனாக ராணி கர்ப்பம் தரித்தாள். பின்பு உரிய காலத்தில் ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்தாள். ஆனால் அந்த பிள்ளை ஒருவகையில் அதர்ம வம்சத்தினருக்கு சேர்ந்தவன். ஆகையால், தர்ம நெறியிலிருந்து பிறழ்ந்து தீய குணங்கள் உடையவனாக விளங்கினான். அதாவது மிருத்யு என்பவன் அதர்மத்தின் அம்சமாகத் தோன்றியவன். அவனுடைய மகளான சுனீதை என்பவளையே அங்கன் மணந்திருந்தான். எனவே தன் தாய் வழி தாத்தாவான மிருத்யுவின் குணங்கள் அவனிடம் இருந்தன. ஸ்முருதி சாஸ்திரத்தின்படியும் கூட இவ்வாறு நடைப் பெறுவது உண்டு. இதையே "நாராணாம் மாதுல கர்ம" என்பர்.

அந்தக் குழந்தைக்கு வேணு என்று பெயரிட்டனர். வேணு தன் சிறு வயதிலிருந்து தன் கொடூர சுபாவத்தைக் காட்டத் தொடங்கினான். வேணுவின் கொடூர சுபாவத்தை அறிந்து அங்க மகாராஜன் அவனை நல்வழியில் திருத்துவதற்காகப் பல நல்ல அறிவுரைகளை எடுத்துக் கூறியும், அவசியம் ஏற்படும்போது, தண்டித்தும் பார்த்தார். ஆனால் வேணுவனை நல்வழிபடுத்த முடியவில்லை. அதனால் அரசன் மிகவும் மனவருத்தம் அடைந்தான். ஒரு நாள் இரவு முழுவதும் இதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த அரசன் இந்த வாழ்க்கையை வெறுத்து, இரவோடு இரவாக யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் இராஜ்ஜியத்தை துறந்து காட்டிற்குச் சென்று விட்டான். வேறுவழியின்றி அமைச்சர்கள் வேணுவிற்கு ராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்து வைத்தனர்.

சிம்மாசனத்தில் அமர்ந்த வேணு மிகவும் கர்வம் கொண்டான். அகங்கார மமதையில் தானே உயர்ந்தவன் என்று நினைத்து பெரியோர்களையும் மகான்களையும் அவமதிக்கத் தொடங்கினான். அங்குசம் இல்லா யானையின் நிலையில் வேணு இருந்தான். எவரும் வேள்விகள் செய்யக்கூடாது. தான தர்மங்கள் கொடுக்கக்கூடாது என்று பறையறிவித்தான். இதையறிந்த முனிவர்கள் அவனுக்கு அறிவுரை கூற முற்பட்டனர். முனிவர்களின் நல்லறிவுரைகளை கேட்காதது மட்டுமின்றி அவர்கள் மீது வேணுவிற்கு கோபம் உண்டானது. அவன் முனிவர்களுக்கே அறிவுரைக் கூறத் தொடங்கினான். தங்களுடைய அறிவுரையை கேட்க மறுத்ததோடு தங்களுக்கே அறிவுரைக் கூறுவதைக் கண்டு முனிவர்கள் மிகவும் கோபம் கொண்டு அவர்களுடைய தவ வலிமையினாலே அவனை வதித்தார்கள்.

அவ்வாறு செய்த பின் முனிவர்கள் அனைவரும் அவரவர்கள் ஆசிரமங்களுக்குத் திரும்பிச் சென்றனர். அப்பொழுது வேணுவின் தாய் சுனீதை மிகவும் துயருற்று தன்னுடைய மகனின் உடலை ஒருவிதமான எண்ணெய்ப் (தைலம்) பாத்திரத்தில் வைத்து பாதுகாத்தார்.

அங்க மகாராஜாவின் வம்சம் நின்று போகக்கூடாது என்று நினைத்து வேணுவின் உயிரற்ற உடலில் தொடையைக் கடைய அவன் உடலிலிருந்து ஒருவன் பிறந்தான். வேணுவின் தொடையிலிருந்து உண்டான அவன் பெயர் பாகுகன். அவன் மிகவும் பணிவோடு முனிவர்களைப் பார்த்து "ஸ்வாமி! நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான். அப்பொழுது முனிவர்கள் உட்காரும் (நிஷித) என்று கூறினர். அப்படியாக அவன் நிஷாதனானான். அவன் வேணுவின் எல்லா பாவங்களையும் தானே ஏற்றுக் கொண்டான்.

பிறகு அந்தணர்களும், முனிவர்களும் வேணுவின் இரண்டு புஜங்களையும் கடைந்தனர். அதன் காரணமாக ஆண் பெண் உண்டானார்கள். அவர்களை பார்த்த மாத்திரத்தில் இவ்விருவரும் பகவான் விஷ்ணுவின் அம்சமே என்பதை முனிவர்கள் தெரிந்து கொண்டனர். மிகவும் ஆனந்தம் அடைந்தனர். இதை "புருஷஸ்யா நபாயனீ" என்று பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது.

திவ்விய ஒளிமயமான அந்த புருஷனைப் பார்த்து மகரிஷிகள் இவ்வாறு புகழ்ந்தார்கள். "இவ்விருவரில் ஆண் மகனான இவன் தன் பெருமையும் புகழையும் உலகம் முழுவதும் பரவும்படி செய்வான்.

மேலும் பிருதுவு என்னும் பெயரோடு இவன் சிறப்படைவான். மிகவும் அழகாக விளங்கும் இப்பெண் அர்ச்சி என்னும் பெயரோடு சிறப்புப் பெற்று பிருதுவையே தன் கணவனாக ஏற்றுக் கொள்வாள். பகவானே பிருதுவின் வடிவில் இங்கு அவதரித்தான். இலட்சுமி தேவி எப்போதும் பகவானின் சேவையில் ஈடுபட்டிருப்பாள். எனவே அத்தேவியே அர்ச்சியாக அவதரித்து உள்ளார்.

பாகவத கதை சாகரம் தொடரும்...

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

**பெரியாழ்வார் வாழித்திருநாமம் தொடர்ச்சி...**

(தொடைசூடிக் கொடுத்தவள்தன் தொழுந் தமப்பன்) – தொடை – பூமாலை. சூடிக் கொடுத்தவள்தன் – எம்பெருமானுக்குரிய பூமாலையைத் தன் திருக்குழலில் சூடி, பின்னர் அதனை எம்பெருமானுக்கு சமர்ப்பித்தது காரணமாக ஆண்டாளுக்கு சூடிக்கொடுத்தவள் என்று பெயர் வந்தது. பூமாலை சூடிக் கொடுக்கையாவது – ஆண்டாளானவள் செண்பக மல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சியாலும் நடுவில் இட்டுத் தொடுத்த துழாய் மாலையை தன் வாசம் செய்பூங்குழலிலே வாஸிதமாக்கிச் சூடிக்கொடுத்தவள் என்பர். ஆழ்வார்கள் பதின்மர்க்கும் இவள் ஒரு பெண் பிள்ளை என்றும் பெரியாழ்வார் வயிற்றில் பிறந்தவள் என்றும் ஆசார்யர்கள் சொல்லுகையாலும் தொழும் தமப்பன் என்று சொன்னபடி. தம் அப்பன் – தமப்பன். *''பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே''* என்று ஆண்டாள் வாழித்திருநாமமும் காண்க. தொழும் தமப்பன் – பெரியாழ்வார் வயிற்றில் பிறப்பின் உறைப்பை நினைத்து ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் கார்க்கோடல் பதிகத்தில் பெரியாழ்வார் புருஷகாரமாக எம்பெருமானை அடைய *''வில்லிபுதுவை விஷ்ணுசித்தர் தங்கள் தேவரை வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே''* (நாச்சியார் திருமொழி 10–10) என்று சொல்லி பெரியாழ்வார்க்கு உகந்தவர் என்று அவரை முன்னிட்டு பற்றுவதாகும்.

(செல்வ நம்பி தன்னைப்போல் சிறப்புற்றான்) – செல்வநம்பி – பாண்டிய மன்னனின் புரோகிதர். திருமாலின் வடிவழகையே சிந்தித்திருக்கும் பழவடியான் என்று புகழப்படுபவர். தருமத்தைத் தவிர மற்றதை அறியாதவர். நான்கு வேதங்களையும் கற்றறிந்தவர். யாரிடமும் பகைமை பாராட்டாத மனமுடையவர். எது வந்தாலும் அசையாத தன்மையுடையவர். இத்தகைய பெருமை பெற்ற செல்வ நம்பியை இவ்வாழ்வாரே *''அல்வழக்கொன்று இல்லா அணிகோட்டியூர்கோன் அபிமானதுங்கன் செல்வன்''* என்று அன்போடு அழைப்பர். அல்வழக்காவது – உலகில் வழக்கல்லாதவை பல. தேகத்தில் ஆத்ம புத்தி பண்ணுவது வழக்கல்ல. ஆத்மாவை சுயேச்சை என்று நினைப்பது வழக்கல்ல. வேறு தேவதைகள் உயர்ந்தது என்று புத்தி எண்ணுவது வழக்கல்ல. எம்பெருமானை வழிபட்டு வேறு பயன் பெறுவது என்று இருக்கை வழக்கல்ல. எம்பெருமானை அனுபவிக்க எனக்கே என்று இருப்பதும் வழக்கல்ல. இனி வழக்காவது எம்பெருமானுக்கு மங்களாசாசனம் பண்ணுவது என்றன்றோ செல்வநம்பி இருப்பது. *''அணிகோட்டியூர்''* என்பதனால் ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான திருக்கோட்டியூர். செல்வ நம்பி எப்படிப்பட்டவர் எனில் *''அபிமான துங்கன்''* என்கிறார். அபிமானம் என்பது அடிமைக்கு விரோதி. ஆனால் இங்கு அபிமானமாவது – கருமத்தால் வந்த துரபிமானம் தள்ளத்தக்கது. நான் அடிமை என்று வைஷ்ணவ அபிமானம் பூர்ணமாகையாலே அபிமான துங்கன் எனப்பட்டார். அதாவது உகந்தருளின திவ்ய தேசங்களில் உண்டான குறைவு நிறைவுகளும், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய அன்றாட வாழ்விலே உண்டாகும் குறைவும் நிறைவும் தம்மதாயிருக்கை. செல்வன் – ஸ்வரூபமான அடிமைத்தன்மையால் வந்த செல்வத்தால் குறைவற்றுக்கை. அதாவது ஞானம், பக்தி, வைராக்யம் ஆகியவற்றில் குறைவற்றிருப்பர். மேலும் இலக்குமணன், பிரகலாதன் போல பாகவதர்களுக்கு உபமானமாகத் திகழ்பவர். மேலும் செல்வநம்பியைப் பற்றிச் சொல்லும்போது இவ்வாழ்வார் *''நளிர்ந்த சீலன் நயாசலன் அபிமான துங்கன் நாள்தொறும் தெளிந்த செல்வன்''* என்று பலபடியாகக் கொண்டாடுகிறார். அதாவது செல்வநம்பி – குளிர்ந்த சீலகுணமுடையவர், நீதிநெறி தவறாதவர், எம்பெருமானை அனுபவிப்பதால் வந்த செருக்கில் உயர்ந்தவர். நாடோறும் தெளிந்த கைங்கர்யஸ்ரீயை உடையவர் என்று உரையிடுவர் மணவாள மாமுனிகள். இப்படிப்பட்ட செல்வநம்பியை

அடிமை கொண்டவன் திருக்கோட்டியூர் எம்பெருமான் என்பர். செல்வநம்பி போல் பெரியாழ்வாரும் *''நானும் உனக்குப்பழவடியேன்''* என்கிறார். அதாவது எம்பெருமானுக்கு தலைவனாம்தன்மை அநாதி போலே தனக்கும் அடிமையாம் தன்மை அநாதி என்றபடி. இதனால் செல்வ நம்பியைப் போல் சிறப்புற்றவர் ஆழ்வார் என்றபடி.

(சென்று கிழியறுத்து மால் தெய்வமென்றான்) ஸ்ரீ வல்லப தேவன் என்கிற ராஜா தரும சிந்தனை உடையவன். தம் புரோகிதரான செல்வ நம்பியை அழைத்து "உயர்ந்த உறுதிப் பொருளை நிர்ணயிக்க உபாயம் என்ன" என்று கேட்க அவரும் வித்வான்களைத் திரட்டி வேதாந்த நிர்ணயத்தைப் பண்ணி அவ்வழியாலே உறுதிப்பொருளை அறிய வேணும்" என்று சொன்னார். ராஜாவும் அப்படியே பெரும்பொருளை வித்யாசுல்கமாகக் கட்டி வித்வான்களை வரவழைத்தான். அதே சமயத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபெருங்கோயிலுடையான், பெரியாழ்வாரை இடுவித்து உலகில் வேதத்தின் பொருளை வெளிப்படுத்த எண்ணி கனவில் தோன்றி ஆழ்வாரை, *''நீர் போய் கிழியை அறுத்து வாரும்''* என்றான். ஆழ்வாரும் *''அது வித்யாசுல்கமாக வைத்தது தான் கையில் கொட்டுத் தழும்பைக்காட்டி கிழியை அறுக்கலாமோ''* என்று சொன்னார். பெருமாளும் "நாமன்றோ வேதார்த்தத்தை விவரிக்கப்போகிறோம்'' என்று ஆழ்வாரை நிர்பந்தித்தான். ஆழ்வாரும் பாண்டிய வித்வத் கோஷ்டியில் எழுந்தருளும்போது, செல்வ நம்பியும் ராஜாவும் எழுந்து வணங்கினார்கள். மற்ற வித்வான்கள் ராஜாவைக் கண்டிக்க, அப்போது செல்வ நம்பி ஆழ்வாரை தெண்டனிட்டு, வேதாந்த தாத்பர்யமான உறுதிப்பொருளை அருளும்படி சொன்னார். ஆழ்வாரும் வேதங்கள் எல்லாவற்றாலும் ஆராதனை முறையையும் ஆராதிக்கும் வஸ்துவையும் அறுதியிட்டு, திருமாலான ஸ்ரீமந்நாராயணனே முழுமுதற்கடவுள் என்று நிலைநாட்டினார். இதுபற்றியே பாண்டிய பட்டரும் திருப்பல்லாண்டு தனியனில் *''... வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான்''* என்று கூறுவார்.

(வில்லிபுத்தூர் நகரத்தை விளக்கினான்) – வேடுவக் குடும்பத்தில் தோன்றிய மல்லி என்ற பெண்ணுக்கு வில்லி, கண்டன் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர். அவர்களில் மூத்தவனான வில்லி என்பவனால் நிர்மாணித்த நகரமாகையால் இதற்கு வில்லிபுத்தூர் என்று திருநாமம். *''மின்னு புகழ் வில்லிபுத்தூர்''* என்றும், *''சீராரும் வில்லிபுத்தூர்''* என்றும் மாமுனிகள் இவ்வூரைக்



கொண்டாடுவர். அதாவது இவ்வூரில் பெரியாழ்வார் அவதரிக்கையாலே திக்குகளிலே பிரகாசமான புகழையுடையதாயிருக்கும் ஸ்ரீவில்லிபுத்தூர் என்பர். மேலும் வில்லிபுத்தூருக்கு சீர்மையாவது பெரியாழ்வாரும் ஆண்டாளும் வாழ்வாக வந்து உதித்தவர்களாகையாலே ஊரும் நாடும் செல்வமும் எங்கும் தழைத்திருக்கும்படி, செல்வச் செழுப்பையுடைய ஸ்ரீவில்லிபுத்தூர். அதாவது பொன்னும் மணியும் முத்தும் சேர்ந்தாற்போலே பொன்னடியையுடைய வில்லிபுத்தூருறைவானையும், மணிவல்லி என்னும்படி பெண்களுள் மணியான நாச்சிமாரையும் முத்து பிறக்குமிடமான சேர்த்தியிலே அவதரித்து, முக்தர் போன்ற பெரியாழ்வாரையும் உடையதாயிருக்கையாலே எல்லையற்ற நித்யமான ஸ்ரீயை உடையதாயிருக்கை.

(வேயர்கோன் பட்டர்பிரான் மேதினியில் வாழியே) –வேயர்கோன் – வைதிகர்களுக்குத் தலைவர் பெரியாழ்வார். பட்டர் பிரான் – பிராம்மணர்களுக்கு உதவி செய்தவரானவர். பகவத் விஷயத்தில் மங்களாசாசனம் பண்ணுகையே வேத தாத்பர்யம் என்று அறிந்து கைக்கொள்ளவல்லவராகையாலே, அதன் கருத்தை எல்லாருக்கும் உதவுமவர். பட்டர்களுக்கு வித்யாப்ரதாநம் பண்ணின உதவியாளர். *''மறை நான்கு முன்னோதிய பட்டனை''* (பெரிய.திரு.7.3.6) என்று திருமங்கை ஆழ்வார் அருளியபடி ஸாந்தீபநீயோடே விருப்பத்தோடு நாலு வேதத்தையும் கற்ற பண்டிதனான கண்ணனுக்கு (ஆண்டாளை) கந்யகா ப்ரதாநம் பண்ணின உதவியாளர் பெரியாழ்வார் என்று அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருப்பாவையில் *''பட்டர் பிரான்''* (30) என்பதற்குச் சேர அருளியது காண்க. மேதினி – வடசொல். திருமால் மதுகைடபர்களைக் கொல்லும்போது அவர்கள் உடலிலிருந்த மேதஸ்ஸு (கொழுப்பு) பட்டதன் காரணத்தால் பூமிக்கு மேதினீ என்று பெயர்.

பெரியாழ்வாருக்கு பல்லாண்டு பாடுவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

# திருக்குறுந்தாண்டகத்தின் ஸாரம்

டாக்டர்.கே.கே.ஏ. ரங்கராஜன் ஸ்வாமி, திருப்பதி.

### சுயமுயற்சியைக் கைவிடுதல் :

ஆவியை அரங்கமாலை என்னும் பாசுரத்தில் உலகங்களுக்கெல்லாம் ஒருயிரானவனை நித்யசூரிகள் நித்யமும் அனுஸந்திக்கும் "நமோ நாராயணா யவென்று" (திருப்பல் 4,12) பல்லாண்டு பாடும் திருநாமத்தை அழுக்குடம் பெச்சில் வாயால் தூய்மையற்ற நான் சொன்னதோடல்லாமல் நானும் சொன் னேன் நமருமுரைமின்" (பெரிய திரு 6.10.6) என்று என்னைச் சேர்ந்தவர்களை யும் சொல்லவைத்த பாவி என்று அலமாந்து கொள்கிறார் ஆழ்வார். அரங்கன் தாரகனாயிருப்பவன் கண்ணுகிகினியனாயிருந்து "மாசுச:" என்று சொல்லி தன் வடிவழகைக் காட்டி *''அஞ்சாதிருக் கவருள்''* மூன்றாம் திரு.வ.18) என்று சொல்லி ஆழ்வாரின் கண்ணுக்குள்ளே தோன்றினானாம். இதனால் சுயமுயற்சியைக் (ஸ்வயத்நமறுகை) கைவிடும்படி ஆயிற்று என்றபடி. இவர் (ஆழ்வார்) கண் செம்பளித்துப் பார்க்கிறதெப்போதோ? என்று பார்த்திருந் தான் போலே காணும் அவனும் (எம்பெருமான்) என்பது பெரிய வாச்சான் பிள்ளையின் கருத்து கண்செம்பளிக்கைப் – ஸ்வயத்நமறுகை என்பது அரும்பதவுரை.

### அகடிதகடனா ஸாமர்த்யம் :

*''பாபாநாம்''* (ஸ்ரீராமா.யுத்.44) என்னுமாபோலே ஸகஜமாயும் ஸ்வாபா விகமாயும் தான் செய்த பாவங்களனைத்தும் நன்குத் தீயினால் காய்ந்த இரும்பானது நீரை உட்கொண்டு அந்த இரும்பானது குளிர்ந்து மீண்டும் நீரை வெளிக்கொணர்வது போல் தன்னுடைய பாவங்கள் தன்னை விட்டு அகன்றன என்று *''இரும்பனன்றுண்ட நீரும்''* என்னும் பாசுரத்தால் உணர்ந்ததாகச் சொல் கிறார். இதற்குக் காரணம் எம்பெருமானின் கண்ணாலே தின்னும் கரும்பு அவனைத் தான் மகிழ்ச்சி கொள்ளாத கண்கள் இப்போது *''அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''* (அமலனாதி,10) என்னும்படியாயிற்று என்கிறார்.

### ஆழ்வாரின் அலமாப்பு :

காவியை வென்ற கண்ணார் என்னும் பாசுரத்தில் ஆழ்வார் தாம் பெண்டி ரின் கலவியையே கருதி *''பழுதே பல பகலும் போயின''* (முதல் திருவ.16) என்று தான் செய்த பாவத்தை நினைந்து இழந்த நாளைக்கு துக்கங் கொண்டாடுகிறார். *''தூவிசேரன்னமன்னும்''* என்னும் தொடரால் அன்னப் பறவை போலுள்ள பெரியாழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார் முதலானோர் எழுந்தருளியுள்ள தேசத்தில் தான் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய நினையாது அந்த நினையாமையின் பயனே பாவியேனாக ஆக்கியது என் கிறார். *''தீயதும் நல்லதும் கார்யகாரண பாவத்தாலேயிறே வருவது''* என்பது பெரிய வாச்சான் பிள்ளையின் பேருரை.

### சேஷ சேஷி பாவம் :

பகவானுக்குத் திருமஞ்சனம் செய்வது, பூவாலே அலங்கரிப்பது முதலிய கைங்கர்யத்தாலே கண்ணனை மகிழ்வித்தாள் யசோதைப் பிராட்டி. அவள் பாவனையிலே பெரியாழ் வார் *''பாதிரிப் பூச் சூட்டவாராய்'', கருமுகப்பூச் சூட்டவாராய்''* என்று கைங்கர்யம் செய்வதை அனு ஸந்தித்த பாங்கிலே திருமங் கையாழ்வாரும் கைங்கர்யம் செய்ய ஆசையுற்று மானசீகமாகத் திருமஞ்சனம் செய்து மகிழ்கிறார். ஆழ்வார் *''முன்பொலா விராவ ணன்தன்''* என்னும் பாசுரத்தாலே அனுமான் செய்த கைங்கர்யத்தை நினைக்கிறார். அதாவது *''இத்தகை யாலடையாளம் ஈதவன் கை மோதிரமே''* (பெரியாழ். 3.10.8) என் கிறபடியே ஸ்ரீராமனுடைய மோதி ரத்தை அசோக வனத்திலிருக்கும் ஸீதாப்பிராட்டிக்குக் கொடுத்து அவளுடைய நலன்களைக் கேட் டுக் கொண்டு வந்து பிராட்டியினு டைய கணையாழியைப் பெற்று, தன் வாலில் வைத்த தீயால் இலங் கையைக் கொளித்து விட்டு, மீண் டும் ஸ்ரீராமனை அடைந்து *''கண் டேன் சீதையை''* என்று சொல்லி அந்தக் கணையாழியைக் கொடுத்தபோது ஸ்ரீராமான் ஆநந்தக் கடலில் மூழ்கினான்.



அதைக் கண்ட சிறிய திருவடி அன்பென்னும் மனத்தால், ஞானமென்னும் பரிமளம் நிறைந்த நீரால் மானசீகமாக ஸ்ரீராமனை நீராட்டிய சிறிய திருவடியை நினைவு கூறுகிறார். இத்தால் தலைவனுக்கு அடியார் செய்ய வேண்டிய கைங்கர்யத்தை மனமுவந்து செய்ய வேண்டும் என்றபடி. *"சேஷ சேஷி முறையிலே அடிமை செய்கை"* என்பது அரும்பதவுரை.

## அவதாரங்கள் :

*"மாய மான் செற்று"* என்னும் பாடலில் நான்கு அவதாரங்களை அனுபவிக்கிறார். அதாவது மாய மானாக வந்த மாரீசனை நசிப்பித்த ஸ்ரீராமனின் அவதாரத்தையும், *"மறுதிற நடந்து"* என்பதாலே யாசோதைப் பிராட்டிக் கண்ணனை உரலில் கட்டியபோது அவ்வுரலோடு இழுத்து வந்து இரு மருத மரங்களிடையே சென்று குபேர புத்திரர்களின் சாபத்தை நீக்கிய கிருஷ்ணாவதாரத்தையும் *"வையம் தாய்"* என்பதாலே *"அம்மா பரவை பொங்கத் தடவரை திரித்து வானோர்க்கீயும்"* என்பதாலே கூர்மாவதாரத்தையும் அனுபவிக்கிறார் ஆழ்வார். "வையம் தாய்" என்னும் சொல்லைத் "தாவி" என்பதாகக் கொண்டு *"பாயோரடி வைத்தன் கீழ்ப் பரவ நிலமெல்லாம் தாய்"* (திருவாய். 6.9.6) என்று வையமெல்லாம் வியாபித்து அளந்து கொண்ட திருவிக்கிரமாவதாரத்தையும், *"அம்மா பரவை பொங்கத் தடவரை திரித்து"* என்னுமதாலே மிகப் பெரிய கடலிலே புகுந்து வானவர்களுக்கு அமுதம் கடைந்தளித்த கூர்மாவதாரத்தையும் நினைக்கிறார். அநஸூயை பிராட்டிக்கு சூட்டினாற்போலே என்பதைச் *"சூட்டுவன் தொண்டனேனே"* என்னும் தொடரால் குறிப்பிடுகிறார் பெரியாவாச்சான் பிள்ளை.

## மோக்ஷம் :

எம்பெருமானின் பெருமையைப் பேசி அடியார்கள் உய்ந்து போகிறார்கள். *"கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும், சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன் திருவடி தாட்பாலடைந்த"* (திருவாய்.1.7.3), சிசுபாலன் மோக்ஷம் பெற்றான் என்று *"பேசினார் பிறவி நீத்தார்"* என்னும் பாடலாலே. *"ப்ரதிபவ பராத்துர் முக்த ஸாயுஜ்ய தோ பூ:"* (ஸ்தோ.ரத்.63) என்கிறார் ஆளவந்தார். அதாவது ஆச்ரயித்தார் பெறும் பேற்றைக் கொடுத்தது என்றபடி ஸாயுஜ்யம் = ஸமானகுண யோகம் என்பது. "என்பது இவ்வுலகின் வண்ணம்" என்பதற்கு *"எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லையென்றே"* (திருவாய்.4.10.6) என்னும் தொடருக்கு *"ந நந்திகம் கர்ம ததஸ்தி லோகே"* (ஸ்தா.ர.23) என்னும் ச்லோகத்தை எடுத்துக்காட்டுகிறார் பெரியவாச்சான் பிள்ளை. அதாவது நன்மைகளை உண்டாக்கிப் புருஷார்த்ததையும் தருவதாக பகவதபிப்ராயமாக ஆளவந்தார் ஸ்ரீஸூக்தி காண்கிறது. *"நாட்டையழியாமைக்காக, சிசுபாலனைக் கொற்றவன் கழற்றியடிதானித்தனை; ருசி முன்னாகப் பெறுவதிறே பேறாவது"* என்னும் ஆளவந்தார் நிர்வாஹமும் நினைகிற்பாலது. *"பேசினேன் என்னும் சொல்லுக்கு உண்ணப்புக்கு மயிர்பட்டு அழகிதாக உண்டேன் என்னுமாபோலே"* என்கிறார் உரைகாரர். அதாவது ஏளனமாகச் சொல்வதாம். ஏசிப் பெறும் மோக்ஷம் வேண்டா என்பது ஆழ்வாரின் திருவுள்ளம்.

## வெறிதே அருள் செய்தல் :

*"மாய மான் செற்று"* என்னும் பாசுரத்தால் துக்கமாய், அதற்குக் காரணமான அவித்யா, ஞானமின்மை, அஸ்மிதா (அஹங்காரம்), ராகம் (பொறாமை), த்வேஷம் (பகை), அபிநிவேஷம் (மரணபயம்) இவை ஐந்தையும் விட வேண்டும் என்கிறார் ஆழ்வார். தன் சிந்தையை ஒரு நிலைப்படுத்திக் கண்ணின் மேல் இமையைக் கீழ் இமையோடு சேர்த்து மூக்கின் நுனியை பார்த்து கொண்டிருக்கும் நிலையை *"முன்னிமையயைக் கூட்டி"* என்னும் தொடரால் தெரிவிக்கிறார் ஆழ்வார். பக்தியாலே அவனைத் துதித்தாலும் அவன் நிர்ஹேதுகமாக (வெறிதே அருள் செய்வது) அனுக்ரஹித்தாலல்லது எம்பெருமானைக் காண முடியாது. *"தோன்றலும் சுடர்விட்டு ஆங்கே"* என்பதற்கு கஜேந்திராழ்வானின் கதையைக் காஞ்சி ஸ்வாமி எடுத்தாளுகிறார். *"மெய்ம்மையே காண்கிற்பாரே"* என்னும் தொடரால் ஸர்வேச்வரனைக் காணமுடியாது என்று சொல்லி யோக சாஸ்த்ரத்தில் சொல்லுகிறபடியே உபாஸித்துக் காண்பார்க்குக் காணலாம் என்று இரண்டாம் கூற்றாகப் பெரியவாச்சான் பிள்ளைத் தெரிவிக்கிறார்.

## உய்யும் வகை :

*"பிண்டியார் மண்டையேந்தி"* என்னும் பாடலில், எம்பெருமான் உகந்தருளின திருப்பதிகளிலே மனதை ஊன்றினவர்களைத் தவிர மற்றவர்கள் உய்ய வழியில்லை என்கிறார் ஆழ்வார். திவ்ய தேசானுபவமே காலக்ஷேபமாக இருப்பவர்க்கு எம்பெருமானுடைய அனுக்ரஹம் எல்லையில்லாது அமையும் என்பது கருத்து என்பர் காஞ்சி ஸ்வாமி.

## பயன் :

கலியன் அருளிச் செய்த இனிய இருபது தமிழ்ப் பாசுரங்களையும் அநந்ய ப்ரோயஜநராய் கற்க வல்லர்கள் தெளிவிசும்பான பரமபதத்தை ஆளப்பெறுவர்கள் என்று பயனைச் சொல்லித் தலைக்கட்டுகிறார் ஆழ்வார்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

முற்றும்...




# 108 திவ்யதேச வைபவம்

# திருவெள்ளக்குளம் [அண்ணன் கோயில்]

– திரு. உருபட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

சூரிய வம்சத்து அரசன் துந்துமாறன். நீண்ட நாட்க ளாக குழந்தைப் பேறு இல்லாமலிருந்து, பிறகு ஒரு ஆண் குழந்தையைப் பெற்றான். குழந்தை வெளுப்பாக இருந்ததால் ச்வேதன் எனப் பெயரிட்டான். குரு வசிஷ்டர், இக்குழந்தையின் பிறந்த நேரம், அங்க அமைப்பு இவைகளை ஆராய்ந்து, குழந்தை ஒன்பதாம் வயதிலேயே மரணம் அடையும் என்றும், திருவெள்ளக்குளம் சென்று வழிபடுமாறும், தானும் அங்கு வருவதாகவும் சொன்னார்.

அரசன், மனைவியுடனும் குழந்தையுடனும் பல இடங்களுக்குத் தீர்த்த யாத்திரையாகச் சென்று, திருவெள்ளக்குளம் வந்து சேர்ந்தான். ச்வேதன், குழந்தைப் பருவம் நீங்கி, சிறுவனாக ஆன பருவம். அவனை இங்குள்ள புஷ்கரணியில் நீராடச் செய்து, கோயிலுக்கு வந்து பகவானைப் பணியும்போது, அங்கு இருந்த முனிவர்கள் எல்லாரும் கோவிலுக்கு வந்தார்கள்.

அவர்களில் ஒருவர் மருத்து மாமுனிவர். அவர் ந்ருஸிம்ம மந்திரத்தை சிறுவனுக்கு உபதேசிக்க, அவன், ஐப்பசி சுக்ல தசமி முதல், கார்த்திகை கைசிக ஏகாதசி முடிய எண்ணாயிரம் முறை ஜபித்தான். பகவான், சிறுவன் முன்பு தோன்றி, நீண்ட ஆயுளை அவனுக்கு அளித்தார்.

குமுத மலரைத் தாங்கி நின்ற குமுதவல்லி, நீலன் என்கிற திருமங்கை மன்னனை மணந்து, வைஷ்ணவனாக மாற்றி, பகவானுக்குத் தொண்டனாக ஆக்கிய இடம்.

| | | |
|---|---|---|
| **பெருமாள்** | – | ஸ்ரீநிவாஸன், கண்ணன், நாராயணன், அண்ணன் பெருமாள் – கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம். |
| **தாயார்** | – | பத்மாவதி, அலர்மேல்மங்கை, பூவார் திருமகள். |
| **தீர்த்தம்** | – | ச்வேத புஷ்கரணி. |
| **விமானம்** | – | தத்வரசித விமானம். |
| **ப்ரத்யக்ஷம்** | – | இக்ஷ்வாகு மன்னர், ருத்ரன். |
| **ஆகமம்** | – | பாஞ்சராத்ரம். |
| **மங்களாசாஸனம்** | – | திருமங்கை ஆழ்வார் |

**சிறப்புகள் :**

இதைத் தென் திருப்பதி என்றும், திருமலையப்பனுக்கு, அர்ச்சாவதார நிலையில் அண்ணன் என்றும் சொல்வர். திருமலையில் தான் இருக்கத் தாயாரை மலை அடிவாரத்தில் இருக்கச் செய்த ஸ்ரீநிவாஸன், இங்கு தாயாருடன் சேர்ந்து விளங்குகிறான்.

திருவேங்கடத்தானையும் விஞ்சிய அருட்பெருக்கு இங்கே என்பர். குமுத வல்லி நாச்சியார் இந்த புஷ்கரணியில்தான் தோன்றியதாகவும், ஸ்ரீமணவாள மாமுநிகளுக்கு இந்த எம்பெருமான், இந்தப் புஷ்கரணியில்தான் காட்சி தந்து அருளியதாகவும் கூறுவர்.

### த்யான ச்லோகம்

*"ஶ்ரீமச் ச்வேதஸர: புறேது பகவாந் நாராயணோ நாமித:*
*பத்மஸ்தா தயிதா ச தத்வரசிதம் தத்வ்யோமயாநோத்தமம்l*
*தீர்த்தம் ச்வேத ஸரஸ் ஸுராதிப திசம் ஸம்வீக்ஷ*
*மாணோநிசம்,*
*ச்வேதாக்யே நகராதிபேநச புரா ஸாக்ஷாத்க்ருதோ*
*ராஜதே||"*

-------

### பாசுரம்

*"கண்ணார் கடல்போல் திருமேனி கரியாய்!*
*நண்ணார் முனை வென்றி கொள்வார் மன்னு நாங்கூர்*
*திண்ணார் மதிள்சூழ் திருவெள்ளக் குளத்துள்*
*அண்ணா! அடியேன் இடரைக் களையாயே!"*

-------

*"நான் அடிமை செய்ய விடாய் நான் ஆனேன்;*
*தான் அடிமை கொள்ள விடாய்தான் ஆனான்;*
*ஆனதற்பின்*
*வெள்ளக் குளத்தே விடாய் இருவரும் தணிந்தோம்*
*உள்ளக்குளத்தேனை ஒத்து."*

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

### நாமாக்கள்

341. *ஓம் ஸௌரவே நம:*
(சூரன் என்னும் வாசுதேவனின் புதல்வனே)
*ஓம் ஸுமத்யமாயை நம:*
(அழகிய இடுப்பை உடையவளே)

342. *ஓம் ஜநேச்வராய நம:*
(ஜனங்களுக்கு ஈஸ்வரனே)
*ஓம் ப்ருதுச்ரோண்யை நம:*
(பருத்த பின்பாகத்தை உடையவளே)

343. *ஓம் அனுகூலாய நம:*
(பக்தர்களுக்கு வசமாக இருப்பவனே)
*ஓம் ஸௌம்யமுக்யை நம:*
(மதிமுக மடந்தையே – சந்த்ர முகீ)

344. *ஓம் ஸதா வர்த்தாய நம:*
(சுழல் கொண்ட நதி போல, பெருகும் ஐச்வர்யம் உள்ளவனே)
*ஓம் ஸுபகாய நம:*
(சௌபாக்யம் நிறைந்தவளே)

345. *ஓம் பத்மினே நம:*
(கரத்தில் லீலா அரவிந்தத்தை உடையவனே)
*ஓம் விஷ்டரஸ்ருத்யை நம:*
(தூய்மையானவள் என்பதைக் காட்ட வேதங்களை ஆதாரமாக உடையவளே)

346. *ஓம் பத்ம நிபேக்ஷநாய நம:*
(தாமரைபோல் மலர்ந்த திருக்கண் கடாக்ஷம் நிறைந்தவனே)
*ஓம் ஸ்மிதாநநாயை நம:*
(மந்தஹாசமான திருமுகத்தை உடையவளே)

347. *ஓம் பத்மநாபாய நம:*
(தாமரையைத் தாங்கும் நாபியை உடையவனே)
*ஓம் சாருகத்யை நம:*
(முத்துப் போன்ற அழகிய பற்களை உடையவளே)

348. *ஓம் அரவிந்தாக்ஷாய நம:*
(தாமரை மலர் போன்ற கண்களை உடையவனே)
*ஓம் நிம்நநாப்யை நம:*
(அழுந்திய திருநாபியை உடையவளே)

349. *ஓம் பத்மகர்ப்பாய நம:*
(உள்ளத்தாமரையில் உபாசிக்கப்படுபவனே)
*ஓம் மஹாஸ்தந்யை நம:*
(அனைத்து உலகுக்கும் ஞானப்பாலை அளிக்கும் பெருத்த திருமார்பை உடையவளே)

350. *ஓம் ச்ரீரப்ருதே நம:*
(ஜீவாத்மாக்களின் சரீரங்களைக் காப்பவனே)
*ஓம் ஸ்நிக்தவேண்யை நம:*
(பளபளப்பான மைவண்ண கேசபாசமுள்ளவளே)

*ஶ்ரீமதே பத்மாவதீநாயிகா ஸமேத*
*ஶ்ரீ ஶ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:*

**திவ்ய தேச வைபவம் வளரும்...**






# இளைஞர்களுக்குத் தேவையானது சாத்வீக சுகமே!

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்.

ஒவ்வொரு உயிரினமும் மகிழ்ச்சியோடு இருத்தல் வேண்டும் என்றே எண்ணும். மானிடர்களுக்கும், விலங்குகளுக்கும் வேற்றுமை என்னவெனில் எவ்வித மான மகிழ்ச்சி வேண்டும் என்பதனை மானிடர் நிர்ணயித்துக் கொள்வர். ஆனால் விலங்குகள் நிர்ணயித்துக் கொள்ளாது. இதற்கு காரணம் அவற்றிற்கு புத்தியை உபயோகிக்கத் தெரியாது எனலாம். கீதாசார்யரும் பகவத் கீதையில் அமைதி இல்லையெனில் மகிழ்ச்சி உண்டாகாது என்கிறார். அதாவது மகிழ்ச்சியை விரும்புவோர் முதலில் அமைதியைப் பெற முயற்சித்தல் வேண்டும். அமைதியாக இருக்கும்பொழுது தான் மனிதன் தான் எண்ணியதை சாதிக்கின்றான். அதாவது அமைதியில் தான் வெற்றி சாத்தியமாகிறது. வெற்றி பெற்றவன் தான் நிச்சயமாக மகிழ்ச்சியை அடைகிறான்.

சீதையைத் தேட முற்பட்ட வானரர்களில் அனுமனும் ஒருவர். தன்னுடைய வலிமை என்னவென்று அறியாத அனுமனை ஜாம்பவானும், இதர வானரங்களும் அவருடைய வலிமையை கூறி உற்சாகப்படுத்தினர். அப்பொழுது அனுமனின் இதயமும் ஆனந்தத்தில் அமைதியானது. அந்த அமைதி மயமான நேரத்தில் தான் இன்று நிச்சயமாக சீதாதேவியை கண்டு தகவலை கொண்டு வருவேன் என்று கூறி இலங்கையே நோக்கி தாவி, அனைத்து தடைகளையும் கடந்து, வெற்றியுடன் ஸ்ரீராம பிரானிடம் வந்தடைந்தார்.மனது அமைதியான நிலையில் இருந்தால் மட்டுமே தடைகளையும் எதிர்த்து சென்று அதன் மூலமாக வெற்றியும், வெற்றியின் வாயிலாக மகிழ்ச்சியும் அடையலாம். இந்த மகிழ்ச்சியில் மூன்று வகைகள் உண்டு என்று பகவத்கீதை கூறுகின்றது. கீதையின்படி எவரொருவர் சாத்வீக சுகத்திற்கு முயற்சிக்கின்றனறோ அவர்களுக்கு அனைத்து துன்பங்களும் நீங்கும்.

“ஓ பரதகுலச் செம்மலே! எந்தச் சுகத்தில் சாதகனான மனிதன் பஜனை, தியானம், சேவை முதலிய பயிற்சியினால் இன்புறுகிறானோ, அவன் துன்பத்தின் முடிவையும் அடைவான்” (பகவத்கீதை 18–36). “எது ஆரம்பத்தில் விஷம் போல் தோன்றியதோ, அது இறுதியில் அமிர்தம் போன்றிருக்கும். எது மானிடருக்கு ஆத்ம அநுபூதி செய்ய விழிப்புணர்வை அளிக்கின்றதோ அதுவே சாத்வீகமாகக் கூறப்படுகிறது” (பகவத் கீதை 18–37).

சாத்வீக சுகத்தில் முதன்முதலில் தவமே இருக்கும். தவம் என்றால் விஷத்தைப் போன்று தோன்றும். ஆனால் லட்சயப் பாதையில் இருப்போர் எவ்விதமான உடலலான தவத்திற்கும் தயங்க மாட்டர். ஐந்தாண்டு முதல் பத்தாண்டுகள் வரை தினமும் ஐந்தாறு மணி நேரம் தீவிரமாக பயிற்சி செய்பவருக்கு ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் கிடைக்கும். தங்கப்பதக்கம் பெறும்போது எடுக்கக் கூடிய புகைப்படமானது வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியை அளிக்கும். ஆனந்தத்தை அளிக்கும். அதே போன்று வாயில் வைக்கும்போது கசப்பை அளிக்கக் கூடியவை உடம்பிற்கு நன்மையையளிக்கும். பாகற்காயும், வேப்பிலையும் கசப்பானவையாக இருக்கும். ஆனால் அவை உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்தவையாகும்.



மிட்டாய் வாயில் வைத்தவுடன் ருசியாக இருக்கும். ஆனால் உடம்பிற்கு கேடு விளைவிக்கும். ஆதலால் இளைஞர்கள் எப்பொழுதும் சாத்வீகமான உணவுகளையே உட்கொள்ள வேண்டும். சாத்வீகமான சுகத்தையே விரும்புதல் வேண்டும். சாத்வீக சுகத்தை விரும்பினால் நிச்சயமாக அதனால் கிடைக்கக் கூடியவை அமிர்தத்தைப் போன்றே இருக்கும். சாத்வீக சுகத்தைப் பெற வேண்டுமெனில், அது போன்ற செயல்களையே செய்தல் வேண்டும், அப்பொழுது தான் உடல் ஆரோக்கியமாகவும், மனதும் நன்றாக இருக்கும். புத்தியும் நன்றாக செயல்படும். வெற்றியும் கிடைக்கும். இறுதியில் மகிழ்ச்சியும் நிச்சயமாக உங்களை வசப்படுத்தும்.



பகவத்கீதை தொடரும்...



## புத்தக மதிப்புரை


| | | |
|---|---|---|
| புத்தகத்தின் பெயர் | : | இராமாநுசரின் முப்புரிநூல் மகிமை |
| புத்தகத்தின் ஆசிரியர் | : | டாக்டர். மாடபூசி வரதராஜன் |
| பதிப்பகம் | : | ஸ்ரீஅனந்த் பதிப்பகம், 2019 |
| பக்கங்கள்/விலை | : | 26, விலை ரூ.50/- |
| கிடைக்குமிடம் | : | டாக்டர். மா. வரதராஜன் ஸ்ரீவரதராஜ ப்ளாட்ஸ், எண்.27/8, தெற்கு மாட வீதி, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. |
| தொலைபேசி | : | 044-28440997, கைபேசி : 98418 84972 |

ஆசிரியர் இராமாநுசரின் வாழ்க்கையைப் பற்றி மிகச் சுருக்கமாகத் தெரிவிப்பதற்கு முன் ஸ்ரீகோவிந்த பட்டர் என்னும் ஸ்ரீஎம்பார் இராமாநுசரின் திவ்விய மங்கள விக்ரஹத்தைப் பறை சாற்றும் பாங்கினைப் பார்த்தவுடனே புத்தகத்தைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுகிறது. "முப்புரிநூல்" என்னும் தலைப்பில் ஸ்ரீதாசரதி என்னும் ஸ்ரீமுதலியாண்டான் இராமாநுசரின் வெற்றியைப் பறை சாற்றும் "தாடீபஞ்சகம்" என்னும் தோத்திரத்தின் கண் இருக்கும் நான்காவது சுலோகத்தின் மிக நுண்ணிய பொருளை மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"யக்ஞ" என்னும் சொல்லுக்கு ஸந்தியாவந்தன பாஷ்யத்திலிருந்து விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. "உபவீதி" என்னும் சொல்லுக்கும் வலமாகச் சுற்றியிருக்கும் வஸ்து என்றும் அது விஷ்ணுவைச் சுற்றியிருப்பதால் "யக்ஞோபவீதம்" என்றும் விளக்கம் தந்துள்ளார் ஆசிரியர் (ப.3) "ப்ரஹ்ம ஸூத்ரம்" என்பதனை விளக்கி அதனுடைய முக்கியத்துவத்தையும், அது எதை உணர்த்துகிறது என்பதையும் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. மூன்று புரிகளோடிருக்கும் முடிச்சு வைணவ தத்துவத்தை விளக்குவதாக அமைந்துள்ளது. அதாவது சித், அசித், ஈச்வரன் அறிவுள்ள பொருள், அறிவற்ற பொருள், ஈச்வரன் என்பதே ஆகும். முப்புரிநூல் ப்ரஹ்மசாரிக்கு ஒரு பூணூலும், க்ரஹஸ்தற்கு இரண்டு பூணுலும் அணிந்து கொள்ள வேண்டும் என்பதையும், அதனால் ஏற்படும் பயன் என்ன என்பதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டாமலில்லை (ப.4).

இராமாநுஜர் அணிந்த முப்புரி நூலின் அழகை எம்பார், வடுக நம்பி, வேதாந்த தேசிகர், மணவாள மாமுனிகள் முதலானோர் எடுத்துக் காட்டியுள்ளதை இந்நூலில் காணலாம். "த்ரய்யா மாங்கல்ய ஸூத்ரம்" என்னும் சுலோகத்தால் காயத்ரி மந்திரப் பொருளைப் பற்றி மிக விரிவாக ஆசிரியர் காட்டியுள்ளார் (47) "திவு" என்னும் சொல்லுக்கு ஒன்பது வகையான பொருள் இந்நூலில் காணப்படுகிறது (பக்.8-10). அதைப் போல் "பர்க்க:" என்னும் பதத்திற்கு இரண்டு பொருள் சொல்லப்படுகிறது (ப.10). இதே போல் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் அர்த்த பஞ்சகம், ஸ்ரீபாஷ்யத்தில் அர்த்த பஞ்சகம், பரஸ்வரூபம், உபாய ஸ்வரூபம், ஜீவாத்ம ஸ்வரூபம், பல ஸ்வரூபம், விரோதி ஸ்வரூபம் என்று இவ்வாறு ஒவ்வொரு தலைப்பின் கீழும் விளக்கம் தந்துள்ளமை மிகமிக பாராட்டுக்குரியது. ஆசிரியர் மிகவும் ஈடுபட்டு இந்நூலை இயற்றியது சொல்லற்கரியது. புத்தகத்தின் வடிவமைப்பைத் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் "தானான திருமேனியோடு ஸேவை ஸாதிக்கும் எம்பெருமானார் அலங்கரித்துள்ளார். அச்சுப்பிழையில்லாமல் மிக நேர்த்தியாக புத்தகம் வெளி வந்துள்ளது. ஒவ்வொருவரும் இப்புத்தகத்தைத் தமது இல்லங்களில் வைத்துக் கொண்டு காயத்ரி மந்திரத்தின் பொருளைப் பாராயணம் செய்ய எல்லா நன்மைகளும் உண்டாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

திரு.கே.கே. ஏ. ரங்கராஜன் ஸ்வாமி, திருப்பதி



# ஆயுர் வேதம்

# திப்பிலி



தெலுங்கு மூலம் : டாக்டர். சி. மதுசூதன சர்மா.
: 90007 61390.
தமிழாக்கம் : திருமதி. வி. உஷா.

திப்பிலி ஓர் கொடி வகையைச் சார்ந்த பழங்கள். காய்ந்த திப்பிலி ஆயுர்வேத மருந்துக் கடைகளில் கிடைக்கின்றன. பல நோய் போக்கும் திப்பிலி மிளகை விட அதிகக் காரமும் வெப்பத்தன்மையும் கொண்டது. இதனை ஊஷணா, தீக்ஷ தண்டுலா, கண என்றும் பல பெயர்களால் சம்ஸ்கிருத்தில் அழைக்கின்றனர். ஆங்கிலத்தில் Long Pepper என்றும் கூறுவர். பாபி லியோனேஸி என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்த இந்த திப்பிலியின் அறிவியல் பெயர் Piper Longum. நாம் எதிர்கொள்ளும் பலவித நோய்களுக்கு திப்பிலியின் மூலம் எவ்வாறு தீர்வு காணலாம் என்பதைப் பற்றி இப்பொழுது அறிந்து கொள்ளலாம்.

**தும்மல் நீங்க :**

நாள்தோறும் காலை வெறும் வயிற்றில் ஒரு கிராம் திப்பிலிப் பொடியை 100 மி.லி. வெதுவெதுப்பான நீரில் கலந்து குடித்து வந்தால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து அலர்ஜி குறைந்து தும்மல் வராமல் தடுக்கும்.

**குழந்தைகளின் வயிற்றில் உள்ள புழுக்கள் அழிய :**

நாள்தோறும் 1,2 முறை வயதிற்கு தகுந்தவாறு 3,5 சிட்டிகை திப்பிலி பொடியை தகுந்த அளவு தேனுடன் குழைத்து உட்கொண்டால் வயிறு, குடலில் உள்ள புழுக்கள் அழியும்.

**காய்ச்சல் குறைய :**

50 கிராம் திப்பிலி பொடியை 100 கிராம் வெல்லத்துடன் கலந்து மிருதுவாக பொடி செய்து கொண்டு நாள்தோறும் காலை மாலை வேளையில் 1–2 கிராம் பொடியை ஒரு கப் பாலுடன் சேர்த்து உட்கொண்டால் நல்ல பலன் உண்டாகும்.

**ஜீரண மண்டல உபாதைகளுக்கு (வாயுத்தொல்லை) :**

திப்பிலி, சுக்கு, மிளகு, சீரகம் ஆகியவற்றை நன்கு வறுத்து, பொடி செய்து கொண்டு, ஒவ்வொன்றையும் 25 கிராம் வீதம் எடுத்துக் கொண்டு, அதனுடன் 100 கிராம் உப்பு சேர்த்து, நன்கு கலந்து, நாள்தோறும் காலை உணவு உட்கொள்வதற்கு அரை மணி நேரம் முன் 100 மி.லி. சுடு தண்ணீரில் 1–2 கிராம் பொடி மற்றும் எலுமிச்சை பழ இரசத்தை சேர்த்து குடித்தால் வயிற்று வலி, எரிச்சல் போன்ற செரிமாண உபாதைகள் குறைந்து நல்ல பசி எடுக்கும்.

**மூட்டு வலிகளுக்கு :**

100 கிராம் திப்பிலி, 50 கிராம் சுக்கு பொடி, 150 கிராம் வெல்லம் கலந்து மிருதுவாக இடித்து வைத்துக் கொண்டு இரண்டு வேளை 1–2 கிராம் பொடியை உட்கொண்டால் மூட்டு வலிகள் குறையும். முக்கியமாக அதிக பருமனால் வரும் மூட்டுவலிக்கு அருமருந்தாகும்.

## பிரசவத்திற்கு பின் ஆரோக்கிய மாக இருக்க :

திப்பிலி, சுக்கு, சீரகம் ஒவ்வொன் றையும் 100 கிராம் வீதம் எடுத்துக் கொண்டு, அதனுடன் 100 கிராம் நெய், 200 கிராம் வெல்லப்பொடியையும் சேர்த்து, காலை மாலை வேளைகளில் 2–3 கிராம் பொடியை 100 மி.லி. இளஞ் சூடான பாலில் கலந்து நாள்தோறும் குடித்தால் பிரசவத்திற்கு பின் ஏற்படக் கூடிய உடல் வலி குறையும். வயிற்றுப் பகுதியில் கொழுப்பு சேராமல் தடுக்க லாம். மேலும் தாய்ப்பால் உற்பத்தியும் அதிகரிக்கும்.

## பற்பொடி :

திப்பிலி, சீரகம், சைந்தவலவணப் பொடி ஆகியவற்றை 50 கிராம் வீதம், கலந்து வைத்துக் கொண்டு நாள் தோறும் பற்பொடியாக உபயோகித்தால் ஈறுவலி, பல்வலி, வீக்கம், துர்நாற்றம் ஆகியவை குறையும்.

## ஆஸ்துமா வியாதிக்கு :

திப்பிலி பொடி, வெள்ளை எருக் கம்பூ ஒவ்வொன்றையும் 50 கிராம் வீதம் எடுத்துக்கொண்டு, சாதம் வடித்த கஞ்சி யைக் கொண்டு, மிருதுவாக அரைத்து சுண்டைக்காய் அளவு உருண் டைகள் செய்து, நன்கு ஆற வைத்து, நாள் தோறும் 1 அல்லது 2 முறை ஒரு மாத் திரை வீதம் வெதுவெதுப்பான நீரினால் உட்கொள்ள வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் ஆஸ்துமா வியாதி முழுமையாக குண மடையும்.

## மூச்சு வாங்குதல் :

திப்பிலி, தேவதாரு, சுக்கு ஆகிய பொடிகளை 20 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு, இரண்டு வேளை 1 கிராம் பொடியை 50 மி.லி. இளஞ்சூடான நீரில் கலந்து உட்கொண்டால் உபாதை கள் மற்றும் மூச்சு வாங்குதல் போன் றவை குணமாகும்.

## மூளை பகுதிக்கு இரத்தம் சீராய் செல்ல :

நாள்தோறும் 2 வேளை ஒரு கிராம் திப்பிலி பொடியை தகுந்தளவு தேனுடன் கலந்து உட்கொண்டால் மூளைக்கு இரத்தம் சீராய் சென்று பணி புரியும். அது மட்டுமின்றி நரம்பு தளர்ச்சி, பக்கவாதம் போன்ற நோய் கள் வராமல் தடுக்கும்.

## மாதவிடாய் சீராய் ஏற்பட:

திப்பிலி, சுக்கு, கருப்பு எள்பொடி, வெல்லம் ஆகியவற்றை 25 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு, காலை, மாலை 1–2 கிராம் பொடியை தேன் அல்லது இளஞ்சூடான பாலுடன் கலந்து உட்கொண் டால் வயிற்று வலி, இடுப்பு வலி, உடல் வலி போன்றவை குறைந்து மாதவிடாய் சீராய் ஏற்படும்.

## இஸ்னோபிலியாவிற்கு :

திப்பிலி, புனுவு பொடி ஆகியவற்றை 25 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு, காலை மாலை வேளைகளில் ஒரு கிராம் பொடியை தகுந்த அளவு தேனுடன் கலந்து எடுத்துக் கொண்டால் இரத்தத்தில் பெருகிய இஸ்னோபில்ஸ் குறைந்து அலர்ஜி, தடிப்புகள், இருமல், மூச்சு வாங்குதல் போன்ற உபாதைகள் குறையும்.

ஆயுர்வேதம் வளரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 36க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | வை | 2 யா | று | 3 தி | | | | ம் | | 4 தி |
| ரு | ள் | 5 அ | த | 6 த் | ரு | ட | வி | ர | த | ன் | ரு |
| வே | மா | ட் | வ | | வ | 7 து | ம் | | ர | ப | வ |
| ங் | ரு | ச | ப் | 8 ஸ்ரீ | ர | ங் | க | ம் | வி | கோ | ல் |
| க | பெ | ய | பி | பி | ங் | க | ச | ர | ய | ட | லி |
| ட | ம் | த் | ர | ம் | க | ப | ஞ் | பு | ஸ் | 9 ச | க் |
| வ | 10 ந | தி | கா | ந | த் | த் | ப | ணா | மா | ந் | கே |
| ன் | | ரு | ச | ர் | த | ரா | ஜ | தி | ர் | தி | ணி |
| 11 நா | ர | த | ர் | கூ | மு | 12 வி | ரா | ஸ் | து | ர | |
| | | யை | | ரு | த | து | வ | 13 அ | 20 சா | ன் | |
| 14 கோ | வி | ல | டி | 15 கு | ணா | ர | 16 தே | வி | தே | மி | 19 பூ |
| 17 தி | ரு | க் | கோ | ளூ | ர் | ர் | ளூ | ள் | வ | ரு | 18 தி |



# 2019
# ஆகஸ்ட் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்

| | | | |
|---|---|---|---|
| | யுரேனஸ் | | புதன்(வ) |
| நெப்ட்யூன் | ஆகஸ்ட் - 2019<br>1 – புதன் – வ.நி.<br>3 – புதன் – கடகம்<br>8 – செவ்வாய் – சிம்மம்<br>11 – கு ரு – வ.நி.<br>16 – சுக்ரன் – சிம்மம்<br>17 – சூரியன் – சிம்மம் | | சூரியன்<br>செவ்வாய்<br>சுக்ரன்<br>சந்திரன் |
| | | | |
| ப்ளூட்டோ<br>கேது<br>சனி(வ) | குரு(வ) | | |

**மேஷம்**

ராசி நாயகன் செவ்வாய் சுகஸ்தானத்தில் நீசபங்கம் பெற்றுச் சஞ்சரிக்க இம்மாதம் தொடங்குகிறது. நிலம், மனை வாங்குவதில் ஏற்பட்ட சிக்கல்கள் நீங்கும். சகாயஸ்தானாதிபதி புதன் மற்றும் சூரியனும் செவ்வாயுடன் இணைந்து சஞ்சரிப்பதால் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரப்போகிறது.

**ரிஷபம்**

மூன்றில் உலவிடும் சுக்ரன் இசை, இலக்கியம், சினிமா, நாடகம் போன்ற துறைகளில் புகழ் பெற வைப்பார். பேச்சாற்றலும் கூடும் நேரமிது. குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிகழும். பணவரவு அதிகமாகும். தெய்வ தரிசனமும் கிட்டும்.

**மிதுனம்**

ராசிநாதன் புதன் வக்ர நிவர்த்தி பெற்று இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கிறார். நாவன்மை சிறக்கும். பொருள் வரவு கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். அரசு சம்மந்தமான காரியங்கள் இப்போது நிறைவேறும். இயந்திரப்பணிகள் லாபம் தரும்.

**கடகம்**

ராசியில் சூரியன், செவ்வாயுடன் சந்திரன் இணைகிறார். பெரிய அளவில் பொருள் கிடைக்கவும் புகழ் பெறவும் வாய்ப்பு கூடி வருகிறது. குருவின் பார்வை பலமும் கூடுவதால் திருமணம், வளைகாப்பு போன்ற சுபகாரியங்கள் நடைபெறும். மதிப்பும், அந்தஸ்தும் உயரும். உடல் ஆரோக்கிய பாதிப்புகள் சீராகும்.

**சிம்மம்**

உடல் நலனில் சற்று கவனம் தேவை. குறிப்பாக உணவு விஷயத்தில் மருத்துவர்களின் ஆலோசனைகளை உதாசீனப்படுத்த வேண்டாம். வெளிநாட்டு வியாபாரம் லாபம் ஈட்டித்தரும். ஒரு சிலர் வெளிநாட்டுப் பயணமும் மேற்கொள்வர். வாழ்க்கைத் துணைவரால் நலம் உண்டாகும்.

**கன்னி**

லாபஸ்தானத்தில் ஏற்பட்டுள்ள கூட்டுக் கிரக யோகத்தால் சொல்லாற்றலும், செயல்திறமையும் அதிகரிக்கப் போகிறது. வசதிகளைப் பெருக்கிக் கொள்ள பெரிய மனிதர்கள் துணை நிற்பர். புதன்–சுக்ரன் கூட்டுச் சேர்க்கையால் உத்தியோகத்தில் உயர்வு காண்பீர்கள். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்.

**துலாம்**

முதலிரண்டு வாரம் வரையில் சுக்ரன் தொழில் வீட்டில் சஞ்சாரம் மேற்கொள்கிறார். தொழிலில் மேன்மையும், வளர்ச்சியும் ஏற்படும். கலைத்துறையினருக்கு வெற்றி வந்து சேரும். கணிதத் துறையைச் சேர்ந்தவர்கள், ஏஜென்ஸி நடத்துபவர், தரகர்கள் ஆகியோருக்கு முன்னேற்றமான பாதைத் தெரிய வரும்.

**விருச்சிகம்**

ராசி நாயகன் செவ்வாய் சந்திரன் மற்றும் சூரியனுடன் இணைந்து பாக்கியஸ்தானத்தில் உலவிடுகிறார். ஆன்மீகப் பெரியோர்களின் தொடர்பு ஏற்படும். இனிமையும், மேன்மையும், திறமையும் உடைய பேச்சாளர் எனப் போற்றப்படுவீர்கள். தந்தை வழி சொத்து, பணம் பெறும் யோகம் உண்டு.

**தனுசு**

எட்டாமிடத்தில் நான்கு கிரகங்கள் ஒன்று சேர்ந்து உலவுகின்றன. தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. புது முயற்சிகள் இம்மாதம் தள்ளிப்போடுவது நல்லது. பயணங்களின் போது சற்று கூடுதல் பாதுகாப்புடன் பயணிப்பது நல்லது. மூத்த உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்ல வேண்டும்.

**மகரம்**

ராசி நாதன் பன்னிரண்டாமிடத்தில் உலவிடினும், புதன், சுக்ரன் ஆகிய நட்பு கிரகங்கள் ராசியை நோக்குவதால், மாணவர்களுக்கு நினைவாற்றலும், அறிவாற்றலும் கூடும் நேரமிது. போட்டித் தேர்வுகளில் சிறப்பான தேர்ச்சியினைப் பெறுவர். மறுமணத்திற்குக் காத்திருப்பவர்களின் எண்ணம் நிறைவேறும்.

**கும்பம்**

பத்தாம் வீட்டில் குரு அமர்ந்து நான்கு மற்றும் ஆறாம் வீட்டை நோக்குகிறார். வீடு, வாகன செளக்கியம் அதிகரிக்கும். நோயிலிருந்து முற்றிலும் நிவாரணம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியான காரியங்கள் நிகழும். கலைத்துறையினருக்கு வரவேற்பு கூடும். அரசுப்பணியாளர்களது நிலை உயரும்.

**மீனம்**

உங்கள் ராசிக்கு ஐந்தில் நான்கு கிரகங்கள் உலவிடுவதும், அக்கோள்களை குரு நோக்குவதும் மிகவும் சிறப்பானது. கல்வி நிறுவனங்களில் பணியாற்றுவோர், கப்பல், படகு போன்ற துறைகளில் உள்ளவர்களுக்கும் திருப்தியான சூழ்நிலை நிலவி வரும். உடன் பிறந்தவரால் நலம் உண்டாகும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________
________________

மாவட்டம் &பின்கோடு எண் __________ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2.தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3.வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4.சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5.செலுத்திய தொகை :

6.செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: சந்தாதாரர் கையொப்பம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Edited and Published on behalf of T.T.Devasthanams by **Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.

ஆந்திர மாநில தலைநகர் அமராவதியில் தி.தி.தேவஸ்தானத்தாரின்
ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமி புதிய ஆலயத்தில் பிரதிஷ்டை
செய்ய ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமி மூல மூர்த்தி விக்ரஹ
உருவாக்கத்தை (04-07-2019) முன்னிட்டு
சிலை பூஜை திருக்காட்சிகள்

இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே.ஆகமசாஸ்திர ஆலோசகர்கள், பண்டிதர்கள், அர்ச்சகர்கள், அதிகாரிகள், சிற்பிகள் மற்றும் பக்தர்கள் பங்கு கொண்டனர்.


















SAPTHAGIRI
(TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by
Tirumala Tirupati Devasthanams 25-07-2019
Regd. with the Registrar of Newspapers
under "RNI" No.10742,
Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment
No.PMGK/RNP/WPP-04/2018-2020